சரசுவதி மகால் வெளியீடு எண். 108.

# தத்துவ விளக்கம்

(மூலமும் உரையும்)

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

1990 விலை ரூ. 18-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 108.

உ

திருச்சிற்றம்பலம்

# தத்துவ விளக்கம்

## (மூலமும் உரையும்)

*

பதிப்பாசிரியர்:

பண்டித வித்துவான்

**இராம. கோவிந்தசாமி பிள்ளை**

ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்

வெளியிடுபவர் :

**இயக்குநர்,**

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*

1990 (விலை ரூ. 18—00

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | ... | Thattuva Vilakkam |
| Editor | ... | Thiru Erama. Govindasamy Pillai |
| Publisher | ... | Director<br>Sarasvati Mahal Library |
| Publication No. | ... | 108 |
| Language | ... | Tamil |
| Edition | ... | II Edition |
| Date of Publication | ... | Nov. 1990 |
| Paper used | ... | 14·2 Kg. Seshasayee |
| Size of the Book | ... | 21 × 14 cm. |
| Printing Type used | ... | 12 pt. |
| Number of pages | ... | 144 |
| No. of copies | ... | 1000 |
| Price | ... | Rs. 18/-<br>(Rupees Eighteen only) |
| Printer | ... | Sarasvati Mahal Library Press |
| Binding | ... | Card Board |
| Subject | ... | Saivasiddhanta |

உ

# தத்துவ விளக்கப் பொருள் அட்டவணை.

## உள்ளுறை.


| | | |
|---|---|---|
| (1) | முகவுரை | I—VII |
| (2) | தத்துவ விளக்கம் மூலமுமுரையும் | 1—106 |
| (3) | பிற் சேர்க்கை | 107—123 |
| (4) | செய்யுள் முதற் குறிப்பகராதி | 124—127 |
| (5) | திருநந்திதேவர் பதினாறு பேறு | 128—130 |

## சரசுவதி தோத்திரம்.

பழுதகன்ற நால்வகைச்சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை பொழுகியொளி
பெறமுக்கண் மூர்த்திநாவில்
தொழுதகன்ற அன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவிரிச் சுரும்புந்தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தான்
அடிமுடி மேற்கொண்டு வாழ்வாம்

பரஞ்சோதி முனிவர்

*
* *

# முன்னுரை

"தத்துவ விளக்கம்" என்னும் இந்நூல் எமது சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் இடம்பெற்றுள்ள சுவடிகளில் M. 541. I/D. 699 எனும் எண்ணுடையது. சோணாட்டில் உள்ள சீர்காழிப் பதியில் தோன்றிய நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தரின் திருவருள் பெற்ற கண்ணுடை வள்ளலார் என்பவர் இதனை ஐம்பத்தொரு கட்டளைக் கலித்துறைகளாற் பாடினர். இது உண்மைப் பொருள்களின் நிலையான தன்மையினை விளக்கிக் கூறும் சைவசித்தாந்த நூலாகும். இந்நூலினை யூனியன் கவர்ன்மெண்டார் ஆணையின் பேரில், அதன் பொருளுதவியினால் வெளியிட்டுள்ளோம்.

ஏட்டுச் சுவடியினின்றும் பெரிதும் ஆய்ந்து படியெடுத்து, முயற்சியோடு அதற்கு உரைவகுத்துதவிய பதிப்பாசிரியர், எமது சரஸ்வதி மஹால், முன்னைநாள் தமிழாசிரியர், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கட்கும், நூலகத்தின் கண்ணுள்ள சிறந்த நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்துவரும் யூனியன் கவர்ன்மெண்டாருக்கும், இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த தஞ்சை, வெற்றிவேல் அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

தஞ்சை
மகாராஜா சரபோஜியின்
சரஸ்வதி மஹால்
தஞ்சாவூர். 29—11—63.

இங்ஙனம்
O. A. நாராயணஸ்வாமி,
கௌரவக்காரியதரிசி.

தி.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
10—8—90.

**மு. சதாசிவம்,** எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

உ

திருச்சிற்றம்பலம்

# தத்துவ விளக்கம்

(மூலமும், உரையும்.)

## முகவுரை

"கழித்துணையாராம் பிறவி வழித்துக்க நீக்குஞ்
சுருள் சடையெம் பெருமானே தூயதெண்ணீர்
இழிப்பரிய பசு பாசப் பிறப்பை நீக்கும்
என்றுணையே! என்னுடைய பெம்மான்றம்மான்
பழிப்பரிய திருமாலும் அயனுங்காணாப்
பரிதியே! சுருதி முடிக்கணியாய் வாய்த்த
வழித்துணையாம் மழபாடி வயிரத்தூணே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே

என்பது அப்பர் தேவாரம்.

கடலாற் சூழுண்ட இந்நிலவுலகினில் காணப்படும் உயிர்த் தொகுதிகள் இருவகைப்படும். அவை இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளும் ஆகும். நிலையியற் பொருள் தாவரங்களாம். இவை ஓரறிவு உயிர்வகை இருபது நூறாயிர யோனி பேதங்களாகும். ஏனைய அறு வகைப் பிறப்புக்களும் (ஈரறிவு உயிர்முதல் ஐயறிவுடன் கூடிய ஆறறிவு உயிர் அந்தமாக வுள்ளவை), அறுபத்து நான்கு இலக்கம் யோனிபேதங்களாகும். இவற்றுள் ஒன்பது மானுடம் ஆகிய இவ்வொன்பது இலக்கம் யோனி பேதங்களுள் தக்க வின்னதகாதன வின்ன வென்று ஒக்க

வுண்ணும் உயர்வுறும் மக்கட் பிறப்புற்றவர்களுள் வேத ஆகமம் ஆதிய நூல்கள் வழியொழுகும் வகையினர் வைதிக மார்க்கத்தினர் எனப்படுவர். அவருள் ஆகமாதிகள் வழியொழுகுபவர் வைதிக சைவ சமயிகள் எனப்படுவர்.

இந்நெறியின் கணிற்பவர் பத்தி மார்க்கத்தினரும் சைவ மார்க்கத்தினரும் ஆவர். பத்தி மார்க்கத்தினர் முத்திறப்படுவர். அவர்கள் குருபத்தி, இலிங்கபத்தி, சங்கம பத்தியெனும் நெறியின் கண் நின்றொழுகுபவர்; வேதநெறி சைவ நெறிக்கு மேலான நெறியினிற்பவராவர். சைவ நெறியினிற்பவர் நால்வகையர், அவர்கள் தவமார்க்க சன்மார்க்கமாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களில் நின்று அவற்றினைக் கடைப்பிடித்துச் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய பதமும் பரமும் ஆகிய முத்தி நிலையினை எய்துபவராவர்.

இவ்விரு நெறியினர்கட்கும் முத்தியொன்றேயாகும் எனல் நூல்களின் முடிபாகும். மக்கள், மலப்பிணிப் பின் வகையால் விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர் எனப் படுவர். இங்ஙனங் கூறுவது சைவசித்தாந்த நூல்களின் பெற்றிமைத்தாகும்.

உலகினில் தோன்றின மறைவதும் மீண்டும் தோன்றி வரலும் கண்கூடு (பிரத்தியட்சம்) சாதலும பிறத்தலும் ஆக நெறிப்பட்டு வருதலை எவருமறிவர். இங்ஙனம் உயிர்கள் எடுத்த தனுவினை (சரீரத்தை) விடுத்துச் செல்கின்றன. உயிரரார் அழியார், உடலார் அழிவர் என்பது நூல்களின் (சைவ நூல்களின்) முடிபாகும்.

உயிரரார் ஒரு பொருளை வேண்டுதலும் வேண்டாமையும் உடையர். அது காரணமாக உயிர்கட்கு வினையேற் படுகின்றது. இதனால் பிறவித்துயர் ஏற்படா நிற்கும், இவ்விரு நிலையுமற்றவன் இறைவன் ஆம்.

" வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல "

என்பது திருக்குறள்.

" வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய பரம னாகிய இறைவனை வினையின் நீங்கி விளக்கப்படும் அறிவினையுடைய ஆன்மாக்கள் வழிபட்டே முத்தியினை யெய்துதல் வேண்டும். உடலினைப்பற்றி மணிமேகலை யென்னும் காப்பியத்தில்,

" வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலாற் புறத் திடுவது
மூத்து விளிவுடையது தீப்பிணியிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கால்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்க ளியாக்கை யிதுவெனவுணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்.

எனச் சுதமதி யென்னும் மணிமேகலையின் தோழி, சோழன் நலங்கிள்ளியின் மகன் உதயகுமரனுக்குக் கூறியதா கும். இவ்வாறான உடலினை மேற்கொண்ட மக்களுயிர் கள் வந்தவாறு எங்ஙனம் போமாறேது என ஆய முற்படல் வேண்டும்.

உயிரினுக்குக் கூத்தன் எனவும் ஒருபெயருண்டு. இக் கூத்தன் உடலினை விட்டுப் புறப்பட்டால் உடல்நிலை எவ்வாறுளதென்பதனைப் பின்வரும் நாலடியார் பாடலும் அறிவியா நிற்கும்.

" நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுணின்று தொழிலறஉ செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக்கால்.

அங்ஙனம் முற்பட்டபோது தநுகரண புவன போகங்கட்கும், ஆன்மாவிற்கும் ஆன்மாவிற்கு பாசமாகிய பிணிப்புகட்கும், இவ்விரண்டிற்கும்.

இறைவனுக்கும் உள்ள தொடர்பும், மாயையின் நிலையும் அம்மாயையினாலுண்டாகிய நிலையும், அவற்றுள் எம் மாயையினிடத்து இறைவனிலை காணப்படும் என்பதும் அறியலுற விழையும்.

அப்போது. ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம், சிவதத்துவமாகிய முத்தத்துவங்களின் கூறுபாட்டினை அறிய மக்கள் உடலினையெடுத்துத் தக்க நெறியிதுவெனக் கடைப்பிடித்து நிற்கும் உயிர்கள், வேதம், ஆகமம் ஆகிய நூல்களை யாக்கியருளிய விறைவன் திருவருளையடைய முற்படும்.

அதுகாலை எண்குணமுடைய ஈசனை சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய உயிர்கள் அறிய முடியாது. ஆகலின் அவன் நிலையினைச் சுட்டிக்காட்டிடயொரு குரவன் வேண்டும். அக்குரவனை நாடித் தலங்கிடத்தல் வேண்டும்.

அங்ஙனந் தவங்கிடப்பின் முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய இறைவனே மானிடச் சட்டை தாங்கி வந்தருள் புரிவன். அங்ஙனங் குருவானவர் தத்துவநெறியினை விளக்கியருள்வன், அத்தத்துவக் கூறுபாட்டினையுணரின் மெய்ந்நெறியிது பொய்ந்நெறியிதுவென வறிதல் கூடும்.

இத்தத்துவங்களை யறிவிக்க எழுந்த நூல்கள் பலவாகும். வேதாந்த சித்தாந்தக் கட்டளைப் பிரபந்தமும் பலவுள. இதுபற்றி விளக்கங்கூறும் தத்துவப்பிரகாசமும் ஒன்றாகும். சிவப்பிரகாசக் கட்டளை, சித்தாந்தக் கட்டளை, நாநாசீவ வாதக்கட்டளை, திருவாலவாய் கட்டளை முதலியனவாம். தத்துவப் பிரகாசம் எனும் பிரபந்தம் போலத் தத்துவ விளக்கமெனும் இந்நூலும் மிகச்சிறந்ததாகும்.

தத்துவம்-உண்மைப்பொருள், விளக்கம்-விளக்குவது. உண்மையான நிலையுடைய பொருள்களை நன்கு விளக்குவது எனப்போந்த பொருளாகும். இந்நூல் காழிவருக வுண்ணியர் தம் கோவைக் குருவாகக்கொண்ட வள்ளல் பரம்பரையில் வரு வள்ளல் ஒருவராற் செய்தருளிய தென்பது மாத்திரம் தெளியக்கிடக்கின்றது, இந்நூல் ஐம்பத்தொரு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைக் கொண்டது. ஆசாரியர் சீடனுக்கு உபதேசிக்கப்படுவது போலச் செய்யப் பட்டதாகும்- இந்நூல் செய்யுட்களைச் சித்தாந்த சாத்திரங்கட்குரை கண்டார் பலரும் எடுத்தாண்டுள்ளமையால் இதன் சிறப்பும் நன்கு புலனாகின்றது, இத்தன்மைத் தான நூலுக்குரையொன்று வேண்டுமெனு மாணையுண்மையால் அடியேன் சிற்றறிவுக் கெட்டியவரை விசைந்து வரைய நேர்ந்துள்ளது. சாத்திரப் பயிற்சி மீக்கூர்ந்த அநுபவமுடையவர் செயற்பாலதாகுமிது.

இத்தத்துவ விளக்கத்திடைக் கூறப்பட்ட ஒரு செய்யுள் வருமாறு.

" கூறிய மூலப் பகுதியிற் றோன்றும் குணமவைதாம்
தேறிய சாத்திக ராசத தாமத மென்று செப்பும்
ஊறியல் முக்குண மொத்தவை மூன்று முயர்விழிவற் (று
ஏறியக் காற்புத்தி தத்துவமாகு மென்றெண்ணுவரே

என்பதாம்,

இவ்வொரு கட்டளைக் கலித்துறையே, இத்தத்துவ விளக்கத்தை நன்கு தெளிவுபடுத்துகின்றது. இதற்கு விரிவுரையும் நன்கு குறிக்கப்பெற்றுள்ளது. இந்த ஓலைச் சுவடியினை நன்கு துருவியாய்ந்து படியெடுத்தேன். எங்கள் சரசுவதி மகால் நூல் நிலையத்தினின்றும் வெளிப் போந்துலவும் பத்திரிக்கை வாயிலாகவும் வரலாயிற்று.

இப்பெற்றி வாய்ந்த நூல்களை பண்டைக் காலத்தே பனையோலைச் சுவடிகளிற் பதித்தனர் (எழுத்தாணி கொண்டு எழுதி வைத்தனர்) இவற்றினைப் பாதுகாத்தற் பொருட்டு, எழுத்தாணிப் பூச்சியெனும் இராமபாணம் துளைக்காதவாறு மருந்துகளை வைத்தும் புரந்தனர். ஆண்டிற்கு மும்முறையாவது மைபூசியும் காத்தனர். இந் நெறியினையிப்போது கடைப்பிடித்திடாது புல்லெண் ணைப்பூசி வருகின்றனர். இதனாற் சுவடிகள் பழுப்படை கின்றன. இச்சுவடிகளையெல்லாம் ஒருவாறு காகிதத்திற் படியெடுத்தும் ஓருவறாக்கியும் வருகின்றனர். சில சுவடி கள் முறிந்ததும் சிதைந்தும் உள்ளன. இச்சுவடிகளைப் பற்றி யிந்நூல் நிலையத்திலிருந்தும் வெளிப்போந்துள்ள புத்தகப் பட்டியல் (கேட்லாக்கு) தெரிவியா நிற்கும்.

இப்போது வெளிவரும் தத்துவ விளக்கமெனு நூலினை வெளிவர வேண்டுமெனும் ஆணை யூனியன் கவர்ன்மெண்டாரால் கிடைக்கப்பெற்றது. இவ்வாணைக் கொண்டு மூலவோலைபடி கொண்டு பிரதி செய்யப்பெற்று ஒருவாறு உரையும் வரையலாயிற்று. இவற்றினை விரை வில் முற்றுவித்திடல் வேண்டுமெனக் கௌரவக் காரியதரிசி கனம் O. A. நாராயணசாமி ஐயர், பி. ஏ, பி. எல்., அவர் கள் ஊக்குவித்தனர். இவர்களுடைய மொழியபிமானமும் கற்றார் மாட்டுப் பேரன்புடமையும் பெரிதும் பாராட்டற் பாலதாகும். இந்நூலினை அச்சிடும் காலத்து ஒப்பு நோக்குதல், படியெடுத்தல் முதலியன செய்துதவிய திருவளர்செல்வி புலவர் கோ. திலகவதியம்மையார் அவர் கட்குத் திருமுருகன்றிருவருள் முன்னின்றருள்வாராக.

ஒன்றற்கும் பற்றாத நாயேனை யூக்குவித்து இச்செந்நெறியில் ஈடுபடுத்தியருளிய திரு அறம் வளர்த்த நாயகியாரோடமர்ந்தருள் திரு ஐயாற்றுப் பிரமன் திருவடிகளை மனம், மொழி, மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

"சகமலா தடிமையில்லை தானலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக்கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாறனார்க்கே"

என்பது அப்பர் தேவாரம்.

இங்ஙனம்,

திருவையாறு,
15—11—63

பண்டித வித்துவான்.
**இராம. கோவிந்தசாமி பிள்ளை,**
முன்னாட் தமிழ்ப் பேராசிரியர்,

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures. solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S S. M. Library. Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library. preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them. will be printed and published in due course. as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji. has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up ? The Library waits for your answer.

**DIRECTOR,**
Sarasvati Mahal Library, Thanjavur.

உ

திருச்சிற்றம்பலம்

# தத்துவ விளக்கம்

## ( மூலமும் உரையும் )

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

### ( பதி விகாரம் )

கட்டளைக் கலித்துறை

சித்தத்து வந்தெமக் கின்பம்
  படச்சென்னி மேலிருந்தும்
எத்தத்து வங்கட்கு மேலா
  வனவிகு லார்பசு நூல்
கொத்தத்து வந்து குறுகா
  தனகொச்சை மன்னவன் றாள்
இத்தத்து வவ்விளக் கம்பகர்
  வான்பணிந் தேத்துவமே.

இப்பாடல், காழிவரு கவுணியக் கன்றாகிய திருஞான சம்மந்தப் பெருமானைக் காப்பாகக் கொண்டு பாடப் பெற்றதாகும்.

(இ-ள்) எமக்கு இன்பம்பட சித்தத்து வந்து—அடியே மாகிய எங்கட்கு, உள்ளிடமாகிய சித்தத்திடத்துச் சிந்தித்த வண்ணமாக வெழுந்தருளிவந்து, சென்னிமேல் இருந்தும்— அகத்திடத் திருந்ததோடன்றிப் புறத்திடமாகிய உச்சியின்

கண் (தலைமேல்) எழுந்தருளியும், எத்தத்துவங்கட்கும் மேலாவனை—எல்லாத்தத்துவப் பொருள்கட்கும் மேலாந் தன்மை யெய்தியனவும், இகலார் பசுநூல் கொத்தத்து வந்து குறுகாதனை-மாறுபாடுறு சமயமாகிய பகைச்சமயம் கூறுகின்ற பிறந்திறந்து உழலும் கடவுளரை முதல்வராகக் கூறும் பசுநூல் கூட்டத்திடத்துச் சென்று பொருந்தாதன வும் (ஆகிய) கொச்சை மன்னவன் தாள்-கொச்சையெனும் பெயர்பெற்ற நகராகிய சீகாழிப் பதியிடத்துத் திருஅவதா ரம் புரிந்தருளிய திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடிகளானவை, இத்தத்துவ விளக்கம் பகர்வான்—இந்தத் தத்துவ விளக்கமெனும் செந்தமிழ் நூலினைக் கூறும்படி, பணிந்து ஏத்துவம் (ஏ)-மனமொழி மெய்களால் வணங்கித் துதிப்போம் யாம் (எ—று).

நூல்கள்—பாசப் பொருளைப் பகர்வனவும், பசுப் பொருளைப் பகர்வனவும், பதிப்பொருளைப் பகர்வனவும் ஆக மூவகைப்படும். முதனூலாகிய வேதசிவாகமங்களே சாத்திரங்களே பதிநூலாகும். இவைகள் செத்துப் பிறக்குந் தெய்வங்களைப் பரத்துவமாகக் கூறமாட்டாவாம். கொத்து—தொகுதி, குறுகாதன—வந்தடையமாட்டாதன. காழியம் பதிக்குப் பன்னிரு திருப்பெயர்கள் உண்டு.

அவையாவன:— தோணிபுரம், கொச்சை, புறவம், சண்பை, சீகாழி, பிரமபுரம், வேணுபுரம், புகலி, பூந்த ராய், வெங்குரு, சிரபுரம், கழுமலம் என்பனவாம்.

“ பிரமனூர் வேணுபுரம் புகலி
வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம்மன்னும் பூந்தராய் பொன்னஞ்
சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய
முள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்
கழுமலம் நாம் பரவு மூரே. (சம்பந்தர்)

மேடுங் குழியும் விழுந்தேன்
விழுங்க வெழுந் துணையுங்
கூடும் பொழிற்கொச்சை வேந்தன்
குரைகழற் கன்பர்குன் றுங்
காடுங் கடுஞ்சுர முங்கட
லேழுங் கடந்தரிதிற்
றேடும் பொருளினுஞ் சேர்ந்தவுற்
றாரினுஞ் சீரியரே 2

(இ-ள்) மேடும் குழியும் விழுந்தேன்—மேட்டிடத்தும் மேடாகிய உயர்ந்த விடத்தும் பள்ளத்திடத்தும் வீழ்கின்ற தேனானது, விழுங்க—அமிழ்ந்திட, எழும் துணையும்—மேலெழும் அளவும், கூடும்—பொருந்தப்பெறா நின்ற, பொழில் கொச்சை வேந்தன்-வளமிக்க சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பதியின்கண் அவதரித்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான், குரை கழற்கு அன்பர்—பரசமயங்களை வென்ற ஒலிக்கின்ற வீரக்கழலைத் தரித்த திருவடிகட்கு அன்பராயினார்கள் எவர்களோ அவர்கள், குன்றும்-மலையினிடத்தும், காடும்—முல்லை நிலமாகிய காட்டிடத்தும், கடும்சுரமும்—பாலைநிலத்திடத்தும், ஏழ்கடலும்—சப்த சாகரத்திடத்திடத்தும், கடந்து—சென்று, அரிதின் தேடும்—அரும்பாடு பட்டுந் தேடப்பெறும், பொருளினும்—பொருளைக்காட்டிலும், சேர்ந்த உற்றாரினும்—பற்றுக்கோடாகவுள்ள உறவினரைக் காட்டிலும், சீரியர் (ஏ)—சிறப்பினையுடையவராவர், ஏ அசைநிலை. மலைநிலங் கடத்தலும், காட்டிடங் கடத்தலும், பாலைவலங் கடத்தலும், கடலைக் கடத்தலும், அருமையுடைத்தென்பது புலப்படுகின்றது. கடும் சுரம்—பாலைவனம். ஏழ்கடலாவன :— உப்புக்கடல் பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தேன்கடல், நன்னீர்கடல் என்பனவாம்.

பரவுமில் வுலகிலுப்புப் பாறயிர் நெய்யே கன்ன
விரதமா மதுநீராகு மெழுகட லேழுதீவும்
வரன்முறை விரவிச் சூழும்

என்பனவாம். கொச்சை—சீகாழியின் பன்னிரு பெயர்க ளுள் ஒன்று.

சீரார் கயிலைத் திருவாய்
 மலர்ந்த சிவகாமங்கற்
றாராய் வதுவட சொற்பயின்
 றார்க்கெளி தம்மொழியைச்
சாரா தவரருந் தத்துவ
 ஞானத் தலைப்படுதற்
கேரார் தமிழ்ச்செய்யு ளான்மைய
 றீர வெழுதுவனே 3

(இ-ள்) சீர் ஆர் கயிலை திருவாய் மலர்ந்த சிவகாமம் —சிறப்பு வாய்ந்த கயிலாய மலையினிடத்துப் பரமேசுரன் தன் ஐந்து திருமுகங்களிடத்தினின்றும் முனிவரர் தமக்குத் திருவாய் மலர்ந்தருளிய காமிகாதி இருபத்தெட்டாகமங்க ளும், கற்று ஆராய்வது—தேசிகர்பாற் கற்றுணர்ந்து ஆராய்ச்சி புரிவது, வடசொல் பயின்றார்க்கு—வடமொழி யாகிய தேவ பாடையை நன்கு கற்றலைச் செய்தவருக்கு. எளிது—எளிமையினை யுடைத்தாகும். அம்மொழியை சாராதவர்—அம்மொழியினைப் பயிலாதவர்கள், அரும் தத்துவஞானம் தலைப்படுதற்கு—அரிதின் உணரத்தக்க தத்துவ ஞானத்தினைப் பொருந்துதற்கு, ஏர்ஆர் தமிழ்ச் செய்யுளான்—எல்லாரும் எளிதினுரைத் தக்கவாறு அழகு நிறைந்த தமிழ்ப்பாடலான், மையல்தீர—மனமயக்க மொழிய, எழுதுவன்—வரைகுவன். ஏ-அசை நிலை ஆகமம் —முப்பொருளுணர்த்துவனவாம். இவ்வாகம நூல்களைப் பயில்பவர்கள் சிவ தீட்சைபெற்றுச் சிவபூசனை புரியுமவர் களே ஆவர். இங்ஙனம் பயின்றால்தான் சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நிலைகளிற்றலைப்பட்டு மெய் ஞானம் தலைப்படுவர்.

"பண்டை நற் றவத்தாற் றோன்றிற் பரமனைப் பத்தி
பண்ணுய் தொண்டரைத்தானே தாயாகதியினிற் றொகுப்
பன் மார்க்கர் கண்ட நூலோதி வீடு காதலிப்பவர் கட்கே"
தத்துவமாதி விளக்கம் தலைப்படும்-

"பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்"

என்னும் திருமந்திரப் பாடலால் பதினெண் மொழிகளுள்ளும் தலைசிறந்தது தமிழ் மொழியாம். பத்தோடொன்பது பாடை நூல்களும் என்ற பாடல் கொண்டு வடமொழியுஞ் சேர்ந்ததாகும். ஆகவே சிவபெருமானால் அருளிச் செய்யப் பட்ட மொழிகளுள் தலைசிறந்தன இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர் என்பதனால் இரண்டுமேயாம். வடமொழி பயில்வதும் அனைவர்க்கும் எளிதன்று. ஆதலின் ஆகமநூல்கள் வடமொழிக்கண் உள்ளன. ஆதன் வழித்தாக அனைவருக்கும் பயன்படும்படித் தமிழிற் செய்யப்பட்டதிந்நூலாம். மையல்—மயக்கம், தீர-ஒழிய யான் எழுவாய் எழுதுவன் பயனிலை.

எழுமெண தாளை முடித்தற்
குளவெழு தாமறையும்
வழுதிதன் கூனு நிமிர வந்
தாண்டன வையமுய்யக்
கழுமல வாணருந் தேவியுங்
கண்டுதங் கண்களிப்பச்
செழுமலர் வாவிக் கரையினின்
றாடிய சிற்றடியே 4

(இ-ள்) எழுதாமறையும்—ஏட்டில் எழுதப்படாத, இருக்கு, யசுர், சாமம், அதர்வண மாகிய நான்கு வேதங்களும், வழுதிதன் கூனும்—பாண்டியனுடைய கூனலும் நிமிர வந்து ஆண்டன—மேலோங்கி உயருமாறு ஆண்டன (ஆளப் பட்டன) வையம் உய்ய—உலக மக்களெலாம் (உலகத் துயிர்களனைத்தும்) கடைத்தேற, கழுமல வாணரும் தேவி

யும்—திருக்கழுமல நகரின்கண் எழுந்தருளியுள்ள தோணி யப்பரும் திருநிலைநாயகியம்மையும், கண்டு-திருநோக்கஞ் செய்து, தம்கண்களிப்ப—தங்களுடைய கண்களானவை பெருமகிழ்வடையுமாறு, செழுமலர் வாவிகரையின் — செழித்த நல்ல தாமரை மலர்கள் பூத்திருக்கப்பெற்ற பிரம தீர்த்தக் கரையினிடத்து (சிவபாத ஹிருதயராகிய) தந்தையார் நீராடிக்கொண்டிருக்கின்ற ஞான்று, நின்று ஆடிய சிற்றடிஎ—அம்மேயப்பா என்றழுதலைச் செய்துகொண்டு திருவிளையாடல் புரிந்த சிறிய திருவடிகளே, எழும் எனது ஆசை முடித்தற்கு உள—மேலே எழுகின்ற என்னுடைய அவாவினை முற்றுவித்தற்கு உள்ளனவாம் (எ—று)

வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லிய மணரை வாதில் வென்றழித்தமையால் வேதங்கள் நிமிரப் பெற்றன. சமணப் படுகுழியில் வீழ்ந்து மயங்கிக் கிடந்த கூன்பாண்டியனுடைய சுரநோயினைத் திருநீற்றினைப் பூசி நீக்கி கூனினையும் நிமிரப்பண்ணி 'நின்ற சீர் நெடுமாறனார்' ஆக ஆக்கினமையால் இங்ஙனங் கூறப்பட்டதாம். திருஞானசம்பந்தப் பெருமான் குமரனாகலின் சிற்றடி எனப்பட்டது சிறிய அடிகள் பெருமையினைச் செய்ததாகவும் குறிக்கப்பெற்றுள்ளது.

"மண்ணினல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல்லஃதுறுங் கழுமல வளநகர்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

"போதையார் பொற்கிணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே"

என்னுந் தேவாரப் பாடல்களைப் பாட மகிழ்வுற்றனர் அம்மையப்பர் என்பதாம். மதுரைக்கரசியாகிய மங்கையர்க்

கரசியார். தன் கணவனாகிய கூன்பாண்டியனும் ஏனைய மக்களும் சமணப் படுகுழியில் வீழ்ந்திட்டதைக் கண்டு மனம் புழுங்கிப் பட்டத்து மந்திரியாகிய குலச்சிறையாரை வேவி மறைக்காட்டில் அப்பர் பெருமானுடன் எழுந்தருளி யிருந்த திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கழைத்து வந்து சமணரை அனல்வாத புனல்வாதங்களிலும் வென்று பாண்டியனாருடைய சுரநோயினையும் கூனையும் நீக்கி வெல்லுமாறு செய்தனர் என்பது வரலாறு.

சிற்கனன் றன்னிக ரின்றிப்
பரந்தோன் சிதையறியா
வொற்கமில் தோற்றத் துயர்ந்தோ
னுறுதுக ளொன்று மில்லோன்
சொற்கலை ஞாலத்து வித்தாய
வன்றுற வெங்குமில்லோன்
நற்கரு ணாலயன் வாழிதென்
காழி நயந்தவனே. 5

(இ-ள்) சிற்கனன் தன்நிகர் இன்றிப் பரந்தோன்—ஞான அக்கினிமயமானவனும் (தீவண்ணனாம் என்றபடி) தனக்கொப்பாரின்றித் தன் புகழானது எங்கும் பரவப் பெற்றவனும், சிதை அறியா(த) ஒற்கம் இல் தோற்றத்து உயர்ந்தோன்—இழிவாகிய பழிசொற்கள் அறியப்பெறாத வறுமை சிறிதுமில்லாத தோற்றத்தினால் உயர்ந்துள்ளவனும் (மிகவும் மேன்மை வாய்ந்த குலத்துப்பிறந்து உயர்ந்திருப்பவன்) உறுதுகள் ஒன்றும் இல்லோன்—வந்தடையப் பாலனவாகிய குற்றங்கள் ஒரு சிறிதும் (யாதொன்றும்) இல்லாதவனும் சொல்கலை ஞாலத்து வித்து ஆயவன்—பலராலும் புகழ்ந்து கூறப்படுகின்ற வேதக்கலைகட்கு (நூல்கட்கு) — உலகினிடத்து விதையாக உள்ளவனும் (வேதமூலகாரணனும்) துறவு எங்கும் இல்லோன்—துறவு பூண்டொழுகலில் எவ்விடத்தும் இல்லாதவனும் (பற்றில்லாதவனும் பிறராற்பற்றப்படுபவனும் ஆகிய பெருந்துறவியாம்) நல் கருணை ஆலயன்—நல்ல அருளுக்கு இருப்பிட

மாகவுள்ளவனும் (ஆகிய) தென்காழி நயந்தவன் ஏ-அழகிய சீகாழிப் பதியினைத் தனக்கு அவதாரத் தலமாக விரும்பிய ஞானசம்பந்தப்பெருமான், வாழி—இங்ஙனம் பலவற்றானும் பதியியல் முற்றுப்பெற்றவன் உலகம் இன்புறற் பொருட்டு வாழ்வானாக (எ—று)

கனன்—அக்கினிவடிவினன். சித்(து) ஞானம். சிதை—வறுமை (குறைவு). ஒற்கம்—நாணம். துகள்—குற்றம். சொற்கலை — வேதம், அறிவு நூல்களுமாம். துறவு—சந்நியாசம் கருணாலயன் — கிருபாசமுத்திரம் என்றாற்போல, கருணைக்கிருப்பிடமானவன். நயத்தல்—தானே விரும்பம். தென்—அழகு ஏகாரம்—தேற்றம்.

நயந்த பிறப்பொடு நாச
மிலாதது நாடினர் தாம்
வியந்தரு வீடெய்த வீடொன்
றிலாதது மிக்கறிவால்
உயர்ந்த துலகங்க ளாகுந்
தொழில துயர் தரங்கக்
கயந்திகழ்க் காழிப்பி ரானொளி
யாகிய காரணமே. 6

(இ-ள்) உயர் தரங்கம் கயம் திகழ் காழி பிரான் ஒளி ஆகிய காரணம் ஏ-மேலான அலைகள் வீசும் பெற்றியினையுடைய தடாகங்கள் நாற்புறமும் சுற்றி விளங்கப்பெறா நின்ற சீகாழியில் அவதரித்தருளிய பெருமான் ஞான ஒளியாகிய காரணம் எங்ஙனம் ஆகியது என்றால், நயந்த பிறப்பொடு நாசம் இலாதது—விரும்பிய பிறப்புடன் கூட அழிவற்றது,(பிறத்தலும் இறத்தலும் அற்றது) நாடினர் தாம்-விரும்பியடைந்த மெய்யன்பர்கள், வியந்தரு — மேன்மையைத் தரத்தக்க, வீடு எய்த—வீடாகிய மோட்சத்தினையடைய விடு ஒன்று இல்லாதது — தனக்கென விடு ஒன்று இல்லாததாம் (அஃதாவது தானே மோட்ச ரூபமாயிருக்கு

மென்பதாம்) மிக்க அறிவால் உயர்ந்தது—மேம்பட்ட சிவ ஞானத்தினால் மேம்பட்டது. உலகங்கள் ஆகும் தொழிலது—ஈரேழுலகங்கள் ஆகின்ற செயலையுடையது (எ-று)

நல்லூர்ப் பெருமணம் எனும் திருத்தலத்தின்கண் திருஞானசம்பந்தப் பெருமான் திருமணஞ் செய்துகொண்ட ஞான்று உண்டாகிய பெருஞ்சோதியாகிய பேரொளியானது அழிவற்றதும் வீட்டின்பமாயதும் சிவஞானத்தினாற் சிறந்ததும் உலகை சிருட்டிக்கு ஆம் செயலதும் ஆயிற்று எனக் கருத்தாக்கொள்க. கயம்—ஆழமுடைய தடாகம், நாடினர்—விரும்பியடைந்தவர், ஒன்றிலாதது—பொருந்தாதது என்றுமாம்.

காரண மாகிய காழிப்
    பிரானுக் கநா தியிந்தப்
பாரள வாகப் பரக்கும்
    புவனா திகள்படைப்பப்
பேரள வாகுந் தொழிற்பிற
    ழாதக் கருவியதாய்ச்
சீரள வாமனின் றாட்செய்ய
    தாளென் சிரத்தனவே- 7

(இ-ள்) காரணம் ஆகிய காழி பிரானுக்கு—உலக காரணமாகிய சீகாழியிற் றிருவவதாரம் புரிந்தருளிய பெருமானாகிய திருஞானசம்பந்தப் பெருமானுக்கு, அநாதி—அநாதியாகவே, இந்தப்பார் அளவு ஆகபரக்கும்—இந்தப் பூமியெல்லையாகப் பரந்துள்ள, புவனாதிகள் — எல்லாவுலகங்களையும் (பதினான்குலகங்களையும்) படைப்ப—தோற்றுவிக்க பேரளவு ஆகும் தொழில்—தன்பெயருக்கு மாத்திரம் சொல்லப்பெறும் செயலானது. பிறழாத கருவியதாய்—மாறுபாடுறாத காரணமாகி, சீர் அளவாமல்—சீரினையளக்காமல் (பெருமையித்துணைத்தென அளவு செய்யாதவாறு, நின்று ஆள்—நிலைபெற்று ஆட்சிபுரியும்

(ஆளுந்தலைச் செய்யும்) செய்யதாள்—சிவந்த தாமரை போலும் திருவடிகள். என்சிரத்தன (ஏ)—அடியேனுடைய தலைக்கு அணியாக ஆகக் கடவன ஆம் (எ—று)

அநாதி—ஆதியில்லாதது (தொன்றுதொட்டே வருவது) பார்—பூமி, புவனம்—உலகம், படைப்பு—உண்டாக்கல். தொழில்—கிரியை (செயல்) பிறழ்தல்—மாறுபடல், கருவி—காரணம், ஆய்—ஆகி, சீர்—பெருமை, தாள்—பாதங்கள், சிரம்—தலை. ஏ-அசைநிலை. இறைவனுடைய சங்கற்ப விசேடத்தால் படைத்தலாதி தொழில்கள் நடைபெறுகின்றன. அவ்வைற்றிற்குரியனவாக,

தனதுயர் தத்துவந் தான்பாருஞ்
சத்தி கருவியிப்பால்
வினைதரு வையம் பிறந்தும்
விரிந்து மொடுங்குமிந்தச்
சினமலி தத்துவந் தன்னிற்
சிரபுர நாதனுமக்
கனமலி பூண்முலை யுங்கருத்
தாவுங் கருவியுமே,

இப்பாடல் சிரபுரநாதனாகிய கழுமலநாதரும் இறைவியும் என்றும் உலககாரணர் ஆவர் என உரைக்கின்றது. மேற்கண்ட பாடல்கள் இவர்களின் வேறல்லாத திருஞானசம்பந்தப் பெருமானையே சுட்டா நிற்கும். இது கண்டு கொள்க.

(இ—ள்) தனது உயர் தத்துவம் தான்—தன்னுடைய உயரிய தத்துவமானது, பாரும் சத்திகருவி—உலகிற்கும் உலகப் பொருள்களுக்கும் சத்தியாகிய இறைவியே காரணமாம்; (இயங்கியற் பொருளும் இயங்காப் பொருளும் ஆகிய சரமும் அசரமும் ஆம்) இப்பால்—இதன் பின்னர், வினை தருவையம்—நல்வினையும் தீவினையும் ஆகிய இருவினைகட்கும் ஈடாம் உலகமானது, பிறந்தும் விரிந்தும் ஒடுங்கும்—

தோன்றியும் விரிந்து நின்றும் மறையும் (படைப்பு, காப்பு மறைப்பு, எனப்படும் முத்தொழிலும்) இந்த சினம் மலி தத்துவம்—இப்படிப்பட்ட (தீத்தன்மை நிறைந்த) சினமாவது நிறைந்த மெய்ம்மையானது (தத்துவமானது) தன்னின்—எனினும் இப்பொருளில், சிரபுரநாதனும் அனைர்மலி பூண்முலையும்—திருத்தோணியப்பரும் மேலே கூறப்பட்ட அந்தக்கனமாகிய நிறைந்த அணிகலன்களை யணிந்த திருத்தன பாரமுடைய அம்மையும், கருத்தாவும் கருவியும் (ஏ) தலைவனும் (சிருட்டி கருத்தாவும்) சிருட்டிக்குத் துணையாகிய காரணமும் ஆவர் (எ-று) ஏ அசைநிலை.

ஆன்மா (பசு) பாசம் (தளை) இறை (பதி) ஆயவைகள் அநாதி நித்தியம் எனப்படும். வையம்—பூமி, கருத்தா—செய்பவன், கருவி மூவகைப்படும். அவை முதற்கருவி, துணைக் கருவி, நிமித்தக்கருவி என்பனவாம். முதற்கருவி காரியத்தோடொற்றுமை யுடையது. துணைக்கருவி—காரியமுற்றும் வரை துணையாயிருப்பது- நிமித்தக்கருவி, இதனை யுண்டாக்கற்குக் காரணமாகிய தலைவன் ஆம் சத்தி—அக்கினியிற் சூடுபோலப் பிரிவின்றியுள்ளதாகிய வல்லமை.

கருமலி பாசம சேதனக்
கட்டுண்பர் சேதனரென்(று)
இருமையில் வைய மடங்குமென்
றெண்ணுக வித்துணையே
திருமலி யாகமஞ் செப்பிய
வான்பொருள் முற்சிறந்த
இருவரு மேகட்டு வார்விடு
வாருமென் றெய்துமினே. 9

(இ-ள்) கருமலிபாசம் அசேதனம் கட்டுண்பர் சேதனர்—பிறப்பினை யுண்டாக்க நிறைந்த பந்தம் அசேதனம் ஆம் (அசேதனம்—அறியாமை) அச்சேதனத்தாற் பிணியுண்பவரும் (அசேதனர்) சேதனரும் (அறிவுடைமையுடையவர்)

என்று இருமையில் வையம் அடங்கும் என இரண்டன் வகையில் உலகமானது அடங்கிக் கிடக்கும் என்று எண்ணுக —ஏ மாணவகா நீ இங்ஙனம் அடங்கும் என்று கருதியே எண்ணித் துணிவாயாக. இத்துணை ஏ—இவ்வளவின தாகவே, திருமலி ஆகமம் செப்பிய வான் பொருள்—முத்தியாகிய நிறைதிருவினையுடைய சிவாகமங்கள் கூறிய சிறந்த பொருள் (பதிப்பொருள்) ஆம். முன் சிறந்த இருவரும் ஏ—முன்னர்க்கூறிய சேதனரும் அசேதனருமாகிய இருவருமே. கட்டுவார் விடுவாரும்—பாசங்களால் கட்டப் படுவாரும் விடப்பட்டவரும் ஆக என்று எய்துமின் ஏ—என்று அறியக் கடவையாக (எ—று)

கரு—பிறப்பு (உண்டாதல்) பாசம்-பந்தம், (கட்டுவது பிணிப்பது) இருமை—இரண்டு. இத்துணை—இவ்வளவு. வான்பொருள் — அழிவில்லாத நித்தியப்பொருள். திரு= மோட்சம், (கண்டாரால் விரும்பப்படும் தன்மை) ஆகமம்-நூல்கள். எய்துதல்—அடைதல் என்பதாம்.

எய்து பொருளொரு மூன்றும்
பதிபசு பாசமென்றே
மெய்தந்த வாகமங் கூறுமி
வற்றினுள் வெங்குருவாழ்
மைதங்கு கண்டன் பதிபசுவெண்ப
தணுக்கண் மற்றைக்
கைதந்த பாசங்க ளாணவ
மாயையுங் கன்மமுமே. 10

(இ-ள்) எய்துபொருள் ஒருமூன்றும் பதி பசு பாசம் என்று ஏ மெய்தந்த ஆகமம் கூறும்—அடையப்படா நின்ற பொருள்கள் ஒருமூவகையும் பதிப்பொருளும் பசுப்பொருளும் பாசப்பொருளும் எனவே உண்மையுரைத்த சிவகாமங்கள் கூறும் இவற்றினுள்—இம்முப்பொருளுள், வெங்குருவாழ்மைதங்கு கண்டன்பதி—சீகாழிப்பதியே திருக்கோயி

லாக் கொண்டெழுந்தருளி யிருக்கும் கரிய விடம் பொருந்திய கண்டமுடைய சிவபெருமானே பதிப்பொருளாகும். பசு என்பது அணுக்கள்—பசு என்று கூறப்பெறுவது அணுக்களாகும். மற்றைகை தந்தபாசம்—ஏனையவாகிய செயல்களைப்புரியும் பாசங்களானவை, ஆணவம் மாயையும் கன்மமும் ஏ—ஆணவமலமும், மாயாமலமும், கன்மமலமும், ஆயவைகளேயாம (எ-று)

வெங்குரு—சீகாழிக்கொரு திருப்பெயர், பதி பதிவது பசு—கட்டப்பட்டது, பாசம்—கட்டு, மைதங்குகண்டன்—நீலகண்டன். திருப்பாற்கடலைக் கடையத் தேவர்களும் அசுரர்களும் மந்தரகிரியை மத்தாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு சுழற்ற வாசுகியானவன் ஆலகால விடத்தினைக் கக்கினன். கக்கப்பட்ட விடமானது தேவாசுரர்களை வெதுப்பத் தாங்கவொண்ணாது கைலையைத் தஞ்சமடைந்தனர். தஞ்சம் ஏற்றருளிய பரமன் நஞ்சையேற்றுண்டருளிக் கண்டங் கருப்பாயினன். மைதங்கு கண்டத்தைப் பற்றி

"கறைமிடறணியலும் அணிந்தன்று அக்கறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"

எனப் புறப்பாட்டுப் புகலுறும்.

பதியொருவன், "பசுக்கள் எண்ணிறந்தன ஆகலின் அணுக்கள் எனப்பட்டனவாம். பாசங்கள் மூன்றேயாம். ஐந்தெனக் கொள்வதுமுண்டு. கை—செயல் (ஒழுகலுமாம்) மலங்களுக்கு இட்ட பெயர்கள் காரணப்பெயராம்.

கன்மலந் தன்னைக் கனிவிக்குங்
காழிப்பிரான்கருணை
பன்மைப் படுந்தொழி லைந்து
படைப்பு நிலைதொகுத்த(ல்)

இன்மை நிகழ்ந்த வொளிப்புத்
துயர் நின் றெடுத்தலென்ப
வன்மைப் படா நிலை மைப்பெரி
யோனுக்க மைந்தனவே 11

(இ-ள்) கல்மனம் தன்னை கனிவிக்கும் காழிப்பிரான் —கருங்கல்லையொத்த இளகாத வலிய மனத்தினையும் கனியும்படிச் செய்யும் (இளகும்படி) சீகாழிப்பதியிற் றிருக்கோயில் கொண்டருளிய அம்மையப்பனாகிய பெருமான், கருணை பன்மை படும் தொழில் ஐந்து—தன்னுடைய அருளினால் பலவாக்கப்படும் கிருத்தியங்கள் (செயல்கள்) ஐந்தாகும். அவை, படைப்பு நிலை தொகுத்தல் இன்மை நிகழ்ந்த ஒளிப்பு துயர்நின்று எடுத்தல்—படைத்தலும், காத்தலும், அழித்தலும், மறைத்தலும், அருளலும் என்ப —என்று கூறுவர். கலைஞராயினர், வன்மை படா(த) நிலைமை பெரியோனுக்கு அமைந்தன ஏ-வன்மைத்தன்மை எவ்வாற்றானும் பொருந்தாத பிறவாயாக்கைப் பெரியோனாகிய இறைவனுக்கு அமையப் பெற்றனவாம் (எ-று)

இறைவன் திருமேனி கருணைவடிவு அறவாழியந்தணன் என்பதும் அதுநோக்கியேயாம், ஒன்றல்லனவெல்லாம் பலவாம். ஆதலின் பன்மையெனப் பகர்ந்தனர், வடமொழியில் பஞ்சகிருத்தியங்களைச் சிருட்டி, திதி, சங்காரம் திரோபவம், அநுக்கிரகம் என்பர், இவற்றினைத் தமிழில் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் எனக்கூறுவர். தொகுத்தல்—அழித்தல், இன்மைநிகழ்ந்த ஒளிப்பு—இலதாந் தன்மைப்பட்ட மறைத்தல் (ஒளிப்பு—மறைத்தல்) துயர்நின்று எடுத்தல்—பிறப்பிறப்பாகிய பெருந்துன்பத்தினின்றும் பாசமொருவித் தனதாக்கிக் கருணை புரிவது (ஏ-ம்)

இதுகாறும் பதிவிகாரம் உணர்த்திற்றாம்.

(2-வது பசுவிகாரம்)

அமையா நிலைமை யணுக்களோர்
மூன்று வகையவைதாங்
கமையால் நிறைந்தவிஞ் ஞான
கலர்பிர ளயாகலர்மற்
றிமையா ரிமைப்பவ ராகுஞ்
சகல ரிவரின்முன்னோ(து)
அமையா ரெனல்மல மேயவை
சேடித்த தன்மையரே 12

(இ-ள்) அமையா(த) நிலைமை அணுக்கள் ஓர் மூன்று வகை—பதியோடும் பாசத்தொடும் விரவி ஒருபாற்பட்டு அமையப்பெறாத (நிலைபேறு இல்லாத) தன்மைத்தாம் பசுக்களாகிய (ஆன்மாக்கள்) அணுக்கள் ஒரு மூவகையினை யுடையவாம் அவை தாம்கமையால் நிறைந்த விஞ்ஞான கலர். அவைகளானவை பொறுமைத் தன்மையால் நிறைவுற்ற விஞ்ஞான கலர் எனவும் (ஒருமலமுடையவர்) பிரளயாகலர் — இருமலமுடையராகிய பிரளயாகலரும், இமையவர்—தேவரும் மனிதருமாகிய மும்மலமுடைய சகலரும், என மலச்சேர்க்கையால் மூவகைப்படுவர் என்பதாம்.

இவரில்—இம்மூவருள், முன்ஓது அமையார்-முன்னர்க் கூறப்பட்டன பொருந்தப் பெறாதவர், மலம் ஏயவை சேடித்த தன்மையர் ஏ எனல்—மலங்களானவை-பொருவச் சிறப்புற்ற மேலாய விஞ்ஞான கலர் என்று கூறுக (எ-று)

சேடித்தல்—நீங்கல், (விலகல்) கமை—பொறை சுமை, மும்மலர் இவர் என முறை தெரிவிக்கப்பட்டுள்ளது. மலரகிதர்—பரமேசுவரன். மலசகிதர் ஆன்மாக்களாவர். இறைவன் ஆன்மாவுக் கான்மாவாயும் தனித்தும் இயங்கு வன், ஆன்மாக்கள் வினைக்கீடாக வெடுத்த தனுக்களுக் கேற்ப நாம ரூப வகையினை யடையும். இவ்வுருவழியும்

இவ்வுரு வினையேற்ற ஆன்மாவாகிய அரூபி யழியாமை யினை யுடையது. இமைத்தல்—மூடல். இமையார்-மூடாத கண்களையுடையவர், இமைப்பவர்—மனிதரானவர். இவர் தம்முள் வேற்றுமை (இவர் ஆணவமலமொன்றேயுடையவர் என்பது கருத்து)

தன்மை யொழிக்குமப் பாசமுங்
　　கன்மமுஞ் சார்ந்துமற்றைப்
பின்னொரு பாசமில் லார்பிர
　　ளயாகலர் பேசியவக்
கன்மமும் மாயையும் ஆணவ
　　முங்கலந் தார்சகலர்
என்னு மிவரின்முன் னோரிரு
　　பான்மைய ரென்றறியே 13

(இ-ள்) தன்மை ஒழிக்கும் அ பாசமும் கன்மமும் சார்ந்து-ஆன்மத் தன்மையினை நீக்கும் அந்த ஆணவ மலமும் கன்மமலமும் சாரப்பெற்று, மற்றை பின் ஒரு பாசம் இல்லார் பிரளயாகலர்—வேறு பின்னாக ஒருமாயா மலங்கலக்கப் பெறாதவர் பிரளயாகலர் ஆவர் (இவர் இரு மலமுடையவர்) பேசிய அ கன்மமும் மாயையும் ஆணவமும் கலந்தார் — முன்னர்க்கூறப்பட்ட அந்தக் கன்மமலமும், மாயாமலமும், ஆணவமலமும் ஆகிய மும்மலங்களும் சேரப் பெற்றவர்—சகலர் எனப்படுவர். என்னும் என்று கூறப் பட்ட, இவரில்—இவர்களில், முன்னோர்—இருபான்மையர் —முதலாமவராகிய விஞ்ஞானகலர் இரண்டு தன்மையானவர் என்று அறி ஏ என்று நீ அறிவாயாக (எ-று)

ஆணவமலம்—பாசமெனப் பெயர்பெறும், மூலமலம் எனக்கூறுவதுமுண்டு. பான்மையர்—பிரிவினர், மற்றை— பிறிது, வேறொன்று) அறி—அறிவாய் என முன்னிலை யேவல் முற்று. தன்மை—இயற்கை.

தன்மை யொழிக்கும் பாசமென்றது. ஆன்ம சொரு பத்தைக் காட்டிடாது தன்சொரூபமாகிய முனைப்பினையே காட்டிடலால் கூறப்பட்டதாகும், கன்மம் (கருமம்) எப் பொழுதும் வினைகளைச் செய்யுமாறு தூண்டி வினைகளி லழுந்துறச் செய்வது. ஆகவே ஒருமலமுடையரும், இரு மலமுடையரும், மும்மலமுடையரும் என ஆன்மாக்கள் மூவகையிலடங்கிடுவார்.

அறிந்தவர் தீர்ந்த துகளினர்
　　தீராத் துகளர்முன்னர்ச்
செறிந்தவர் விஞ்ஞைக்கு நாயக
　　ரெண்மரெனச்சிறந்தோர்
பிறிந்தவர் மந்திர ராமேழு
　　கோடியர் பேரருளான்
மறிந்த திரைப்புனல் வெங்குரு
　　வாணன் வகுத்தவரே 14

(இ-ள்) அறிந்தவர் தீர்ந்த துகளர் தீராத்துகளர்— விஞ்ஞான கலரானவர் அநாதியே மலபந்த மாத்திர முடைய விஞ்ஞான கலரும் இடையே பரிபக்குவ விசேடத் தால் மாயாபந்தம் முழுதும் நீங்கி மலபந்தம் ஒன்றேயு டைய விஞ்ஞான கலரும் என விருவகையராவர். முன்னர் செறிந்தவர்—முன்னரே நெருங்கியுள்ளவருமாவர். இவர் கள் (அணுசதாசிவராவர்) அணுசதாசிவராகிய இவரும். விஞ்சைக்கு நாயகர் எண்மர் என—வித்தைக்குத் தலைவரா கிய எட்டுப்பேரும் (அட்டவித்தியேசுரரும்) சிறந்தோர்— மேம்பட்டவராவர். பிறிந்தவர்— இவருள் வேறானவர். மந்திரர் ஆம் எழுகோடியர்—மகாமந்திரர் எனப்படுகின்ற ஏழுகோடியர் ஆவர். (இவர்கள் சப்தகோடி மகாமந்திரர் எனப்படுவர்) பேர் அருளால் மறிந்த திரை புனல் வெங்குரு வாணன் வகுத்தவர் ஏ — பெருங்கருணைத் திறத்தால் மடங்கி மடங்கிச் செல்லும் பேரலைகளோடு கூடின நீர் சூழ்ந்த வளம் உடைய சீகாழிப்பதியிற் றிருக்கோயில் கொண்டருளியுள்ள இறைவனே இங்ஙனம் பகுதிப் படுத்தினராம் (எ—று)

தூகள் — குற்றம் (மலமாகிய குற்றம்) விஞ்ஞை வித்தை ஏழுகோடி — ஏழுவகையான அந்தர், வாழ்நன் வானவன் என மருவிற்றாம். விஞ்ஞானகலர் பக்குவமலர், பக்குவா பக்குவ மலர், அபக்குவமலர் என மூவகையராவர். இவருள் முதலாவது பக்குவமலர் அணுசதாசிவரும் அட்ட வித்தியேசு வரும் என விருவகையராவர்.

அணுசதாசிவம்:— இவர்கள் பிரணவர், சுதர், சுதீப்தர் காரணர், சிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தேசர் எனப்பதின்மராம். இவர்கள் அன்பே யுருவானவர்கள் இவர்கள் அதிகார சிவனுடைய அருளைப்பெற்றுக் கீழே யுள்ள மாயா புவனங்களிலுள்ளவருக்குப் (பிரளயாகாலருக குப்) பக்குவத்தில் அருள்புரிந்து சாதாக்கிய தத்துவத்தில் போகங்களை நுகர்ந்துகொண்டு சதாசிவமூர்த்தியை சூழப் பணிந்துகொண்டு இருப்பார்கள். இவர்களில் தீவிர சத்தி நிபாத முற்றவர்கள் அநந்த ஞான முதலாயுள்ள ஆறுகுணங் களாலே விளங்கி யாவரையும் காத்தலைப் புரிந்துகொண்டு எண்ணற்ற போகங்களுடன் விந்து தத்துவத்தில் உறை வார்கள் இவர்களெல்லோருக்கும் போகத்தில் வைராக் கியமுண்டானபோழ்து தீவிரதரத்தில் தீவிரதரமெனனுஞ் சந்நிபாதத்தால் சிவன் மோட்சங் கொடுத்தருள்வார்.

அட்ட வித்தியேசுர ராவார். அனந்தர், சூக்குமர் சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகவுருத்திரர், திரிமூர்த்தி சீகண்டர், சிகண்டி எனும் எண்மராம். இவர்கட்கு அதிகாரமலம் மாத்திரம் உண்டு. இவர்கள் அனந்தமாயா கிருத்தியங்கட்கு அதிகாரிகள். ஈச்சுர தத்துவத்திலுள்ள புவனங்களுக்கு அதிபதிகளால் அவ்விடத்தில் உறைவர். பக்குவா பக்குமலர், சப்தகோடி மகாமந்திரராவர். (ஏழு கோடி மந்திரர்) என்றது:— ஏழுவகையானவற்றினை யீற்றின்கண் உடைய மந்திரங்களுக்கு அதிபர்கள். இவர்க ளும் பௌட்கராகமம் நான்காவது பசுப்படலம் ஐம்பத் ஞ்தந்தாவது சுலோகத்திற் கூறியபடி எண்ணிக்கையினால் ஏழுகோடியராவார்கள்.

மந்திரங்களினீற்றில் அமையும் ஏழுவகை கோடிகளா வன, நம ஒருகோடி, சுவாகா ஒருகோடி, சுவதா ஒரு கோடி வௌஷட் ஒரு கோடி, வஷட் ஒருகோடி, பட் ஒரு கோடி ஹூம் ஒரு கோடியாகும்.

இவற்றுள் நம என்பது இருடிகட்கும், சுவாகா என்பது தேவர்கட்கும், சுவதா வென்பது மாதுரு பித்துருகட்கும், வௌஷட் என்பது பூத முதலியவர்கட்கும், வஷட் என்பது மனிதர்கட்கும், பட்டென்பது உக்கிர விக்கிரகங்கட்கும், ஹூம் என்பது ஆஞ்ஞைத் தலைவர்கட்கும் ஆகும்.

ஏழுகோடி மந்திரங்களுக்கும் ஈசுவரிகளாகிய பிருகுணீ பிரம்ம வேதாளீ, தாணுமதி, அம்பிகை, உரூபிணீ, நந்தினீ, சுவாலை என்னும் வித்தியேசுவரிகளும் மண்டலேசுரர்க ளாலே துதிக்கப்பட்டுச் சுத்த வித்தியாதத்துவத்தில் உறை வார்கள். மந்திரம் என்னும் இருமொழிகட்கும் பொருள் தன்னை நினைக்கின்றவனைக் காப்பது என்பதாம் அபக்குவமலராவார். இவர்கள் சுத்த வித்தைக்குக் கீழ் மாயைக்குமேல் உறைவார்கள். கேவலத்தில் ஆன்மா நிற்குந்தன்மைபோல் இவர்கள் ஒரு உருவுமற்று ஆணவமல வடிவினராய்ச் சுத்தமாயையிலே தோற்றமும் ஒடுக்கமும் ஆகையால் ஆணவமல பரிபாகம் வருமளவும் பெத்தநிலை யினராயிருப்பபார்கள். இவர்கட்கு இந்த விஞ்ஞானகலப் பிராப்தி அநுபவத்தாலும் விஞ்ஞானத்தாலும் யோகத்தா லும், சந்நியாசத்தாலும். தீக்கையினாலும், இடையே மாயாபந்தம், கன்மபந்தம் முற்றும் நீங்கி அசுத்தமாயைக்கு மேல் உள்ள புவனங்களில் நுகரக்கடனவாகிய போகங் கட்கு ஏதுவாய் நின்ற ஆணவமலபந்தம் ஒன்றேயுடைமையி னால் வந்து கூடியது.

இதற்குப் பிரமாணமாவது சிவநெறிப்பிரகாசம்.

" சந்தியா சத்தால் யோக சாதனை யாற்றவைத்தாற்
சற்குருவான் முக்கலையிற் சாரும்வினை யனைத்
மன்னாது சோதனைசெய் திடுதலினு லாதன் [தும்
மாயையிரு வினையனைத்தும் மாயையு நீங்கிடவே
இன்னாத வாணவத்தாற் றடைப்பட்ட ஞான
வியல்பினதா யறிவின்றி யிருந்துமல பாகத்
தன்னாளின் அரனருளான் முத்தியினை யடையும்
அறியிலது விஞ்ஞான கலாதியிலக் கணமே "

எனவரும்.

நீர்வளஞ் சூழ்ந்திருப்பதனால் மறிந்த திரைப்புனல் வெங்குரு வென்றார். மறிதல்—மடங்கல், திரை — அலைகள் புனல்— நீர், வகுத்தல்—வகைசெய்தல்.

இவர்களுக்கும் பரமேசுரர் மலபரிபாக தார தம்மியத் துக்குத் தக்கபடி, மந்திர பதத்தையும், மந்திரேசபதத்தை தமது பதத்தையும், கொடுத்துமோக்கங் கொடுக்கிறார். கீழுள்ள தத்துவத்தில் உறைபவர்களுக்கு மேலுள்ள தத்து தத்துவத்திலுறைபவர்கள் சிறந்தோர் ஆவர். (எ-று)

வகுத்த வரிற்புவ னாதிப
ரேனையர் மற்றவர்பின்
றொகுத்த வரிற்பந்த முற்றினர்
தூநெறிச் செல்வர்பின்பால்
மிகுத்தவர் தாம்புரி யட்டகத்
தோடும் வினைவழியிற்
பகுத்த பிறப்பிற் சகலர்முப்
பாசமும் பற்றினரே 15

(இ-ள்) வகுத்தவரில் புவனாதிபர் ஏனையர்—மற்ற வர்—முன்னர் மூன்றுகூறாக வகுக்கப்பட்டவருள் புவனேச ரும் ஏனையரும் மற்றவரும். பின்தொகுத்தவரில் பந்த முற்றினர் தூநெறிசெல்வர்—இரண்டாமவராகிச் சேர்க்கப் பெற்றவரில் பாசமாகிய தளைகள் முற்றப்பெற்றவரும்

தூய்மையாகிய சிவநெறிக்கண் இயங்குபவரும், பின்பால் புரியட்டகத்தோடும் மிகுத்தவர்—இவ்விருவருக்கும் மூன்றாவதாக உடையவர் ஊழான் புரியட்டகமெனப்படும் சரீரத்தோடும் மிகுந்து நிற்கும் பிரளயாகலர் எனப்படுபவர்கள். இவர்கள் இருமலமுடையவரே யாவர். வினை வழியிற் பகுத்த பிறப்பின்—இருவினைக்கீடாகப் பழவினையினிடத்து பகுக்கப்பட்ட தோற்றத்தினிடத்து. சகலர் முப்பாசமும் பற்றினர் ஏ — சகலர் எனப்படும் மூவகை மலங்களும் பற்றப்பெற்றவர் ஆவார்கள். மும்மலம்— ஆணவம். கன்மம், மாயைகளாம் (எ-று)

இப்பாட்டு பிரளயாகலர் சகலர் ஆகிய இவ்விருதிறத் தவரைப்பற்றியது- பிரளம்:—நித்தப்பிரளயம், பிராகிருதப் பிரளயம், மத்திமப் பிரளயம், மகாப் பிரளயம், பிரதம மகாப் பிரளயம் என ஐவகையாகும். இவை நிவிர்த்தியாதி ஐங்கலைகளின் சங்காரத்தைக் குறிக்கும். இவற்றுள் நித்தப்பிரளயம், பிரளயம் எனவும், பிராகிருதப் பிரளயம் அவாந்தரப் பிரளயம் எனவும் பெயர் பெறும்.

## பிரளயாகலர்

பிரளயத்தில் மாயா தத்துவத்தில் கட்டுப்படுகின்றபடியால் பிரளயாகலர் என்றது பிரளயத்திற் கலாதி நீங்கினவரெனினும் பொருந்தும், இவர்கள் ஆணவம், கன்மம், ஆகிய இருமலங்களையுடையவர். சுத்தாசுத்தாத்துவர் வாசிகள் ஆவர், அசுத்தமாயா தோற்றமான சூக்கும தனுகரண புவன போகங்களையுடையவர். இவர்கட்குச் சிவபெருமான் முன்னின்று திருநோக்கம் பரிசம் திகழும் வாக்கு என மூன்று வகையானும் அருள் புரிகுவர், சூக்குமதனு—புரியட்டகமாவது: பூதம் ஐந்து, தன்மாத்திரையைந்து தொழிற்பொறியைந்து, அறிவுப்பொறியைந்து அந்தக்கரணம், முக்குணம், பிரகிருதி, கலாதியைந்து ஆக எட்டுமாம்,

வெண்பா

போற்றுகன்ம ஞானமுடன் சத்தாதி பூதாதி
சாற்று மனமூன்று தத்துவமும்—ஏற்றகுணம்
ஒன்றுடன் மான்கலாதி யைந்துமுப் பானிவையும்
என்றபுரி யட்டகமென் றெண்

என்பதாம்.

காரண தன் மாத்திரைகளைந்து மனம், புத்தி, யகங்காரம் மூன்று ஆக எட்டினாலும் ஆக்கப்பட்டவுடம்பு என்றலும் ஆம்.

இவர்கள் அநாதியே மலகன்மங்கள் மாத்திரமுடைய பிரளயாகலரும் இடையே பரிபக்குவ விசேடத்தால் மாயா பந்தம் மாத்திரம் நீங்கி மலகன்மங்கள் இரண்டுமுடைய பிரளயாகலருமென இருவகையாகித் தனித்தனிப் பக்குவ மலகன்மமுடையவர், பக்குவாபக்குவ கர்மமுடையவர், அபக்குவ மலகர்மமுடையவர் என மூவகைப்பட்டிருப்பார்கள்.

முதலாவது பக்குவமலகர்ம முடையராவார்-இவர்கள் புவனேசர், மகாதேவர், வாமதேவர், பவோத்பவர், ஏகபிங்கர், ஏகேட்சணர், ஈசானர், அங்குட்டமாத்திரர், என்னும் மண்டலர் எண்மரும். இவர்களுக்கு அதிபர்களும், சம்சார சாகரத்திற் சுழலுகிறவர்களைத் திருப்புகிறவர்களுமாகிய அனந்தர் திரிகலர் கோப்தர், இட்சேமேசர் பிரமதி, துருவர், தேசோதிபர், ககனேசர் என்னும் எண்மரும் வீரரும் சீகண்டரும் எனப் பதினெண்மர்.

இவர்கள் சிவனாலே அநுக்கிரகத்தைப்பெற்று மலபரிபாகத்தின் மந்தத்தாலே அதிகாரமலத்தோடுங்கூடி அட்டவித்தியேச்சுரராலே பிரேரிக்கப்பட்டுப் பிரகிருதிமாயைக்குக் கீழுண்டான திருத்தியங்களைப் புரிந்துகொண்டு வித்தியாகலையில் மாயாகர்ப்பத்தில் வசிப்பவர்கள். இவர்

கள் ஆணவ மலங் கன்மமலங்களிரண்டே யுடையவர்களா னாலும் முற்செய்த தபோபலத்தால் அவைகள் பரிபாசமாகி கிற அவதாரத்திலே விஞ்ஞான கலரில் மந்திரேசுரர் பதத் தைப்பெற்று அந்த அதிகாரம் நடத்த வேண்டுகையாலே மாயையோடுங் கூடியிருந்தாலும் சிவன் பிரபஞ்சத்திற் றோய்வற நின்றாற்போல அதிற்றோய்வர நிற்பார்கள். இவர்களுள் புவனேசராதி மண்டலர் எண்மரும் மாயா தத்துவத்திலிருக்கும் அட்ட புவனங்களுக்கும் அதிபதிகளா வார்கள். இவர்களுட் சிரேட்டரான சீகண்டருத்திரராலே கலையென்னும் பிரகிருதியிலிருந்து அசுத்த மாயையின் அம்சமான அதன் காரியமான ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்குந் தோன்றும்.

இவர் அயன்மால்போலச் சகலரினன்றிப் பிரளயா கலரிற் பக்குவமுடையோராய்க் கட்டுநீங்கி முத்திபெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக்குரிய எல்லாப்பெயரும், வடிவும், தொழிலும், பெற்றுடையவராகலானும் அயன் மாலிருவர்க்கு மேலாய்ச் சைவத்தினெய்திச் சமயதீக்கை பெற்றோரால் வழிபடு கடவுளாயினார். இவர்கள் அனை வரையும் மலபரிபாகத்தின் மிகுதியாலே சிருட்டிகாலத்திற் சிவன் இரட்சித்தருளுவர்.

2. பக்குவாபக்குவமல கர்மமுடையவர்: இவர்கள் பிரமாண்ட தாரகராகவிருக்குஞ் சதருத்திரரும் காலாக்கினி யுருத்திரருமாவார்கள். இவர்கள் புவனபதிகள். இவர்க ளுக்குக் கலாசம்பந்தமிருந்தபோதிலும் சகலரான வணுக்க ளைப் போலக் கலாதிகளுக்கு வசப்படாதவராதலால் பரமேசுவரர் தாமே நேரில் மலகர்மபரிபாக தாரதம்மியத் திற்குத் தக்கபடி வித்தியேசுவராதி பதங்களைக்கொடுத்துப் பின்பு மோட்சங் கொடுக்கிறார்.

3. அபக்குவமல கர்மமுடையவர்: இவர்கள் அநேகர் மிச்சராத்துவாவில் வாசஞ் செய்கிறார்கள். இவர்களுக்கும் மலகர்ம பரிபாகாநுகுணமாகப் பரமேசுரர் தாமே மோட் சங் கொடுக்கிறார்.

சகலர்:— ஆணவம் கன்மம் மாயையாகிய மூன்று மலங்களையுமுடையவர்கள். ஆதலால் சகலர் என்றதாம். இவர்கள் அசுத்தாத்துவா வாசிகள். அசுத்த மாயையின் தூலபரிணாமமாகிய பிரகிருதி மாயையிலுண்டாகிய அசுத்த தனுகரண புவன போகங்களையுடையவர்கள். இவர்களில் தீவிரதரர்க்குத் திருநோக்கம், பரிசம், திகழும் வாக்கு பாவனையெனும் நான்காலும், தீவிரர்க்கு அந் நான்கனோடு மிகுநூலாலும், மந்தர்க்கு அவ்வைந்தோடு யோகப்பண்பாலும் மந்ததரர்க்கு அவ்வாறோடு அவுத்திரியாலுந் தீக்ஷைசெய்து அருள்புரிந்தருளுவர். அசுத்ததனு— சூக்கும தூல தேகம். இச்சகலரும் பக்குவ மலகர்ம மாயையுடையவர், பக்குவா பக்குவ மலகர்ம மாயையுடையவர். அபக்குவ மலகர்ம மாயையுடையவர் என மூவகைப்படுவார்கள்.

1. பக்குவமலகர்ம மாயையுடையவர்:— இவர்கள் பிரமாண்டத்திற்குள்ளிருக்கும் அவ்வப்புவனங்களில் வாசஞ் செய்கிறவர்கள். இவர்கள் அண்டசம், சுவேதசம், உத்பீசம், சராயுசம் எனும் நால்வகைத் தோற்றத்திலே தேவர் மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமாகிய எழுவகைப் பிறப்பினையும் எடுத்து இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலும் உழன்று திரியும் அவதரத்தில் இருவினையொப்பினாலே சத்திநிபாதாநுகுணமாக மலபரிபாகமடைவார்கள். சம்சாரத்தில் துவேஷம், முத்தியில் விசுவாசம், சிவபத்தி, குருபணிவிடை முதலானவை மலபரிபாகம் வந்தவருக்கடையாளம். இவ்வாறு மலபரிபாகமுற்றவர்களுக்குப் பரமேசுவரர் குருமூர்த்தத்தை யதிட்டித்து வந்து மலபரிபாகாநுகுணமாக மந்திரேசுவராதி பதங்களைக் கொடுத்துப் பின்பு மோட்சங் கொடுத்தருளுவார். இவர்களில் தீவிரதரத்திற் றீவிரதரமான சத்திநிபாதமுற்றவர்களைத் தீட்சாதி சம்ஸ்காரங்களினாலே பாசமோசனஞ் செய்து அநுக்கிரகித்துத் தனது பூரண ஞானத்தோடும் உடனே கூட்டிக்கொள்ளுவர்.

அண்டசம் — முட்டையிற்றோன்றுவன. சுவேதசம் — வியர்வையிற் றோன்றுவன. உற்பிச்சம் — வேர், வித்து, கிழங்கு முதலியவற்றை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் — கருப்பையிற் றோன்றுவன. தாவரம் — மரம் செடி முதலியவைகள் மலபரிபாகமானது மலம் தனது சத்தி தேய்தற்குரிய துணைக்கரணங்களுடன் கூடுவது.

2 பக்குவா பக்குவமலகர் மாயையுடையவர். இவர்கள் மோட்சத்திலே விருப்பின்றிப் பதபோகங்களை விரும்பியவர்கள். இவர்கள் தங்களுடைய பக்குவாநு குணமாகத் தாங்கள் விரும்பிய பதங்களிலே போகங்களைப் புசிக்கப் பரமேசுவரரால் சேர்க்கப்படுவார்கள். இவர்களைப் பதபோக வைராக்கியத்திலே சிவன் இரட்சித்தருளுவர்.

3 அபக்குவமலகர்ம மாயையுடையவர்:— இவர்களுக்கு மேற்கண்ட குணங்களொன்றுமில்லை. இவர்கள் சனனமரணச் சக்கரத்தில் இருவினைக்கீடாய்ப் பிறந்திறந்துழலுவார்கள். இவர்களும் பக்குவாநு குணமாகக் காலாந்தரத்தில் பரமேசுவரரால் இரட்சிக்கப்படுவார்கள்.

சகலிலக்கணம் வருமாறு: சிவநெறிப்பிரகாசம்.

" இனிச்சகல ரிலக்கணந்தா னாணவத்தோ டிருவினைகள்
மாயேய மிசைந்து போக
முனிப்பலவும் பிராகிருத தேகந்தன்னை யுற்றவத்தை
யைந்தினையு முடைத்தாய் நாளுஞ்
சனித்திறந்து தேவருடன் மனிதர் நாகர் தானாதி
சராசரங்கள் யோனி பேத
மனைத்தினிலும் வினைக்கீடாய்ச் சுழன்று முத்தி
யடைவரிரு வினையொப்பி னருட் குருவி னாலே"

என்பதாம்.

இங்ஙனங் கூறிப்போந்த விஞ்ஞானகலர் ஆணவமலத்தையும், பிரளயாகலர் ஆணவகன்ம மலங்களையும் உடையவர்களே யானாலும், விஞ்ஞானகலருக்குக் கன்மமலமும் மாயாமலமும், பிரளயாகலருக்குக் மாயாமலமு முண்டு. இவை சுத்த கன்மமாயா மலங்களாகும். ஏனெனில் இவையில்லையேயல் அவர்கள் அவ்வப் புவனபோகங்களை நுகர முடியாதாகும். ஆனால் விஞ்ஞான கலருக்குப் பிணிப்பாகிய ஆணவமலசத்தி சூக்குமமும். பிரளயாகலர்க்குப் பிணிப்பாகிய ஆணவமலசத்தி தூலமுமாகையால் இம்மலங்கள் அவர்களுக்குப் போக சாதனக் கருவியாய் நிற்பதொழிந்து அவர்களைப் பந்தியாவொகும் எனவே சகலருக்குப் பிணிப்பாகிய ஆணவமல சத்திதூல தரமாமெனவறிக. ஆதலினாலன்றோ இம்மூவகை ஆன்மாக்களுக்கும் முதல்வன் அனுக்கிரகிக்குமிடத்து உண்ணின்றுணர்த்தியவாறே எளிதில் நீங்குவதாகிய சூக்குமமலசத்திப் பிணிப்புடைய விஞ்ஞான கலர்க்கு தீவிர, தீவிரதரசத்தி நிபாதானு குணமாக உண்ணின்று உணர்த்துவதும் உபதேச முகத்தாற் றெரித்துணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாத தூலமல சத்திப் பிணிப்புடைய பிரளயாகலர்க்கு மான்மழு சதுர்ப்புசம் காளகண்டம் திரிநேத்திரங்கொண்டு முன்னின்று உபதேச முகத்தான் உணர்த்துவதும், பலவேறுவகைப்பட வலியுறுத்தி யுணர்த்தியவழியன்றி நீங்குதல் கூடாத அதிதூல சுத்திப் பிணிப்புடைய சகலர்க்கு மானுடச் சட்டைசாத்திக் குருவுருவாய் எழுந்தருளிவந்து உபதேசமுகத்தானும் நூன் முகத்தானும் பல்வேறு வகைப்பட வலியிறுத்தி யுணர்த்துவதுமாம், மேலும் திரோதாயி, மாயேயம் என்னும் இரண்டு மலங்கள் மூவகைய ஆன்மாக்களுக்கும் உண்டு.

ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்தபாச பேதத்தால் மூவகைப் பட்டிருப்பார்கள் என்பதற்கும் அவர்களுக்குக் கன்ம வொப்பில் இறைவனே அநுக்கிரகிப்பன் என்பதற்கும் பிரமாணம்.

" மூலகையா ருயிர்வர்க்க மலத்தார் கன்ம
 மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
 றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற்
பாவனையான் மிகுநூலான் யோகப் பண்பாற்
 பாலிவரு மவுத்திரியா பாச நாசம்
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனாய்
 வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே "

என்பதாம்.

" ஒருமலவிஞ் ஞானகலர் பிரணவா
 தியவணு சதாசிவர்க ளட்டவித்தர்
உற்றமந் திரேசரில வரைச்சுத்த
 மாயையா லுதவியதி காரமீந்தே
பொருவின்மந் திரேசர்முன் னனந்தேசர்
 சுத்தசுத் தாசத்தி பாலிருமலர்
புகலுநூற் றீரொன்ப தாம்பிரள
 யர்க்குநற் புகழ்தூல சூக்குமதனுவும்
பெருமையொடு தந்திவரி லொருவராஞ்
 சிகண்டர் பிரகிருதி பான் மும்மலராம்
பிரிவிலரி யயனாதி சகலருக் குடறந்து
 பின்னுயிர் களுக்கிவர் களால்
அருமையைந் தொழில்செய வமைத்தவவி
 காரனே யபிடேக மாடியருளே
யமலமுது கிரியினமர் குமரசற்
 குருபரந வபிடேக மாடியருளே "

என வரும் விருத்தங்களான் உணர்ந்துகோடல் வேண்டும்.

இங்ஙனம் பிறப்பும் இறப்பும் உற்றுவருகின்ற ஆன்மாக்கள் எடுக்கப்பட்ட யோனி பேதங்களானவை, நால் வகைத்தோற்றமும், எழுவகைப்பிறப்பும், எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதங்களுமாய் இருக்கும்.

இதற்குச் செய்யுள் வருமாறு:—

"தோற்றியிடு மண்டலங்கள் சுவேதசங்கள் பாரிற்
றுளைந்துவரு முற்பிச்சஞ் சராயுசங்க ணான்கின்
ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்ப தென்றும்
உயர்பெயதி னைந்தமரர் பதினொன்றோ டுலவா
மாற்றருநீ ருறைபவன நற்பறவைகணாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடரொன் பதின்மர்
ஏற்றிபெரு தொகையதனி லியம்புவர்கள் யோனி
யெண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே"

என்பதாம்.

பற்றிய சத்தப் பரிசமும்
ரூப மிரதகந்த
மற்றை மனம்புத்தி யாங்கார
மென்றிவை வல்வினையாற்
சுற்றி யமைந்த புரியட்
டகமென்று சொல்லுவர்வான்
பெற்றி யமைந்த பிரமா
புரந்தொழப் பெற்றவரே

(இ-ள்) பற்றியசத்தம் பரிசமும் ரூபம் இரதம் கந்தம் — ஆன்மாவினைப் பற்றியுள்ள ஒலியும், ஊறும், உருவமும் சுவையும், நாற்றமும் ஆகிய ஐந்தும் மற்றை மனம், புத்தி ஆங்காரம் என்று இவை — ஏனைய மனமும் புத்தியும் ஆங்காரமும் ஆகிய மூன்றும் என்று கூறப்பட்ட இவைகள், வல்வினையால் சுற்றிஅமைந்த புரியட்டகம் என்று சொல்லுவர் — வலிய பழவினையால் சூழ்ந்து அமையப் பெற்ற புரியட்டக சரீரம் என்றுரைப்பார்கள்- வான் பெற்றி அமைந்த பிரமாபுரம் தொழப்பெற்றவர் (ஏ) உயரிய தன்மை நிலவிய சீகாழிப் பதியினை வணங்கப் பெற்ற பெரியோர்கள் (எ-று).

பிரமாபுரம் ஆகுபெயராய் இறைவனை யுணர்த்திற்று. வினை வல்வினை, மெல்வினை, யென விருவகைத்தாம், இவ்வினையே பிராரத்தவினை, ஆகாமியவினை, சஞ்சித வினை யெனவும் பெறும்.

திருவாசகம்:—

" பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன்
    னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமே வருந்
    துன்பமே துடைத்தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல்விளை
    யாமலே வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலம் நீவந்து
    காட்டினாய் கழுக்குன்றிலே "

என்பதாம்.

பெற்ற தவப்பய னாற்பிர
    ளயாகல ரிற்சிலரைக்
குற்றமில் மந்திர நாயக
    ராக்குமெங் கொச்சையர்கோன்
*மற்றவர் மண்டல ரனந்தாதி
    கள்வீரர் சிகண்டர்சீ
ருற்ற வுருத்திர டெட்டெட்டோன்
    றொன்றுநூ றெண்ணிவர்க்கே 17

(இ-ள்) பெற்ற தவப்பயனால்—இறைவன் திருவருளினாற் பெற்றதவத்தின் பயனால், பிரளயாகலரில் சிலரை—இருமலமுடைய பிரளயாகலரில் ஒருசிலரை மாத்திரம், குற்றம் இல்மந்திரம் நாயகர் ஆக்கும்—துகளற்ற மந்திரேச

(*பி-ம்) மற்றவர்கள் மண்டிலர் குரோதாதி யனந்தாதி கள்வீரர் சிகண்டர் சீர்,

ாகப்பண்ணும், எம்கொச்சையர் கோன் — எம்முடைய சீகாழிப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பரமபதியானவன் (ஆக்குவன் என முடிவுகாண்க) இவ்விறைவன் அருள்பெற்ற மற்றவர் மண்டலர் — மற்றவர்கள் மண்டலரும் அனந்தாதிகள் அனந்தர் முதலியவர்களும் வீரா — வீரரும், சீகண்டர் — நீலகண்டரும், சீர்உற்ற உருத்திரர் — சிறப்புப் பொருந்திய உருத்திரரும், ஆகஎட்டு எட்டு — பதினாறு வகையினரும், ஒன்று ஒன்று — ஒவ்வொருவரும். நூறென்று — சதஉருத்திரர் என்று, எண் இவர்க்கு ஏ — கணக்கு இவர்க்குரியவாம் (எ-று)

மண்டலர் எண்மர். புவனேசர், மகாதேவர், வாமதேவர், பவோத்பவர், ஏகபிங்கர், ஏகேட்சணர், ஈசானர், அங்குட்டமாத்திரர் எனப்படுவர். அனந்தாதியார், அனந்தர், திரிகலர், கோப்தர், இட்சேமேசர், பிரமபதி, துருவர், தேம்சாதிபர், ககனேசர், எண்மரும், வீரரும், சீகண்டரும் ஆகப்பதினெண்மராவர். இவர்கள் சதருத்திரர்களையுடையவராயிருப்பவர் என்றபடி.

எண்ணும் வினைப்பய னாற்புவ
 னந்தொறும் போகமென்று
நண்ணி வருஞ்சக லர்க்கொரு
 கால நயந்திங்ஙனே
பண்ணிய கன்மந் துலையொத்
 துழிச்சத்தி பாதமுறக்
கண்ணிய லுங்குரு வாய்க்காழி
 வேந்தன் சுதிதருமே 18

(இ-ள்) எண்ணும் வினைபயனால் — கருதப்படும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினையின் பயனால், புவனம்தோறும் — இருநூற்றிருபத்துநான்கு புவனங்களிடத்தும் (சுவர்க்கமத்திய நரகலோகங்களிடத்தும்) போகம் என்று — நுகர்வுப்பொருள் என்று கருதி, நண்ணிவரும் — பொருந்தி யநுபவித்து வராநின்ற, சகலருக்கு — மும்மல

முடைய ஆன்மவர்க்கங்கட்கு, ஒருகாலும் நயந்து—ஒருசமயத்து விரும்புதலுற்று, இங்ஙனே— இவ்வாறாகவே, பண்ணியகன்மம்—தாமே மலகாரியங்களாற் செய்யப்பட்ட செயல் (வினைச்செயல்கள்) துலையொத்துழி— இருவினையொப்பு உண்டாய இடத்து (துலை—தராசு) சத்திநிபாத முறை—சத்திநிபாதத் தன்மையுடைய (அப்போது) கண் இயலும் குரு ஆய்— அகக்கண்ணிற்குக் காணப்படும் அருவுருவத்திருமேனியுடைய இறைவனே புறக்கண்ணாகிய ஊனக்கண்ணுக்குப் புலனாகும் கரசரணாதிகளுடன் கூடிய மானிடச்சட்டை தாங்கிய குருவடிவாகி, காழிவேந்தன்—சீகாழிப்பதியில் மேவிய சிவபெருமான், கதிதரும் (ஏ)—மோட்சமாகிய பேரின்பவீட்டை யருளுவன் (எ-று)

ஏ—ஈற்றசை, கதி—முத்தி, சத்திநிபாதம் என்பது சத்திபாதம் எனவாயது, அருட்சத்திபதிதல் என்பது பொருளாம். ஒருபொருளை வேண்டுதலும் வேண்டாமையும் உடையவழி ஆன்மாக்கள் தாமே வினைசெயல்களில் பிறப்பு இறப்புத்துன்புகளை நோக்கி வெறுப்புற்று பிறப்பறுத்தலாகிய நோக்கொன்றிலேயே உள்ளத்தைப் போக்கிக் குருவருள் உபதேசம் பெறவிழைந்து நிற்பன். அக்காலை சுவர்க்க போகங்கள் நல்வினைப்பயனாய் உண்டாய போழ்தினும் அதினும் வெறுப்புற்று தீவினைப்பயனால் நரக வேதனை யுறாவில் அச்சங்கொண்டு மனத்தை நன்னெறியின் கண் நிற்க வைராக்கியங்கொண்டு இருவினையொப்புண்டாம். அக்காலை நிருமலமாநிற்கும் ஆன்மாவிற்கு அருட்சத்திபதி தலைப்புரிகுவன் குருவுருவாய்வந்து இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் வாய்ப்புழிச் சகலர் பரிபக்குவப்பட்டு மோட்சம் அடைவதை யுணர்த்திற்று இப்பாடல் என்பதாம்.

பசுவிகாரப்பகுதி முற்றும்.

3-வது பாச விகாரவியல்

கதிதரு காழிமன் கட்டுமப்
    பாசங்கள் மூன்றவைதாம்
பொதிதரு மாணவம் போகஞ்செய்
    கன்மமும் மாயையுமா
முதியது தானொன்று முன்பினி
    லாதது சேதனன்கண்
அதிக மறைப்பன வாயிர
    கோடி விருத்திகளே 19

இச்செய்யுள் மூவகை மலத்தின் செயல் (காரியம்) குறிக்கப்பெறுகின்றது.

(இ-ள்) கதிதரு காழிமன் கட்டும் அப்பாசங்கள் மூன்று —பேரின்பமாகிய முத்திப்பேற்றினைத் தந்தருளுகின்ற சீகாழிப் பதியிற் றிருக்கோயில் கொண்டருளியிருக்கின்ற பேரிறைவன் ஆன்மாக்களுடைய வினைகட்கீடாக எடுத்த தேகத்திற்கும் உயிருக்குமாகப் பிணைக்கப்பட்டுள்ள மலங்கள் மூன்றாகும். அவைதாம் பொதிதரும் ஆணவம்—(அவைகளாவன) ஆன்மாவை யநாதியே மூடியிருக்கும் ஆணவமலமும், போகம் செய்கன்மமும் — நுகர்வினையுண்டுபண்ணுகின்ற கருமமலமும், மாயையும் —மாயையென்னும் மலமும், ஆம்—ஆகும்.

முதியது—முதுமையுடையது, தான்ஒன்றாய் முன்பின் இலாதது—தான் ஏகமாய் (ஒன்றாய்) முன்னும் பின்னும் இல்லாத தன்மையுடையது (அநாதியாகவுள்ளது) சேதனன்கண் — ஆன்மாவாகிய பசுக்களிடத்து. அதிகம்—மிகவும் மறைப்பன ஆயிரம்கோடி விருத்திகள் ஏ — ஆயிரமென்னும் கோடியளவினவாகிய தொகைகொண்டு மறைத்தலைச் செய்யும் ஏ—று அசைநிலை.

ஆணவமலமானது:— அநாதியாய் நித்தியமாய் அசித்தாய், ஒன்றாய், செம்பு முதலிய உலோகங்களிலுள்ளவாறே யவற்றை மறைத்து அவற்றுள்ளும் புறம்புங்கலந்து லெட்டுமாய்த்தோறும் நின்றாற்போல விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்களின் ஆன்மாக்கடோறும் மயங்கப்பெறும் ஆன்ம போதத்தோடும் அநாதியே கலந்து மறைந்து நிற்பதாய் அடர்ந்த விருளும் ஒளியும் எனுமாறு அஞ்ஞானாந்தகாரமாய் பூதவருள் ஒன்றாயிருந்தும் அநேககண்களை அவ்வைகளுக்குரிய பிரகாசத்தின் தாரதம்மியத்திற்குத் தக்கபடி மறைப்பதுபோல் அளவற்ற ஆன்மாக்களையும் அவரவர்களுடைய பக்குவாபக்குவங்களுக்குத் தக்கதாக அவரவர்களின் இச்சா ஞானக்கிரியைகளைச் சற்றுஞ் சீவியாதபடி மறைத்து நின்று அவவவ்வான்மாவைப் போதங்களின் மீட்சியிலே நீங்குவதாயிருக்கின்ற அனந்தசத்திகளையுடையதாயிருக்கும்.

ஏகமாய்த் தங்கால லெல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்திய தா யிருளொளிர விருண்ட
மோகமாயச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வரது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே

என்பது சித்தியார் ஆகும்.

விருத்திக ளான்மறைக் கின்றவவ்
வாணவம் வெங்குருமன்
கருத்திய நூண்முறை தேரிற்
கலந்துட னாயணுவை
யருத்தியுஞ் செய்திடு மோகஞ்செய்
தாசை யநுபவத்திற்
பெருத்திடச் செம்பினிற் காளிதம்
போலப் பிணைந் துளதே

(இ-ள்) விருத்திகளால் மறைகின்ற—பல்வகையான தொழில்களால் (செயல்களால்) மறைத்தலைச் செய்கின்ற, அவ்ஆணவம்—அந்த ஆணவமலமானது, வெங்குருமன் கருத்து இயல் நூல்முறை—வெங்குருவெனும் நாமமுடைய சீகாழிப்பதியின் மன்னனாகிய தோணியப்பருடைய கருத்து இயல்நூல் முறைதேரின்—திருவுள்ளக் கருத்தானது இயலும் கலைநூல் நெறிமுறையினை ஆராயின் (சிவாகமங்களை ஆய்ந்தால்) கலந்து உடன் ஆய் அணுவை அருத்தியும் செய்திடும். ஆன்மாவினுடன் ஒன்றாய் கலந்து உடனாகிய அணுவாகிய உயிர்களை போகத்தில் நுகரவும் செய்திடும். மோகஞ்செய்து — மயக்கத்தைப் புரிந்து, ஆசை—அவாவினை, அநுபவத்தில் பெருத்திட—அநுபவமாகிய நுகர்வினில் மிகுத்திட, செம்பினில் காளிதம் போல—செம்பாகிய உலோகத்திலிடத்துக் களிம்பினைப்போல பிணைந்துள்ளது (எ) பிரிவின்றி யொற்றித்திருப்பதாம். எ, அவா (எ—று)

விருத்தி—செயல் கருத்திய நூன்முறை யெனற்பாலது கருத்திய நான்முறை யெனவாயதுபோலும், நான்முறை—ஆகமநெறிகள். அருத்தி—நுகர்வித்து, மோகம்—மயக்கம் உடனாய்—ஒன்றாகி, காளிதம்—செம்பு, பிணைந்து—கலந்து, பெருத்திடல்—பருமனாதல். தேர்தல்—ஆய்தல். வெங்குரு—சீகாழிப்பதி. மன்—இறைவன். காழிப்பிரான், அணு—ஆன்மாக்கள் இப்பாட்டில் ஆணவத்தின் இயல் தெரிவிக்கப்பெறுவதாம்.

மேலும் ஆணவமலவியலானது:— ஆணவம் கேவலத்தில் ஆவாரகசக்தியாலும் சகலத்தில் அதோ நியாமகசத்தியாலும், ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தை நிகழ்த்தும்.

ஆணவமலம் சகலர்களுக்குச் சகலாவத்தையில் அவர்கள் அராக முதலிய கருவிகளுடன் கூடி நின்றவிடத்து, மோகம், மதம், அராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம், எனும் ஏழ்வகையினையுஞ் செய்விக்கும்,

மோகமாவது சிவத்திரவிய அபகார முதலாயின அதி பாதகம் என்று ஆசாரியரால் அறிந்தாலும் அந்த உணர்ச்சி சிறிதும் விளங்காமல் அறிவை மயக்கி அதிபாதகாதி யவற்றைச் செய்விப்பது.

மதமாவது யாதாமொருவன் தான் மோகித்துப் புணர்ந்தபோது. மடவாரைப்பார்த்து இவள் தேவர்கள் மடவாரிற் சிறந்தாள், இவளைப் பெறும்பேறு போலப் பேறெமக்கில்லையென்று மதிப்பது.

அராகமாவது அவளைப் பெறாதபோது மிகவும் வருந்தி யழும்படி யாசையைச் செய்விப்பது.

விஷாதமாவது தான் வாஞ்சித்துப் புணர்ந்த மாதர் பிரிந்தபோது மிகவும் மனோதுக்கம் செய்விப்பது.

சோஷமாவது சுற்றத்தை விட்டு எப்படி நீங்குவோம் யாம் மரித்தால் குடும்பத்தை யார்தான் தாங்குவார் என்று அந்த மனோ துக்கத்தாலே உடம்பு உலரும்படிச் செய்வது.

வைசித்திரியமாவது சிவன் நமக்குள்ள இருவினைகளுக் கீடாகத் தெய்விக முதலிய இன்பத் துன்பங்களை மூவிதத் தால் வருவிப்பனனென்னும் உணர்வை யழிப்பித்து அவன் என்னைக் கெடுத்தான் வாழ்வித்தான், நானும் என்னை வணங்கினாரை வாழ்வித்தேனென்று கருதுவிப்பது.

அரிசமாவது புத்திர மித்திராதிகளைக் கண்டு களித்து இனியெமக்கென்றும் குறைவில்லையென்று கருதச்செய்வது.

பிணைந்தவப் பாசம் பெருக்கியவ்
வாசை யனுநுகர்வதற்
கணைந்தன கன்ம மிருவகைத்
தாமறம் பாவமென்ப

தனைந்து பிணைந்துந்தன் சார்பினிற்
றோன் றுமன் சந்நிதியால்
உணர்ந்தவர் வித்தும் விளைவுமொப்
பாமென வோதுவரே. 21

(இ-ள்) பிணைந்த அ பாசப்பெருக்கி அவ் ஆணவ—ரோடு ஒற்றித்த அந்த ஆணவமலமாகிய பந்தம் (தளை) பெருக்கி (மிகுத்து) அந்த ஆசையினை, அணுநுகர்வதற்கு—உயிர்கள் அநுபவித்தற்கு, அனைந்தன—சேரப்பெற்றவை. கன்மம் இருவகைத்தாம்—கருமமலமானது இரண்டு பிரிவினதாம், அறம் பாவம் என்ப—புண்ணிய பாவங்கள் என்று கூறுவார்கள். தனிந்து அணைந்தும்—நீங்கியும் சேர்ந்தும் தன் சார்பினில் தோன்றும்—தன்னுடைய சார்பினிடத்துப் புலப்படாநிற்கும் (மன்—அசைநிலை) சந்நிதியில் உணர்ந்தவர்—இறைவன் திருமுன்னிலையில், பாசகன்மங்களின் பெற்றியையுணர்ந்து அதனினின்றும் நீங்கி மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர், வித்தும் விளைவும்—ஒப்பு ஆம் என்று ஓதுவர் (ஏ) விதையினையும், அதனுடைய முளையாகிய விளைவினையும் ஒத்தல் ஆகும் எனக்கூறுவர் (எ—று) ஏ அசைநிலை

கன்ம மலமாவது ஆகந்துகமாய் (இடையிற் பொருந்துவது) ஆணவமலமறைப்பால், ஆன்மாக்கள் சிவத்தை யறியாமை காரணமாகத் தோற்றியதாய், சாதி ஆயுள் போகமென மூவகையால் ஆன்மாக்களிடத்தில் அநாதியே பொருந்தியதாய், சரீர முதலானவைகளோடு ஆன்மாக்கள் பொருந்துகைக்கு ஏதுவாய் பலவித போகங்களுக்கு உற்பத்தித்தானமாயும் நாசத்தைச் செய்வதாயும் உள்ளதாய், ஆன்மாக்கள் தோறுந் தனித்தனியே யேற்பட்டதாய், புத்திபூர்வம் அபுத்திபூர்வமாகச் செய்யப்படும் இதாகிதங்களாலுண்டாகும் புண்ணிய பாவவடிவினதாய் மாயையிற் சார்ந்திருப்பதல்லது தனித்து வடிவாய்க் காணப்படாததாய், சஞ்சிதபிராரத்த ஆகாமியமாக மாறிமாறி மனதிலே தோன்றுவதாய்? தெய்விகம், பௌதிகம். ஆன்மிகம் என்

னும் மூலகையாலும் ஆன்மாக்களை யடைவதாய் பொருந்தின வொழுங்கிலே யல்லாமல் வன்மை மென்மைகளுக்கீடாக மாறிமாறிப் புசிப்பாவதாய் அநுபவத்தாலன்றி யொன்றாலொன்றறியாததாய் வேதாகமங்களில் விதித்த உபாயங்களினால் தனது புத்தி நன்றாவதாயுள்ளது.

றண்ணியிடு முருவதனுக் கேதுவாகி
நானாபோ கங்களாய் நாசோற்பத்தி
பண்ணிவரு மாதலால் அநாதியாகிப்
பலவாகி யனுக்கடோறும் பார்வ தாகி
யெண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபாலாம் பாவ
புண்ணியமாய்ப் புலர்கால் மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலுமாறே

என்பது சிவஞான சித்தியார் திருவருத்தமாம்.

சஞ்சிதம்: அநாதியே தொடர்ந்து பிறப்புக்கடோறும் ஆர்ச்சிக்கப்பட்டு ஆறத்து வாக்களினும் கட்டுப்பட்டு அளவிறந்து கிடக்கும் இருவினைகள்,

பிராரத்தமாவது: அச்சஞ்சித தருமங்களில் ஏதேனுமொன்று பரிபக்குவமாகிக் காரியத்திற்கு வந்து அதற்கேற்ற தனுகரணாதிகளை யுண்டாக்கிப் புசிப்பிப்பது.

இந்தப் பிராரத்தமாவது, இச்சாப் பிராரத்தம், அநிச்சாப் பிராரத்தம், பரேச்சாப் பிராரத்தமென மூவிதமாகும். இச்சாப் பிராரத்தமாவது தனது விருப்பத்தால் அநுபவிக்கும் இன்பதுன்பங்கள் அது. அரசனின் மனைவியைத் தீண்டலால் வரும் சுகமும் துக்கமும் ஆகும். அநிச்சாப் பிராரத்தமாவது: தான் விரும்பாதிருக்கவே தீ, இடி, மழை முதலியவற்றால் வரும் சுகதுக்கங்களை அநுபவிப்பது. (தான் விரும்பாது பிறனுக்காக அநுபவிக்கும் இன்பத் துன்பங்கள்) பரேச்சாப் பிராரத்தமாவது. அது ஒருவன்

ஒரு காரியஞ்செய்ய அதனாலவனை ஆக்கினை, அபராதம் என்று அரசாங்கத்தார் சொல்ல அதற்கொருவன் வினை முதலியவற்றால் உறும் இருபயனும் போல்வது.

இனி, பிராரத்தமானது தனது சக்தியின் வன்மை மென்மைக் கீடாகத் தீவிரம், மந்தம், சுப்தம் என மூவகை யாகும். சுப்தமென்பது தூங்கினது, இவற்றுள் சுப்தப் பிராரத்தமானது சிவதரும பாராயணனுக்கு இல்லை. மந்தப் பிராரத்தமானது சிவஞானிகட்கு இல்லை, தீவிர பிராரத்தமானது யாருக்கும் நீங்காது, ஆனாலும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது,

ஆகாமியமாவது எடுத்த தேகத்தில் பிராரத்தம் புசிக்கும்போது மேற்சனனத்துக்கு ஏதுவாய் மரண பரியந்தம் செய்யப்படுவது. இவ்வாகாமியம் ஆர்ச்சிக்கப்பட்டுச் சஞ்சிதமாகிப் பிராரத்தமாகும் முறைமையைச் சிறிது ஆய்ந்துரைப்பாம்.

ஆன்மாக்கள் செய்யுந் தொழில்களனைத்தும் புண்ணியம் பாவம் எனும் இரண்டனுள் அடங்கும், புண்ணியமாவது உயிர்கட்கு இதஞ் செய்தல். பாவமாவது உயிர்கட்கு அகிதம் செய்தல்- இவற்றனையே நல்வினை தீவினைகளெனவும். இருவினைகளென்றும் சொல்லுவார்கள். புத்தி பூர்வமாவது புண்ணியம் இது. பாவம் இது என்று அறிந்து செய்யப்படுவது. அபுத்தி பூர்வமானது அங்ஙனம் அறியாமல் செய்யப்படுவது. மேலும் இவைகள் காமியமெனவும் நிஷ்காமியமெனவும் இருவகைப்படும்.

காமியம்: பயன்குறித்துச் செய்யப்படுவது. நிஷ்காமியம் பயன் குறியாது செய்யப்படுவது இதுவே மேன்மையானது. காமிய கன்மங்கள் திருஷ்ட சன்ம போக்கியம், அதிருஷ்ட சன்மபோக்கியம். திருஷ்டாதிருஷ்ட சன்மபோக்கியம் என மூவகைப்படும், இவற்றுள் திருஷ்ட சன்ம போக்கியமாவது—அந்தச் சன்மத்திலேயே பலனைத் தருவதான ஔடத மந்திர புத்திர காமேஷ்டி

யாதி வினைகள் அதிருஷ்ட சன்ம போக்கியமாவது தேகாந்தத்தில் சுவர்க்கத்திலேயாவது நரகத்திலேயாவது மறுபிறப்பிலேயாவது பலனைத்தரும் வினைகள் திருஷ்டா திருஷ்ட சன்மபோக்கியமாவது — அந்தப் பிறப்பிலேயும் மறுபிறப்பிலேயும் பலனைத்தருவது அது இம்மையில் அசுவமேதஞ் செய்தவன் இம்மையிற்றானே சுகமடைந்து மறுமையிற் சுவர்க்கமடைவதும், பிரமகத்தி செய்தவன் இம்மையிற்றானே துக்கத்தினையடைந்து மறுமையில் நரகத்தினை யடைவதும் போல்வது. இம்மூவகைப் புசிப்பும் முறையானே திருஷ்டப் பிராரத்தம் அதிருஷ்டப் பிராரத்தம் திருஷ்டா திருஷ்டப் பிராரத்தம் எனப்படும். இங்ஙனம் கூறப்பட்ட இருவினை கன்மமே ஆகாமியமெனப் படும்.

இவை மூவகையான் ஆறத்துவாக்களில் எந்த அத்துவாவின் எந்தப் பாகத்தில் அதற்குரிய மூர்த்தியினாற் கட்டப்படும். எடுத்துக்காட்டாக மனதினாற் செய்யப் படும் இருவினைகள் மனமென்னுந் தத்துவத்தில் அதற் குரிய மூர்த்தியாலும், வாக்கினாற் செய்யப்படுபவை வாக்குத் தத்துவத்தில் அதற்குரிய மூர்த்தியாலும் கட்டப் படும். இவ்வாறே ஏனையவற்றிற்கும் கண்டுகொள்க. இவ்வனங் கட்டப்பட்ட வினைகளே சஞ்சிதமெனப்படும். சஞ்சித கன்மங்கள் ஏககாலத்திலேயே எல்லாம் பரிபக்குவ மாகிப் பயன்றரா. ஒரு பிறப்பிலே தானே பயன்றருவது மில்லை செய்தவரிசைக் கிரமப்படியும் பயன்படா. எங்ஙனம் ஒரு தோட்டக்காரனால் ஒரு தோட்டத்திலே ஒரே காலத் தில் விதைக்கப்பட்ட கீரை, கத்தரி, மா, புளி, பனை முதலிய பலவகையான விதைகள் அவற்றின் பரிபக்குவ பேதத்தால் முற்பிற்பாடாக அவைகள் அவனுக்குப் பலன் கொடுக்கின்றனவோ அங்ஙனமே யொருவன் செய்த கன் மங்களும் அவைகளின் வன்மை மென்மைக்கீடாக பரிபக்குவ பேதத்தால் முற்பிற் பாடாகவும் அவனுக்குப் புசிப்பாகும். அங்ஙனம் புசிப்பாகின்றவையே பிராரத்தமெனப்படும். ஆன்மாக்கட்கு அநாதி சிவசம்பந்தம் புண்ணியபாகும்.

அநாதி ஆணவமலசம்பந்தமும் அதனால் சிவசம்பந்தத்தை யறியாமையும் பாவமாகும், ஆணவமலசத்தி பல திறப் பட்டு ஆன்மாக்களை மறைத்தலினால் அதனாலாயபாவ மும் பலதிறப்படும். ஆகவே புண்ணியமும் பலதிறப்படும் எனவறிக. இதனால் வினை அநாதியாகந்துகமென்றது வழுகாமை கண்டுகொள்க.

இனி, சஞ்சிதம் குருவின் அருள் நோக்காலும் பிராரத் தம் அநுபவத்தாலும் ஆகாமியம் குருவின் உபதேசப்படி நிற்றலினாலும் அகலும் (நீங்கப்பெறும்) ஆனாலும் பிரார்த்தமாகிய அங்குரத்திற்கு (முளைக்கு) வித்தின் பருப்புக்களைப்போல் உணவாய் நின்று வளர்கின்ற சஞ்சித மும் ஆகாமியமும் மேற்சொன்ன உபாயத்தால் நீங்கவே பிராரத்தம் தனது சத்தி குன்றி உடலூரமாய் வாசனமாத் திரமாய் புசிப்பாகும்.

ஓதிய வல்வினை யூட்டக்
கருவி யு ம்புலக
மாதிமைப் போகமு மாய்நின்ற
மாயை மயங்குவித்தே
போதந் தருப்பொரு ளாகிநிற்
கும்புல னாதிகளுக்
காதியு மாய்விரிந் தந்தமு
மாகி யொடுங்கியதே. 22

(இ-ள்) ஓதிய வல்வினை ஊட்ட கூறப்பட்ட புண்ணிய பாவங்களாகின்ற நல்வினை தீவினைப் பயனைத் துய்ப்ப தற்காக, கருவி—கரணங்களையும், உடம்பு—தனுவையும் (சரீரத்தையும்) உலகம்—புவனங்களையும், மாதிமைபோக மும்—மாதருடன் மோகித்துத் துய்க்கும் அநுபவமும், ஆய் நின்ற—ஆகி நிலைபெற்ற, மாயை—மாயெனும் பாசமா னது, மயங்குவித்தே—ஆன்மாவினை மயங்குதலுறுமாறு செய்து, போதம் தரும் பொருள் ஆகிநிற்கும்-ஞானத்தைக்

கொடுக்கும் பொருளாகியே நிலைபெறும், புவனாதிகளுக்கு —சகல உலகங்கட்கு, ஆதியும் ஆய்—தோற்றத்திற்கு ஏதுவாகிய முதலும் ஆகி, விரிந்து—விரிவடைந்து (பரந்து) அந்தமும் ஆகி-முடிவும் ஆகி, ஒடுங்கியது (ஏ ஒடுங்குதலை யுடைத்தாகியுள்ளது, எ-று. மயக்குவித்தே என்றவிடத்து ஏகாரம் தேற்றத்தின்கண்வந்தது. ஒடுங்கியது ஏ. என்றவிடத்து வந்த ஏகாரம் ஈற்றசைப் பொருளில் வந்துற்றது.

மாயை:— ஆன்மாக்களுக்கு அறிவை மயக்கி விளக்குவதால் மாயையெனப்பட்டது. மா—ஒடுக்கம், யா—தோற்றம் உலகமொடுங்கித் தோன்றுதற்கிடனாய் நின்றது மாயையென்றலுமாம்.

மாயை ஆகந்துகமாய் அசித்தாய் நித்தமாய், அருவாய் உலகத்துக்கு முக்கியோபாதான காரணமாய் அநேகசத்திகளையுடையதாய், தன் காரியங்களில் வியாபகமாய், மூவகையான்மாக்களிடத்து முளதாய், தன்காரியங்களால் சகலரை மிகவும் பந்திப்பதாய், தம்மிலொன்றை யொன்று ஒவ்வாத தனுகரண புவன போகங்களைத் தோற்றுவிப்பதாய், சங்கார காலத்தில் ஆணவ மல முற்றிலும் நாசமுறாத, சர்வான்மாக்களுக்கும் வாசத்தானமாயுள்ளது. உபாதானகாரணம் என்பது முதற்காரணம். காரணமாவது—யாதொன்று, காரியத்துக்கு முன்னேயுண்டானதுமாய், வேறேயும் ஒன்றை யுண்டாக்காததுமாய் இருக்குமோ அது காரணமெனப்படும்.

இந்தமாயை, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூவகைப்படும். சுத்த மாயைக்குக் குடிலை மகாமாயை விந்து ஊர்த்துவமாயை. யெிந்தவம், குண்டலினி, பரபிரகிருதி, பரமாயை என்றும், அசுத்தமாயைக்கு அதோமாயை, மோகினி, சூக்குமப் பிரகிருதியென்றும், பிரகிருதி மாயைக்கு மான், துலா (அல்லது) மூலப்பிரகிருதி யென்றும் பெயர். பிரகிருதி — காரணம். விகிருதி— காரியம். (பகுதி விகுதி) எனவே காரியத் தோன்றுதற்கிடனாயுள்ள தெல்லாம் பிரகிருதி யெனப்படும்.

சுத்தமாயை :— சுத்தமாயையானது சித்த ரூபமாய், சுத்தாத்துவாவிற்கு உபாதான காரணமாய் மூவகையான்மாக்களிடத்துஞ் சேர நிறைவுளதாய், சர்வ விஷய ஞானாதிகளைப் பிரகாசிப்பிக்கிறதாய், விஞ்ஞானகலர், பிரளயா கலரில் பக்குவமலகர்ம முடையவர்களாகிய இவர்களுக்குத் தன் காரியமாகிய விந்துவிலிருந்து சுத்த தனு கரண புவன போகங்களையுண்டாக்கிச் சங்கார காலத்தில் விஞ்ஞான கலருக்குத் தாரகமாயிருக்கும். (தாரகம் — தரிக்கிறது)

சுத்தா சுத்தமாயை:— சுத்தா சுத்த மாயையானது அசுத்த சொரூபமாய், மிச்சிராத்துவாவிற்கு, உபதான காரணமாய், கன்மாதி காரமுள்ள ஆன்மாக்களைத் தன் காரியங்களாயுள்ள கலாதிகளின் வழியாய் பந்திப்பதாய் அஞ்ஞானத்தைச் செய்து மயக்குவதாய், பிரளயா கலர் சகலர்களுக்குரிய சூக்கும தேகாதிகளைத் தோற்றுவிப்பதாய், சங்கார காலத்தில் பிரளயாகலருக்குத் தாரமாயிருக்கும். இங்கே கூறிய சூக்கும தேகாதிகள் கீழ்ப்போக நிலையினராகிய நாற்றுப் பதினெட்டு உருத்திரர்களுக்குரியவைகள். எனவே சுத்தமாயா காரியமாகிய சூக்கும தேகாதிகள் பிரளயா கலரில் மேற்பதம் இச்சித்தவர்களாகிய சிகண்டர் வீரர் முதலிய நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களுக்குரியவைகளாம். ஆதலால், பிரளயாகலர் மேற்பதம் இச்சித்தவர், 118. உருத்திரரும் கீழ்ப்பதம் இச்சித்தவர் 118; உருத்திரருமாக இருவகையர் எனவறிக:

இதற்குப் பிரமாணம்:

உருவாதி சதுர்விதமா யொன்றொன் றொவ்வா
வுண்மையதாய் நிக்கமா யொன்றா யென்று
மருவாகிக் கன்மபா ரணுக்க ளியார்க்கு
மவ்வா மாயசித்தா யசல மாகி

வீரியாய தன்செயலின் வியாபியா மெல்லாம்
விரிந்தவகை புரிந்தவை வின் மேவியவை யொடுங்க
வருகால முயர்களெல்லை யருளிடமாய் மலமாய்
மன்னியிடு மரனருளா ன் மாயை தானே.

எனவரும்

மாயை ஆன்மாக்களுக்கு ஞானத்தைப் பிரகாசிப்பிக்கு மென்று நூல்களிலே நுவன்றிருக்க அஞ்ஞானத்தைச் செய்து மயக்குவதென்றது என்னெனில், மாயையா லுண்டாகிய ஞானம் அற்பமாய் ஆன்மாவல்லதா சரீராதியில் ஆன்மபாவனையை யுண்டாக்குவதால், அஃதெங் ஙனமெனின் இருளில் தீபம் பிரகாசித்தாலும் மஞ்சள் நிறத்தில் வெள்ளை நிறமென்னும் விபரீத ஞானத்தை யுண்டாக்குவது போலாம் எனவறிக.-

பிரகிருதிமாயை: - பிரகிருதி மாயையானது அசுத்த மாயையின் (முளைப்பதற்குப் பக்குவப்பட்டு இருக்கும், உப்பின விதையைப்போன்று) தூலபரிணாமமேயாகும். இது அசுத்தாத்துவாவிற்கு உபாதான காரணமாய்ச் சகலருக்குரிய தூலதேகாதிகளைத் தோற்றுவித்துச் சங்கார காலத்தில் அவர்களுக்குத் தாரகமாயிருக்கும்.

திரோதாயி:— திரோதாயி எனப்படுவது சிவனுடைய அருட்சத்தியானது ஆன்மாவைப் பந்தித்த ஆணவமலம் நசிக்கும்படி அதனோடு கூடித்திரோபவித்து நின்று காரியப்படுத்துமவதாரத்தில் அடைந்தபெயர் ஆதிசத்தி மலமில்லாமலிருக்கவும் கிரியாதருமை ய ஆசாரியரைக் கிரியாதாசாரியர் என்றதுபோல மலத்தையதிட்டித்து நிற்கையால் மலமென்று குறிக்கப்பட்டது.

"ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்
பாசமெனும் பேரதற்கு பாங்கு"

என்னுமிதனாலும் துணியப்படும். இது ஆன்மாக்களை பந்தித்த ஆணவமல சத்தி நீங்குமளவும் மறக்கருணை கொண்டு விரோதித்தவர்போல மறைப்பாகத்தானும் மறைத்துநின்று மாயா காரியங்களை விரித்துக் கலைதி ஞானங்களைக் கொடுக்க ஆன்மாக்கள் அவற்றைப் பொருந்தி வேதங்கள் கலைஞானங்கள முதலிய நூல்களை ஆராய்ந்தாலும் அவர்களுடைய கன்ம அளவிற்குச் சிவனை யறிய வொட்டாது மறைத்து நிற்கும். கன்மவொப்பில் அறக்கருணை கொண்டு சிவனையும் அறியும்படிச் செய்யும்.

### விருத்தம்

திரோதமல யிறைசத்தி யான்மாவைக் கன்மஞ்
சேருமள வாகிமலச் செறிவுநீங் களவும்
விரோதமுறை போலொக்க மறைப்பாக நின்று
மிக்கதுகான் மிகுமாயை விரிததறிவு பொருந்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைக ளாய்ந்து
வரினுமரி யாதவனை நிரவுமத னாலிப்
பராவருளை மலமெனவும் பகர்வரது தானே
பரமனையுங் கருணையினாற் றெரிவுறப்
பண்ணிடுமே

என்பது தத்துவப் பிரகாசமென்னும் நூலிற் கண்டது.

### வெண்பா

" ஊனேயும் கன்மமுடி வொத்தாற் றிரோதாயி
தானே யருளாகித் தன்கருணைத்—தேனே
யருந்துப் படியருளி யாளந்த வீட்டிற்
பொருந்தவுடன் கொண்டு புகும் "

என்பது ஞானசாகரமாம்,

மாயேயம்:— மாயேயம் என்பது "மாயையின் காரியத்தை மாயேய மலமதென்றும், என்றபடி ஆன்மாக்

ளின் சுகதுக்க விளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று அவர் களினும் அறிவிச்சை செயல்களை ஏகதேசம் விளக்கும் மாயா காரியங்களாகும்.

இங்ஙனங் கூறிப்போந்த ஆணவம், கன்மம், மாயை திரோதாயி, மாயேயமென்ற வைந்தும் பஞ்சமலங்கள் எனப்பெயர் பெறும்.

"மோகமிக வுயிர்கடோறு முடனாய் நிற்கும்
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகர்
செயலாகு மாமாயைத் திரட்சி யொன்றென்
றாகமல மைந்தென்ப ரைந்து மாறா
தருளென்ப தரிதென்ப ரறிந்து ளோரே".

என்பது சிவப்பிரகாசம்.

*அத்துவாக்கள்:—* அத்துவா என்பது வழி அதாவது மாயை தன்காரியங்களால் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் வழி,

அது சுத்தம், மிச்சரம், அசுத்தம் என மூவகைப்பட்டுப் பொதுவில் தத்துவம், கலை, புவனம், வன்னம், பதம் மந்திரமென ஆறுவகையாம். தத்துவம், கலை, புவனம் மூன்றும் திரவியவடிவானவை, மற்றவை யொலிவடிவா னவை இவற்றுள் புவனம் தத்துவத்தைப்பற்றி நிற்கும். தத்துவங் கலையைப்பற்றி நிற்கும். வன்னம், பதம் மந்திரமெனு மூன்றுள் அத்துவாக்களும் புவனத்திற்றோன் றிய சரீரங்களைப்பற்றி நிற்கும். சுத்தா தத்துவாக்களா வன, சுத்த மாயையிலுள்ள கலை, தத்துவம், புவனம் வன்னம், பதம் மந்திரங்களாம்,

*மிச்ராத் துவாக்களாவன:—*

அசுத்த மாயையிலுள்ள லொதிகளாம். அசுத்தாத்துவாக்களாவன, பிரகிருதி மாயையிலுள்ள கலாதிகள், இதுகாறும் மாயையினைப்பற்றிய குறிப்புக்கள் ஒருசிறிது தரப்பட்டன,

ஒடுங்கிய பாசத் தொகையொரு
மூன்று முறுதொழிலாற்
றுடங்கிய போது துணைமையிற்
றோணி புரத்துறையும்
விடங்கெழு கண்டர்தஞ் சத்தித
னேவலின் மற்றதுவும்
படர்ந்தெழு பாசமென் றாரவை
யூக்கஞ்செய் பான்மையரே 23

(இ—ள்) ஒடுங்கிய பாசம் தொகை ஒரு மூன்றும்—ஒடுங்கப் பெற்றுள்ள பாசங்களின் எண்ணிக்கை ஒரு மூன்றும் உறுதொழிலில் துடங்கியபோது—தத்தமக்குற்ற செயல்களின்கண் ஆரம்பித்தலைச் செய்யும்போழ்து, துணைமையில்—துணையாந் தன்மையில். தோணீபுரத்து உறையும் விடம் கெழுகண்டர் தம்—தோணிபுரமெனும் பெயரிய சீகாழிப் பதியின்கண் எழுந்தருளியிருக்கும் ஆலகால விடமுண்டதால் (தேவர்களைபுய்யக் கொண்டமையால்) விளங்கிய நீலகண்டராகிய பரமேசுரனுடைய, சத்திதன் ஏவலின் — பிரிவின்றியுள்ளதாகிய பராசத்தியின் ஆணையின்படி (கட்டளைப்படி) மற்று அதுவும்-வேறாகிய அப்பாசங்களும், படர்ந்து எழுபாசம் என்றார்—மேலெழுந்து செல்லும் பாசங்கள் என்று கூறினர். அவை ஊக்கம் செய்பான்மையர் ஏ—அப்பாசங்களையுள்ளக் கிளர்ச்சியுடன் ஆயுந் தன்மையராயினார். ஏ-அசைநிலை (எ—று)

விடம்கெழு கண்டர்—கரியவிடம் பொருந்திய கழுத்தினையுடையவர். ஒருகாலத்தில் தேவர்களும் அசுரர்

ரும் பாற்கடலைக் கடைந்து அமிருதங் கொள்வான் வேண்டிப் பிரமவிட்டுணுவாதி தேவர்களுடன் மந்தர மலையினை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் (கடையுங் கயிறாகவும்) மலை தாழாவாறு விட்டுணுவைக் கூர்மமாகத் தாங்கவும் கொண்டு கடையலுற்றனர். அதுகாலை மலையினைச் சுழன்றுதலுக்காற்றாது நைந்து வாசுகியென்னும் பாம்பாகிய நாண் ஆலகாலத்தைக் கக்கிற்று. அங்ஙனம் வெளிப்பட்ட கடல் நஞ்சானது தேவாசுரர்களையும் மற்றைத் தேவர்களையும் நெருங்கித் தேய்க்கலுற்றது. அதற்காற்றாத அத்தேவர்களெல்லாரும் கயிலாய மலையினைத் தஞ்சமாப்புக்கு கண் மூன்றுடைய கடவுளை வணங்கித் துதிக்கலாயினர். அப்போது இறைவன் தேவர்களிடத்திரங்குதலுற்று அவ்வால காலவிடத்தினை தன் திருக்கரத்தடக்கியுண்டு தேவர்களைக் காத்தனர் என்பது வரலாறு.

" கறைமிடறணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே "

என்பது புறப்பாட்டு.

" நடமாடி யேழுலகு முய்யக்கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடும்
இடமாட மதிற்றிலைக் கோயில் கொண்ட
செல்வரே யுமதருமை தேரா விட்டீர்
இடமாடி யிருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடனிற்க வியல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுகண்டா யங்கருநீர் நஞ்சுண் டீரே ".

பதினோராந்திருமுறை இப்பாடல்களால் விடமுண்டநிலை விளக்கப்பெறுகின்றது.

தொடங்குதல் துடங்குதல் வேறுபாடின்மையறிக. துணையாந்தன்மை துணைமை யெனவாயிற்று. சத்தி—

அக்கினியிற் சூடு போலச் சிவத்தொடு பிரிவின்றியுள்ளதாகிய வல்ல பம்பட்டர்ந்தெழல்—பரவுதல். ஊக்கம்—வினை செய்தற்கண் மனவெழுச்சி (உள்ளக்கிளர்ச்சி யென்றலுமாம், பாங்கையார் எழுமைய் என்றார் பயனிலை என வினை முடிவு காண்க.

பான்மையிற் றத்துவ மைந்தென்பர்
சுத்தம் பரமவற்றுட்
சீர்மலி தெய்வச் சிரபுரங்
காண்சிவ தத்துவமென்
றேர்மலி கூந்த லிறைவியுங்
கோனு மிருந்திலரேற்
கூர்மலி சிந்தையினார்சிவ
மாமென்று கூறுவரே

இப்பாடலானது தத்துவங்களைப் பற்றிக் கூறுவதாகும்.

(இ—ள்) தத்துவம் பான்மையின் ஐந்து என்பர்—சாத்திரமுணர்ந்தபெரியோர் தத்துவப் பகுதியினால் ஐந்து என்று கூறுவர். சுத்தம் பரம் அவற்றுள் — சுத்தமும் பரமும் ஆகிய அவைகளுள், சீர்மலி தெய்வம் சிரபுரம் காண் சிவதத்துவம் என்று (ஏர்மலி கூந்தல் இறைவியும் கோனும்—சிறப்பு) நிறைந்த தெய்வத்தன்மை வாய்ந்த சிரபரமாகிய சீகாழியே காண் சிவதத்துவம் என்று, ஏர்மலி கூந்தல் இறைவியும்—அழகு நிறைந்த கூந்தலினையுடைய உமாதேவியாரும் கோனும் — பிரமபுரீசரும், இருந்திலர் ஏல்—அம்மையப்பராகி எழுந்தருளியிராவிட்டால் கூர்மலி சிந்தையினார்—அன்பு நிறைந்த மனமுடையராகிய நிறைமொழிமாந்தர் சிவம் ஆம் என்று கூறுவர்—சிவமேயாகுமென்று கூறுவர் (எ—று)

தத்துவம்:— தாத்துவிதமாகிய சரீராதிகள் போல உடனே யழிவதின்றிப் பிரளயகாலம் வரையும் நிலையுறுதலான் தத்துவமெனப்படும். பூதலயகாலத்தில் மரணமுறுந் தேவர்க்கு அமரர் என்னும் பெயர் ஏற்பட்டதுபோல

காரியக்கேடுடைய கருவிகட்கும் தத்துவமெனப் பெயர் ஏற்பட்டது.

தத்துவமைந்தாவன:— சிவமெனவும், சத்தியெனவும் சதாசிவமெனவும், மகேச்சுரம் எனவும், சாதாக்கியம் எனவும் கூறப்படுவனவாம். அம்மையப்பராக காணப்படுகின்றபோது சிவதத்துவமெனப் பெயர்பெறும். இதற்குச் சுத்தம் எனவும், அம்மையப்பராகக் காண்கின்றபோது பரமெனவும் பெயருண்டு.

தத்துவங்கள்: அகக்கருவி முப்பத்தாறும் புறக்கருவி அறுபடிமாகத் தொண்ணூற்றாறுமாம்,

அகக்கருவிகளான:— பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும் (பூதம்—அளவிலடங்காதது) சத்தம், பரிசம், இரதம், உருவம், கந்தம் எனும் காரண தன் மாத்திரையைந்தும் மெய் வாய் கண் மூக்குச் செவி யெனும் அறிவுப் பொறியைந்தும், மனம் அகங்காரம் புத்தி, சித்தம் என்னும் உட்கருவிகள் (அந்தக்காரணங்கள்) நான்கும், புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம் என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழும், சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், விந்து நாதங்களாகிய சிவதத்துவமைந்தும் ஆக முப்பத்தாறுமாம். இவற்றை முறையே ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவம், சிவதத்துவம் எனக்கூறுவர். ஆக வகை மூன்றுக்கு அக்கருவி 36.

புறக்கருவிகளாவன:— பஞ்சபூதங்களின் காரியம் இருபத்தைந்து, வாக்காதிகளில் றொழிலாகிய வசனாதியைந்து. வாயு பத்து. நாடி பத்து, வாக்கு நான்கு. ஏடணை மூன்று, குணம் மூன்று என அறுபதுமேயாகும்.

1. பூதங்கள் பிருதிவியப்பத் தேயு வாயு
   புகழாகா சம்மைந்தா ஞானேந்திரியங்கள்
   ஒதுசோத் திரந்துவக்கு சட்சு சிங்குவை
   உயராக்கி ராணமைந்தாந்தன் மாத்திரை கேணீ

தாதுசத்த பரிசரூப கந்த மைந்து
　　கருகன்மேந் திரியம்வாக்குப் பாதம் பாணி
நீதிபா யுருபத்தமொடு கரணைம்மனம் புத்தி
　　நிகழ்ந் தாவகங்காரஞ்சித்தம் நின்றதொரு
　　　　நான்கே.

2. ஆன்மதத்துவ மிருபத்து நாலாகச் சொல்வ
　　ரதன்மேல்வித் யாதத்து வங்காலம் நியதி
தானமுறு கலைவித்தை யராகமுடன் புருடன்
　　தருமாயை யேழெண்பர் சிவதத்து வம்பின்
ஞானமுறு சுத்தவத்தை யீச்சுரஞ்சா தாக்கியம்
　　நயந்தசத்தி சிவமைந்தா நடத்து நூல்கள்
மோனமுறு முட்கருவி புறக்கருவி கேணீ
　　முதிர்பிருதி வியன்கூறு மாமொலும்பு தோலே.

என்பனவாம்,

3. பூதங்க டனிற்றொன்றும் காரியமை யைந்தும்
　　புகலுறுமவாக் காதிகளிற் றோன்றுமொழி
நீதிவா யுவிற்றோன்றும் வாயுப் பத்தும் [லைந்தும்
　　நிகழ்பூதந் தனிற்றோன்றும் புகழ்நாடி பத்தும்
கோதில்விந்து விற்றோன்றும் வாக்குநாலும்
　　குலவுமூ லந்தோன்றுங் குணாங்களா மூன்றும்
பேதவா காயத்தி லேடணைகளா மூன்றும்
　　பிறக்குமறு பதுமுவைகள் புறக்கருவி யெனுமே

என்பது தத்துவப் பிரகாசமெனு நூலிற்கண்டது.

தத்துவங்களின் தோற்றம் பரசிவம் ஆன்மாக்களிடத்தில் வைத்த கருணையினாலே அவர்களைப் புரக்க இச்சை கூர்ந்து குடிலையின் ஏகதேசத்தைக் கலக்க அதிலிருந்து நாத தத்துவமும் இதிலிருந்து விந்து தத்துவமும் தோன்றும்,

நாதம் என்பது இரண்டு எதிர்மறையான மின்சார சக்திகளாம். (அதாவது பாயுஞ் சக்தியும் தாங்குஞ் சக்தியும்) இவையொன்றோடொன்று சேரும்போது, ஒளியும் ஒலியுந் தோன்றுகின்றதுபோல (இதற்கு இடியையும் மின்னலையும் உதாரணமாகக் கொள்ளலாம்) சிவசூரியனுடைய கதிர் மாயையில் வந்து (மாயை—குடிலை) பொருந்தியவுடன் உண்டாகிய ஒலியேயாகும். நாதத்திலிருந்து விந்து தோன்றுமென்றதும் ஒலியானது ஆகாயத்திற் பரவுங்கால் உண்டாகிய வட்ட வடிவையேயாகும்.—விந்து—புள்ளி, வட்டம்.

விந்துவிலிருந்து அக்கரங்கள் (எழுத்துக்கள்) தோன்றுமென்பது விரிவடிவில் புள்ளியிலிருந்து ஒலிவடிவில் தொனியின் வட்டத்திலிருந்தும் எல்லா எழுத்துக்களுந் தோன்றுவதை வள்ளுவனாரும்

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு "

என வற்புறுத்தியுள்ளார். அகரம்-விந்து, நாத தத்துவத்திற்குச் சிவம் அதிபதியாகலான் இதற்குஞ் சிவமென்று பெயருண்டு. எவ்வெப்பெயர் எவ்வெத் தத்துவாதிகட்குளவோ, அவ்வப்பெயர்கள் அவரவர்களால் அதிட்டிக்கப்படுந் தத்துவங்களாம்.

நாதமென்பது எல்லாவுயிர்கட்கும் அறிவை யெழுப்புவித்து நிற்கிற ஞானமாகும். விந்து தத்துவமானது முப்பத்தைந்தாவது தத்துவமாம். இதற்குச் சத்தியென்று நாமமுண்டு.

விந்துவாவது எல்லாவுயிர்கட்கும் உண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கின்ற கிரியையாம் நாதமாகிய ஞானத்திற்கு நிறம் வெண்மை கிரியையுண்டுபண்ணும் விந்துவிற்கு நிறம் செம்மை. விந்து தத்துவத்திலிருந்து சாதாக்கியந் தோன்றும். இஃது முப்பத்து நான்காவது

தத்துவமாம். இதற்குச் சதாசிவமென்று பெயர். சாதாக்கியமாவது, ஞானக்கிரியைகளாகிய நாவிந்துக்களிரண்டும் சகமாய்க் கூடியது.

சாதாக்கிய தத்துவத்திலிருந்து தொழில் (கிரியை) மிகுந்து ஞானங் குறைந்ததாகிய ஈச்சுரம் தோன்றும். இது முப்பத்து மூன்றாவதாகும். இதற்கு மகேச்சுவரம் என்று நாமமாகும்.

ஈச்சுர தத்துவத்திலிருந்து ஞானமிகுந்து கிரியை குறைந்ததாகிய சுத்த வித்தை தோன்றும். இது முப்பத்திரண்டாவது எண்ணிக்கையின் தத்துவமாகும். இவ்வைந்து தத்துவங்களும் ஞானக்கிரியா, சொருப பேதங்களாகும் என்பதற்குச் சிவஞான சித்தியார் செய்யுள் வருமாறு:

" ஞானமே யான போது சிவன்றொழின் ஞானமொக்கின்
ஈனமில் சதாசி வன்பே ரீசனாந் தொழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போகம்
ஆனபே ரதிகா ரத்தோ டதிகர ணத்தனாமே "

என்பதாம்.

இங்ஙனமாக ஐந்து தத்துவங்களும் தோன்றும். இதற்குப் பிரமாணமாவது

" உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாதம்
உதிக்குமிகுங் குடிலைநனில் விந்துவரு நாதந்
தன்னிலதி னொளிவளருஞ் சதாசிவரா மவரிற்
தயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனான்
மன்னுவரிவ வகையைவர் வாய்மையுனான் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
மொழிந்திடுவ ரருங்கலைகண் மொழிந்து
ளோரே "

என்பது சிவப்பிரகாசம்.

இந்த ஐந்திலும் முதல்வன் உறைதலன் என்பதாம்.

ஞானக்கிரியைகள் அதிட்டிக்கையாலும், இவைகளி லுள்ள புவனவாசிகளுக்குச் சர்வஞ்ஞத்துவ சர்வ கிருத்தி யங்களை விளக்குதற்குச் சாதனங்களாகையாலும் இவை சுத்த தத்துவமென்றும், சிவதத்துவமென்றும், பிரேர காண்டமென்றும் பெயர் பெறும். இவைகளே மற்றவைக ளைத் தொழிற்படுத்துகையிலே பிரேரகாண்டமென்றது. பிரேரித்தல்—செலுத்தல்.

இவைகள் சிவபெருமானால் காரியப்படும். இவைக ளுக்கு முறையே சிவம், சத்தி, சதாசிவன், மகேசுவரன் உருத்திரன் என்னுமைவரும் கருத்தாவாவார்கள். முன்னே கூறிய விந்துதத்துவத்திலிருந்து சூக்குமாதி நான்கு வாக்குகள், ஐம்பத்தோரக்கரங்கள், எண்பத்தொரு பதங் கள் சப்தகோடி மகாமந்திரங்கள் வேதாகம புராண சாத்திரங்களும் விஞ்ஞான கலர். பிரளயாகலருக்குத் தனு கரண புவன போகங்கட்கும் தோன்றும். இவைகள் சுத்த மாயா காரியங்களாகும்.

கூறிய வாங்கியுங் கோலுமெ
    னக்கொச்சை வேந்தனெங்கு
மாறில னாகி மகிழ்ந்துட
    னிற்றலின் மற்றதுவும்
வேறின்மை சால விளம்பத்
    தகுமதன் பால்விளையு
மாறியல் பாம்தத்து வாதத்து
    வாகமத் தாய்ந்தனவே. 25

(இ-ள்) கொச்சை வேந்தன்—சீகாழிப்பதியின் கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரம்பொரு ளாகிய சிவபெருமான், கூறிய அங்கியும் கோலும் என— சொல்லப்பட்ட தீயும், தீக்கடைபோலும் (ஞெலிகோலும்) போல எங்கும் — எல்லாவுலகிடத்தும், மாறு இலன் ஆகி

மகிழ்ந்து உடன் நிற்றலின்—வேறாகத் தனிமையில் இல்லாதவனாகி திருவுளங்களித்து நிலைபெறுதலின் (வேறாய் உடன் ஆனான் என்பது திருமுறை) (அக்காரணத்தால்) மற்று அதுவும்—மற்றைய தத்துவப் பொருள்களும் வேறு இன்மை சால விளம்பத் தகும்—தனித்து வேறில்லாத தன்மையை மிகவும் எடுத்துச்சொல்லத் தக்கது ஆம். அதன்பால்—அத்தத்துவங்களிடத்து விளையும் ஆறு இயல் பாம்—தோன்றப் பெறுவது நெறியுடைத்தாம். தத்துவா தத்துவ ஆகமத்து—தத்துவதாத்து விகங்களாயவை ஆகம நூல்களாகிய சாத்திரங்களிடத்து, ஆய்ந்தன—நன்காராயப்பட்டவைகளாம். ஏ—அசைநிலை (எ-று)

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட்டு உணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

என்பது தேவாரம்.

தீக்கடைகோலில் எங்ஙனம் நெருப்பானது மறைந்து வியாபித்திருப்பது போன்று இறைவன் தத்துவங்களிடத்து உள்ளும் புறம்புமாயுள்ளான் என்பார். அங்கியும் கோலும் போலும் என்றார். உயிர்களிடத்து வைத்துள்ள கருணையினால் மகிழ்ந்திருக்கின்றான். பரமன் என்பது புலப்படுகின்றது. இறைவனும் இறைவியும் ஒற்றித்து நிற்கும் நிலை மேலே விளக்கப்பட்டது. பால் விளையும் ஆறு இயல்பாமத்துவா தத்துவம் ஆகமத்து ஆய்ந்தன—ஆறு இயல்பு ஆம் அத்துவா தத்துவம் ஆகமத்து ஆய்ந்தன—ஆறியல்பினையுடைய அத்துவாக்களையும் தத்துவ காலங்களையும் நூல்களிடத்து ஆராயப்பட்டனவாம். ஆறத்துவாக்களாவன: தத்துவம், கலை, புவனம், வன்னம், பதம் மந்திரம் என்பனவாம். இவற்றின் வழியே தத்துவங்கள் உண்டாம் என்பது புலனாகா நிற்கும். ஆய்ந்தன—ஆராயப்பட்டன. ஆகமம்—நூல்கள். விளம்பத்தகும்—

கூறத்தகும். விளம்பல்—கூறல், தகும்-தக்கதாகும் வேறின்மை—ஒன்றாந்தன்மையினையுடையது.

ஆய்ந்தவத் தத்துவ மைந்தா
வனசிவ தத்துவத்தோ
டேய்ந்தவச் சத்தி சதாசிவ
மீசனும் வித்தையுமென்
றோர்ந்தறி வித்தினுக் குண்ணெகிழ்ப்
பானறு சத்தியதிற்
போந்தேயு மங்குர மைம்முகக்
கோனென்று போற்றுவரே 26

(இ-ள்) ஆய்ந்த அ தத்துவம் ஐந்து ஆவன நூல்களால் நன்கு ஆராயப்பட்ட அந்தத் தத்துவங்கள் ஐந்து வகைப் படுவனவாம்.

அவை:— சிவம் தத்துவத்தோடு ஏயந்த அ சத்தி சதா சிவம் ஈசனும் வித்தையும் என்று—சிவதத்துவத்துடன் பொருந்திய சத்திதத்துவமும், சதாசிவதத்துவமும், ஈசுவர தத்துவமும், வித்தியாதத்துவமும் என்பனவாம் என்று கருதி. ஓர்ந்து அறிவித்தினுக்கு உள்நெகிழ்ப்பான் உணர்ந்து அறியப்பெறாநின்ற வித்தாகிய பீசத்திற்கு உள்நின்று இயக்குவிப்பான். நறுசத்தியதில் போந்து-நல்ல சத்தியுடன் கலந்ததனிடத்தில்வந்து; ஏயும்—பொருந்தும். ஐம்முகக் கோன் ஐந்து முகங்களையுமுடைய பரமேசுவரன். அங்குரம் என்று—முளையென்று. போற்றுவார் ஏ—ஞானநெறியுற்ற பெரியோர் போற்றித்துதிப்பர் எ—று.

அங்குரம்—முளை சத்தியும் சிவமும் கலந்திடின் எத் தொழிலும் வல்லதாம் இவ்விரண்டுங் கலந்தாலன்றி யியங்காவென்பதுணரல் வேண்டும்.

ஐம்முகங்களாவன:- ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவர், சத்தியோசாதம் என்பனவாம். படைத்தலாதி கிருத்தியங்களைப் புரிதற்குச் சக்திகள் வேண்டப்பெறும்.

" ஈறிலாதவள் ஒருத்தியேயைந்தொழி லியற்ற
வேறுவேறு பேர் பெற்றன "

என்பது திருவிளையாடல்.

இச்சத்திகட்குப் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியெனப் பஞ்சசத்திகளாவர். நியாயங்கள் பலவுள அவற்றுள் பீசாங்குர நியாயமெனவொன்று உண்டு. இந்நியாயம் வித்துமுந்தினதா, முளைமுந்தினதா (மரமுந்தினதா விதை முந்தினதா வென்றுங் கூறுவதுண்டு) இங்கு அந்நியாயம் பற்றியதன்று மாயா சத்தியாகிய வித்தினுக்கு முளை யாகவிருப்பான் பரமன் என்றும் இதன் காரணமாக வுலக முதலியவை தோன்றுகின்றதென்றுங் கூறப்பட்டுளது. ஓர்தல்—உணர்தல், போந்து—வந்து, ஏயும்—இயையும் இறைவனுடைய ஐந்து திருமுகங்கட்கும் நிறமும் வடிவும மந்திரமும் வெவ்வேறாகக் கூறுவர். இறைவன் அருவனும் உருவனும் அருவுருவனுமாயிருப்பான் அருவுருவத்திருமேனி சிவலிங்கவடிவு. உருவும், சந்திரசேகராதி இருபத்துஐந்து மூர்த்திகள் அருவும்—உருவில்லாதது இறைவனுக்கு இவ்வடிவுங்கள் கற்பிதங்களாம் ஞானத்திருமேனியுடையவனுக்கிங்ஙனம் நூல்நுவலுமாம்.

போற்றும் பரத்திற்பொ திகின்ற
ஞானக் கிரியையொத்துத்
தோற்றுஞ் சிதாசிவம் ஞானஞ்
சுருங்கித் தொழின்மிகுத்தல்
சாற்று மகேசமெய்ஞ் ஞானந்
தழைத்துத் தொழில்குறைதல்
மாற்றரும் வித்தை சிரபுர
நாதன் வகுத்தனவே. 27

(இ-ள்) போற்றும் பரத்தின் பொதிகின்ற ஞானம் கிரியை ஒத்து—துதிக்கப்பெறுகின்ற பரத்தின்கண் தங்கி நிறைகின்ற ஞானமும் கிரியையும் சமமாகித், தோற்றும்-புலப்படும் (உதிக்கும்) சதாசிவம், ஞானம் சுருங்கிசதாசிவம் ஆம் ஞானம் ஒடுங்கி, தொழில் மிகுத்தல்-கிரியை மிகுந்திருத்தல் (மிகவும் அதிகப்படல்) சாற்றும் மகேசம்—கூறப்படுகின்ற மகேசம் ஆகும், மெய்ஞ்ஞானம் தழைத்துத் தொழில் குறைதல்—உண்மையறிவானது தழைப்புற்றுக் கிரியை குறைதலானது மாற்றரும் வித்தை—மாற்றற்கு அரிய வித்தையாகும், (இவை சிரபுரப் நாதன் வகுத்தன ஏ—சிரபுரம் எனும் நாமந் தரித்த சீகாழிப்பதியில் கோயில் கொண்டருளிய பரமனால் வகுக்கப்பட்டவையாம். ஏ. அசைநிலை (எ-று)

இப்பாட்டானது தத்துவங்கள், சதாசிவதத்துவம், மகேச தத்துவம், வித்தியாதத்துவம் ஆயவற்றினைக் கூறிற்றாம். பொதிதல்—தாங்கல் மறைதல், உள்ளூறுதல் என்றுமாம் ஐந்து தத்துவங்களில் மூன்றன் இயல் இவையென முறை தெரிக்கப்பட்டது.

1. சதாசிவமானது:— குடிலையினின்று தோன்றும் ஞானமும் கிரியையும் ஒத்திட்டபோது இப்பெயர் பெறும்.

2. மகேசமாவது:— அறிவு (ஞானம்) ஒடுங்கி தொழில் மிகுந்த போது இப்பெயர் பெறும்.

3. வித்தையெனுந் தத்துவமானது;— அறிவு மிகுந்து தொழில் குறைதல் வித்தையெனப்படும் நாதன்—நாதவடிவாயிருப்பவன் பரம்பொருள் ஆம் என அறிக தோற்றம்—உண்டாதல். சாற்றல்—கூறல் மாற்ற அரும் — (அகரந் தொகுத்தல் விகாரம்) வேறுபடுக்கமுடியாத வகுத்தன — வகைசெய்யப்பட்டவை. தத்துவர்களின் தோற்றங்களைப் பற்றி மேலேயொருவாறு விளக்கப்பட்டுள்ளது.

வகுத்த வினைப்பயன் றுய்த்தற்
கணுக்கட்கு மாயையென்னத்
தொகுத்ததி னின்றுங் கலைவருந்
தோணிப் பிரானருளான்
மிகுத்துட னாகி மறைக்கு
மலத்தின் விருத்தி தன்னைப்
பகுத்தெழு விக்குந் தனைச்சிறு
பான்மையிற் பையநின்றே. 28

(இ-ள்) வகுத்த வினைப்பயன் துய்த்தற்கு அணுக்கட்கு-(ஊழான்) இறைவனால் வரையறுக்கப்பட்டு வகுத்த நல்வினை தீவினைப்பயன்களாகின்ற இத்துன்பங்களை நுகர்வதற்கு (அநுபவித்தற்கு உயிர்களுக்கு ஊட்டுவது. மாயை—மாயை யென்னுந்தத்துவமாம் மாயை என்ன தொகுத்து—மாயை என்று ஒரேசேரத்திரண்டு அதனின்றும் கலைவரும்—அம்மாயைத் தொகுப்பினின்றுங் கலை தோன்றும். தோணிப்பிரான் அருளால்—திருத்தோணிபுர மெனப் பெயரிய சீகாழிப்பதியினில் எழுந்தருளிய பெருமான் கருணையினால். மிகுத்து-அதிகரித்து. உடனாகி மறைக்கும் அதனோடு கலந்து மறைத் தலைப் புரியும். மலத்தின் விருத்திதன்னை—பாசங்களாகின்ற பந்தத்தின் தொழில் களைப் (விரிவான செயல்களை) பகுத்து—வகைப்படுத்தி, எழுவிக்கும்—எழுமாறு செய்யும் தன்னை சிறுபான்மையின் பைய நின்று ஏ-தன்னைச் சிறுவரவினால் மெல்ல நிலை பெற்று மறைக்கும் ஏ-அசை நிலை எ-று.

இப்பாடல் மாயையினின்று கலையுதித்து ஆன்மாக் கட்குப் போகங்களைப் புசிப்பித்துப் பாசகாரியங்களை வகைப்படுத்தித் தன்னைச் சிறுவரவினதாக மெதுவாக நின்று எழுதலைச் செய்யும் என்றபடி.

ஈச்சுர தத்துவத்தில் வசிக்கின்ற அட்ட வித்தியேச்சுவரர் களின் முதல்வராகிய அனந்ததேவர் மகேசரின் அதிகாரத் தைப் பெற்று வாயுவானது சமுத்திரத்தில் ஒருபிரதேசத்தை

விகாரப்படுத்துவதுபோல அசுத்தமாயையென்னுந் தத்துவந் தோன்றும் இதிலிருந்து காலம் நியதிகலை அராகம் என்னுந் தத்துவங்கள் தோன்றும். இவற்றுள் கலையிலிருந்து வித்தையும், இதிலிருந்து அராகமும் தோன்றுமென்றுங் கூறுவர். அராகமும் உடன்றோன்றுமென்பது சிலர் துணுபு. இவ் வைந்து தத்துவங்களின் சமூகமே புருடதத்துவமெனப்படும்,

இவற்றின் கரணமாகிய காரியமாயையும் இவற்றுடன் கூட்டி ஆக ஏழு தத்துவங்களையும் வித்தியாதத்துவம், சுத்தா சுத்ததத்துவ போககாண்டம், அல்லது யோகசயித்திருகாண்டமென்றுங் கூறப்படும்.

இவையேழும் ஆன்மாக்கட்குச் சிறிதறிவை விளக்குதற்குச் சாதனமாகையால் சுத்தமும், சூக்குமரூப வாயிலாக குணரூபமாகிய சுக துக்க மோகங்களை யுண்டாக்குவதற்குச் சாதனமாகையால் அசுத்தமுமாதலாற் சுத்தாசுத்தமென்றது.

இவை உயிர்கட்குச் சகாயமாய் நின்று போகங்களையுண்டாக்குவதால் போககாண்டம் என்றும் அவைகளைப் புசிப்பிக்கையால் போகசயித்திரு காண்டமென்றுங் கூறப்பட்டது. போகசயித்திரு—புசிப்பிக்கிறது.

இவையேழில் காரிய மாயையை நீக்கிக் கலையிற்றோன்றும் பிரகிருதியைக் கூட்டி யுரைப்பாருமுளர். அது பொருந்தாதாகும். ஏனெனில், தத்துவங்களுக்குப் புவனங்களினடைவு கூறும்போதும் ஏனையவற்றிற்கு உரைத்ததுபோல் பிரகிருதியைக் தனியே புவனங்கள் கூறப்படாமையானும் பிரகிருதியைக்குணத் தத்துவத்துடன் கூட்டி, அதற்குப் புவனங்களைக் கூறியிருத்தலானும், கலாசோதனை செய்யுமிடத்துப் பிரதிட்டா கலையிற், பிரகிருதியையும், வித்தியா கலையின் மாயையுங் கூட்டிச்

சோதிக்கப்படுதலானும் பிரகிருதிக்கும் புருட தத்துவத்தை இருபத்தைந்தாவது தத்துவமென்று நூல்களிற் கூறியிருத்தலின் பிரகிருதியைத் தனியே ஒரு தத்துவமாகக் கொள்ளின், புருட தத்துவம் இருபத்தாறாவது தத்துவமெனப்பட்டு அவற்றோடு மாறுபடுதலானும், பிரகிருதிக்குங் குண தத்துவத்துக்கும் சிறிதே பேதங் கூறப்படுதலானும், மாயா தத்துவத்துக்கு அட்ட புவனங்கள் கூறப்படுதலானும், அவற்றின் அதிபதிகளாகிய மண்டலவர் எண்மரும், மாயையில் வசிக்கையாலும், மாயையை ஓர் தத்துவமாகக் கொள்ளாவிடின் மாயா தத்துவத்துக்குரிய எட்டுப் புவனங் களுக்கும் இடமின்மையானும், அவற்றை வேறு தத்துவங் களில் அடக்குவது பொருந்தாமையானும், மாயையும் பிரகிருதியையும் தனித்தனியே சேர்த்து இரண்டு தத்துவங் களாகக் கொள்ளின் தத்துவம் முப்பத்தேழு ஆகின்ற தாலும், தருக்க சங்கிரகத்தில் புரியட்டகத்திற்கு இலக் கணங் கூறுமிடத்து "புரியட்டகமாவது புருடன்றோறும் நியதமாகப் படைப்புக்காலந் தொடங்கி மகாப் பிரளம் வரையில் இருக்கின்ற பிருதிவி முதல் கலை வரையில் முப்பது தத்துவ வடிவமான அசாதாரணமாகிய சூக்கும தேகம்" என்றவிடத்துக் கலை முப்பதாவது (இஃதுணர்த்து முறைமையில்) தத்துவமாகக் கொண்டிருப்பதால் முப்பத் தொன்றாவது தத்துவம் மாயையெனப் பெறுதலானும், பிராசாத மந்திரத்தின் கலைகளுக்குரிய தத்துவங்களின் எல்லை குறிப்பதில் மேதை கலைக்கு மண்முதல் பிரகிருதி பரியந்தமென்றும் விடகலைக்கு மாயை யென்னுங் கூறப் படுதலானும், பிரகிருதியை வித்தியா தத்துவத்தில் சேர்க்க முடியாதென்பதையும், காரிய மாயையென்று ஒரு தத்துவம் அவசியங் கொள்ள வேண்டுமென்பதையும் அறிக.

பையர வின்விடம் பாலடி
சிற்பெய்து பாத்திரத்திட்
டையமி லாரயில் விப்பது
போல வணுக்கடம்மை

வெய்ய வினைப்பய னின்னமு
தாய்விழை வித்தயிற்று
மையுறு சிந்தை மயக்கிய
மாயா விகாரங்களே (28)

(இ-ள்) மை அரவின் விடம்—படத்தினையுடைய பாம்பினது நஞ்சினை, பால் அடிசில் பெய்து—பாற்சோற்றினிடத்து போட்டுக்கலந்து, பாத்திரத்து இட்டு—பாண்டத்திலிட்டுப்படைத்து, ஐயம் இல்லார் அயில்விப்பது போல-சந்தேகஞ் சிறிதும் இல்லாதவரை யுண்பிப்பது போல அணுக்கள் தம்மை—பசுக்களாகிய உயிர்களை, வெய்ய-கொடிய, வினைப்பயன்—தீவினையின் பயனானது, இன் அமுதாய் விழைவித்து—இனிய அமிருதமாகிவந்து விரும்புதலுறச் செய்து, அயிற்றும்—நுகருமாறுசெய்யும், மைஉறு சிந்தை மயக்கிய-வயங்குதலுற்ற மனத்தினை, மயங்குவித்த, மாயாவிகாரங்கள் ஏ—மாயாகாரியங்களாகின்ற செயல்கள் எ-று.

மாயா—மாயை எனவரும். மாயையானது தான் விரிந்து நின்று ஆன் மாவினைச் சுருக்கி மயக்குவது விகாரங்கள்—செயல்கள் பாலடிசில் பாற்சாறு பெய்து—உள்ளீடாகக்கலந்து. பாலடிசினையுடைய பாண்டத்தில் நஞ்சு கலத்திருப்பினும் பாற்சோறாகப் பார்ப்பாருக்குப் புலப்படல் கண்கூடு (பிரத்தியக்ஷம்) வினைகள் தீவினையும் நல்வினையுமாய், இவற்றின் பயன் பயன் இன்பத் துன்பங்களாம். மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினையும் தீவினையும் ஒருவனைப் பந்தமுறுத்தற்கண் இருப்பு விலங்கும் பொன் விலங்கும் போல்வது.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது திருக்குறள்.

இருவினை யுவர்ப்புற்ற வழியே வினை நீக்கத்திற்கேது வாகும். அதுகாலை இருவினை யொப்பும் மலபரிபாகமும் சத்திநி பாதமும் உண்டாகும். விடம்—நஞ்சு. வெய்ய—கொடிய, இனிமை அமிர்து—இனிமையாகிய அருமிதம் அமுதமென வாயது. அமிருது—மிருத்துவைப் போக்குவது. விழைவு—விருப்பம். மை—மயக்கம். சிந்தை—சிந்திப்பது (நினைப்பது), மனமாம்.

கார்மரு வும்பொழிற் காழிப்பி
ரான்க ணொழியவொன்றும்
வாரல மாயா விகாரமென்
றேயறி வான்கலைப்பாற்
பேரலர் கூர்புத்தி நோக்கப்
பிறங்கிருட் சில்சுடர்போல்
ஏரொளி வித்தைவந் தெய்துங்
கலைபோ லிசைந்துநின்றே" (30)

(இ-ள்) கார்மருவும் பொழில் காழிபிரான் கண்—நீருண்ட மேகங்களானவை தங்குதலால் மிகவும் இருண்ட சோலைகள் சூழ்ந்த வளமுற்ற, சீகாழிப்பதியினிடத்து. ஒழிய—நீங்க, ஒன்றும் வாரல மாயா, விகாரம்—சிறிதும் வராமாட்டாவாம், மாயையின் செயல்களானவை; என்று ஏ அறி—என்றே யறிவாயாக, வான் கலைப்பால்—சிறந்த கலா தத்து வத்தினிடத்து, பேர் அலர் கூர்புத்தி நோக்க—பெரியதாய் விரிந்த மிக்க அறிவானது கருதிப் பார்க்க, பிறங்கு இருள்—விளங்கா நின்ற இருளானது. சில் சுடர் போல்—சிலவாகிய ஒளியினையுடைய தீபங்களைப்போல், ஏர் ஒளி வித்தை வந்து எய்தும், அழகிய ஞானவொளி யாகிய வித்தையானது வந்தடையப் பெறும் கலைபோல் இசைந்து நின்று (ஏ) கலையென்னும் தத்துவம்போல செயல்படும்போது இயங்கி நிலை பெற்று ஏ. அசைநிலை (எ-று).

விளக்கம் :— புருடன் அராகம் வித்தை, கலை நியதி காலம் மாயை என்பன ஏழும் வித்தியா தத்துவங்கள் எனப் படும் இவற்றுள், கலை வித்தை அராகமாகிய மூன்று தத்து வங்களும் உள் அந்தக்கரணம் எனப்படும் கலைபோல் இசைந்து நின்று வித்தை வந்து எய்தப்பெறும் எனவினை முடிவு காணல் வேண்டும் விகாரம்-செயல் (வேறுபடுப்பது) இறைவனிடத்து முன்னின்றபோது மாயாகாரிங்கள் செயல் படமாட்டாவாம் சில்சுடர்—சிறிதாகப் பிரகாசிக்கு நட்சத் திரங்களின் ஒளி சுடர்—விளக்குமுமாம் ஏர் ஒளி—அழகிய பிரகாசம், ஒழிய—விலகி நீங்க நின்று—நிலைபெற்று பிறங் கல்—விளக்கல் அலர்—விரிவு.

நின்றும் இறந்து மெதிர்வது
மாய்நிகழ் பல்பொருளோ
டொன்றிய காலமு மாயைதன்
பால்வரு முற்றதனால்
நன்று மெதிர்வது மாகிய
போக நயந்த ணுக்கட்
கென்றுஞ் செலக்கட் டலிற்கால
மாமென் றியம்புவரே. 31

இப்பாடலானது காலதத்துவங் கூறுகின்றது காலம் மூன்றாகத்து இறப்பும் எதிர்வும், நிகழ்வும் என.

(இ-ள்) நின்றும் இறந்தும் எதிர்வதும்—நிலைத்து இறப்பும், எதிர்வும், ஆய்—ஆகி, நிகழ்பு—நிகழ்வும், (இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமும்) அல்பொருள் ஓடு ஒன்றிய காலமும்— அல்லாத பொருளுடன் பொருந்திய எதிர்மறையுமாகிய காலமும், மாயைதன்பால் வரும்— மாயாதத்துவத்தினிடமாக வந்து எய்தும், உற்றதனால் —இங்ஙனம் அடைந்ததனால், நன்றும்-பெரிதும், எதிர்வும் —எதிராக வருவதும் ஆகிய, போகம்—நுகர்வினை, நயந்து —விருப்பி, அணுக்கட்கு — அணுக்களாகிய உயிர்கட்கு

(ஆன்மாக்கட்கு) என்றும்-எப்போதும், செல கட்டலில்—இயங்கக் கட்டுப்படுத்தலினால், காலம் ஆகும் என்று இயம்புவர் ஏ—காலதத்துவமாகும் என்று கூறுவர் அறிந்தோர் (ஏ—று) ஏகாரம் அசைநிலை.

முக்குணங்களான் தொழில் நிகழ்வுறும் தொழிலது முற்றுகையை இறப்பு என்றும் தொழில் எதிராவரலை எதிர் காலமென்றும் தொழிலது நிகழ்ச்சியை நிகழ்கால மென்றுங் கூறப்படும். காலம் இறப்பும் எதிர்வுமின்றி (கணத்துக்குக்கணம்) நிகழ்வு என்பது ஒன்று இன்றெனவும் ஆகவே இரண்டேயாகும். மூன்றாவதாக ஒருகாலம் வேண்டாவென்றுஞ் சாதிப்பர். கண்கூடாக ஒருகாரியம் நிகழப்பெறலை நிகழ்வெனக்கொண்டு மூன்றாக்குவர். ஆகவே இறப்பினையும் எதிர்வினையும் ஒன்றாக்கி நிகழ் வினைப்பின் சேர்த்து எண்ணுவர்.

"இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே"

என்பர். இங்ஙனம் ஒருவாறு காலதத்துவங்கணிக்கப் பெற்றது

இயம்புஞ் சுகதுக்க மோகமென்
றின்னே யெழுமதியை
வயம்பெற நோக்குழி வாய்க்குங்
கருவிய தாகும்வித்தை
பயம்பெறு முக்குணப் பான்மையி
னால்வந்த பல்பொருளை
நயம்பெற நோக்கும் புந்தியி
னாலென்று நாட்வரே. 32

இப் பாடல் முக்குணங்களான் வந்த செயலை அறிவு அறியும் வகை கூறினார். ஆயிற்று,

(இ-ள்) இயம்பும் சுகம் துக்கம் மோகம் என்று நூல்களினாற் கூறப்பட்ட இன்பமும் துன்பமும் மயக்கமும் (விரும்பலும்) ஆயவைகளைப் பற்றிக் கருதி, இன்னே — இப்பொழுதே எழும் மதியை—எழுகின்ற அறிவினை, வயம் பெற நோக் குழி—வெற்றியுண்டாக (விளக்கமுற) ஆராய்கின்றவிடத்து, வாய்க்கும் கருவியது ஆகும்—விளக்கமுறும் கருவிகளிடத்தது ஆகும். (கரணம்), வித்தை பயம் பெறு முக்குணப் பான்மையினால் வந்த—வித்தையென்னும் தத்துவத்தினிடத்துத் தோன்றப் பெறும் இராசத சாத்துவிக தாமதங்களாகின்ற முக்குணங்களின் தன்மையினால் உதித்த. பல் பொருளை-பலவகைப்பட்ட பொருள்களையும் நயம் பெற-நன்மை யுண்டாக, நோக்கும்—குறித்துணரும். புந்தி (புத்தி) யினால் என்று-ஞானத்தினால் என்று. காட்டுவர். ஏ—அறிஞராயினார். மாணவர் தமக்கு ஐயம் திரிபு அறியாமை யென்னும் மூலகைக் குற்றங்களும் நீங்கத் தெளிவியா நிற்பர். ஏ. அசைநிலை

சுக துக்கங்களை மயக்கமெனக் கொள்ளும் மதியை எனவும் பொருள் கோடலுமாம் நல்வினையினால் சுகமும் தீவினைப் பயனால் துன்பமும் வரல் இயற்கை இவ்விரு வினைகளும் பிறவிக் கேதுவாகும் நல்வினைப் பயனால் சுவர்க்க வுலகின்பமும் தீவினைப் பயனால் நிரயத்திடைப்புக் குழலும் துன்பமும், இவை முற்றியபின் பிறத்தலும் இறத்தலும் உண்டாம். ஒருவனைப் பந்தமுறுத்துதற்கண் நல்வினையும் தீவினையும் மயக்கத்தைப்பற்றிவரும் என்பது குறட் கருத்து. இருள்சேர் இருவினையென வியம்புதலை நோக்கல் வேண்டும.

வித்தியா தத்துவமேழனுள் கலை வித்தை அராகம் என்னும் மூன்றும் உள்ளந்தக் கரணம் எனப்படுதலால் இம் மூன்றும் பெரிதும் சம்பந்தமுடையவையாகும். பிரகிருதி மாயா காரியமானது மாயா தத்துவத்தில் உறைகின்ற பிரளயா கலராகிய உருத்திரர்களில் முதல்வரான சீகண்ட ருத்திர தேவ நாயனார் அனந்த தேவர் அதிகாரத்

தைப் பெற்று முன்னே கூறிய கலையென்னும் தத்துவத்தைக் கலக்க மூலப் பிரகிருதி யென்னும் முக்குண சொரூபங்களாகிற மூலப்பகுதி தோன்றும் இவ் விவரம் சித்தாந்த சாத்திரத்தில் விளங்கக் காண்க.

நாட்டிய மாயையி னின்றுநற்
காலத் தொடுநியதி
யீட்டிய வல்வினைக் கெய்தும்
பயனியல் பாயவற்றிற்
கூட்டியு மல்லன நீத்துங்
குறிப்பால் வரைந்து நிற்குங்
காட்டிய மாயைக் கிரண்டுமல்
லால்வழிக் காண்பரிதே. 33

(இ-ள்) நாட்டிய மாயையின் நின்று—நன்கு நிலையுறத் தெளிவிக்கப்பட்ட மாயை யென்னுந் தத்துவத்தினிடமாக நின்று, நல்காலத்தொடும் நியதி—நல்ல காலமும் நியதியும் ஆகிய இரண்டு வித்தியா தத்துவங்கள், ஈட்டிய-தோன்றிய (தொகுத்த) வல்வினைக்கு எய்தும் கொடிய நல்வினை தீவினைகளை அடையும், பயன்—பயனை, இயல்பாய்—இயல்புஆகி (தன்மையாய்) அவற்றிற்கு—ஆன்மாவாகிய வுயிர்கட்கு, ஊட்டியும்-உண்பித்தும் (நுகருமாறு செய்தும்) அல்லன நீத்தும்—இவ்வினையல்லன வற்றினை விலக்கியும், குறிப்பால்—நோக்கால், வரைந்தும்—எல்லைப்படுத்தியும், நிற்கும்-நிலை பெறும் ஆம், காட்டிய மாயைக்கு-இவற்றினைப் புலப்படுத்தியுள்ள மாயா தத்துவத்திற்கு இரண்டும் அல்லால்—மேலே குறிக்கப்பட்ட இரண்டு தத்துவங்களேயல்லாமல், காண்பு — காண்டல், அரிது—அருமையுடைத்தாம். ஏ. அசை நிலை (எ-று)

காலமும் நியதியும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு வினைகளைப் புசிக்குங்காலமும் எல்லையுமாகி நிலை பெறும் வல்வினை, பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமான வலியசெயல்கள், ஈட்டுதல்—ஆர்ச்சித்தல் (தேடுதல்)

இயல்பு—இயற்கை. பயன்-நல்வினைத் தீவினைகளின் பயனாகிய இன்பமும் துன்பமும், ஊட்டியும் அல்லன நீத்த லாவது - பழவினைப் பயன்காரணமாக நுகரக் கடவன வற்றை நுகருமாறு செய்வதும் நுகரக்கடவன அல்லாதன வற்றினை யொருவச் செய்வதும் ஆம் குறிப்பால் வரைத லாவது இலட்சியமாயவற்றினிடத்து அளந்தன போகம் அவரவராற்றால் என்றவாறு வரையறைப்படுத்தலாம். காண்பு—காண்டல், அரிது—கூடாது ஏ—ஈற்றசை மாயை யானது காலமும் நியதியொடு பட்டே இயங்கும் எனல் புலப்படுக்கப்படுகின்றது.

காணப் படுவன வித்தையிற்
கண்டுழிக் கண்ட தெல்லாம்
பேணித் தனதெனும் பின்னா
விழையும் வரைவின்றியே
பூணப் புணர்ப்ப தராகம்
பொதுமையிற் றோன்றுமென்ப
வேணிப் புணர்கஞ் சுகம்பஞ் +
தாமென்றி லையந்தனவே (34)

இப்பாட்டானது பஞ்சகஞ்சுகம் இதுவென்பதும் அராகத்தினியல் இது வென்பதும் தெரிவிக்கின்றது.

(இ-ள்) காணப்படுவன வித்தையில் கண்டுழி—கண் ணினுக்குக் காணப்படுவன அனைத்தும் வித்தையெனுந் தத்துவத்தினிடமாகக் கண்ட இடத்து, கண்டது எல்லாம்- காணப்பட்டவை அனைத்தும், பேணி—காமுற்று (விரும்பு தலைப் புரிந்து) தனது எனும்-தன்னுடையது என்று கருது வதும், பின் ஆ—பின்னருமாக, விழையும்—விழைதலைச் செய்வதும், விரைவு இன்றி ஏ—எல்லையில்லாதபடி, பூண— மேற்கொள்ளுதலை வியற்ற, புணர்ப்பது—கொண்டு கூட்டு வது, அராகம்—அராகம் என்னும் தத்துவப் பகுதியிடத்தது ஆகும், பொதுமையில் தோன்றும் என்ப—அறிஞராயினார் இது சாதாரணமாக உதிக்குப் பெறும் என்று கூறுவர். ஏணி

புணர் பஞ்சகஞ்சுகம் அது ஆம் என்று இயைந்தன ஏ-அழகியதாகக் கூட்டப்பெற்ற பஞ்சகஞ்சுகமதாகும் எனக் கூறுவர்—பொருந்தியனவாம் ஏ-அசை நிலை. காணப் படுவனவாகிய பொருள்கள்—அறிவினுக்குப் புலனாவனவும் கண்களுக்குப் புலனாவனவெனவும் விருவகைப்படும். இவை வித்தையெனுந் தத்துவ வாயிலாகக் காணப்பெற்றவிடத்து அகங்கார மமகாரங்களாகின்ற யான் எனது என்னும் பெற்றிமையுற்று மனம் நெகிழப் பெறும். அகப்பற்றும் புறப்பற்றுமாகிய விரண்டு வாயிலான் தன்னுடைய பொருட்கண் செலுத்தப் பெறும் பற்றும், பிறருடைய பொருட்கண் செலுத்தப் பெறும் ஆசையும் ஓர் வரையறைக் குட்பட்டிடாது அவற்றினை மேற்கொள்ளுமாறு கொண்டு கூட்டுவது எதுவோ? அதுவே அராகம் எனப்படும். ஒரு பொருளிடத்துச் சிறப்பும் பொதுவுமாகப் பற்று வைத்தல் சகசம் (இயற்கை). ஈண்டு பொதுமையிற்றோன்று மென்று கூறல் அறிஞர்தம் முடிபு ஆம். இதனைப் பஞ்ச கஞ்சுகம் என்றது ஐந்து வகையாகச் சென்று நுகர்வுறுமாறு ஒன்று பட்டியைந் திருத்தலையாம். ஏ-அசை நிலை. இயைந்தன—அமையப் பெற்றவை, பொதுமை—சாதாரணம் என்ப வென்பது பலரறி முற்றுவினை என்னுரைப்பார்கள் எனப் பொருள் படலால்.

காலம் நியதி கலை வித்தையராகம் எனபனவே ஒன்று கூடியமைந்தனவே) பஞ்சகஞ்சுகமெனப்படும் எனவை யாய்ந்து கொள்க.

இயைந்தவித் தத்துவ மைஞ்சினு
    மெஞ்சா வகைப்பிணிப்புண்
டுயந்துழிப் பின்னைப் புருடனென்
    றுந்தத் துவமதென்னு
முயர்ந்தவ ரோதுவ ரோதுங்
    கலையினின் றுற்பவிக்குங்
குயந்தரும் மூலப் பகுதிய
    தாகுமென்று கூறுவரே (35)

இப் பாடலானது, புருட தத்துவமாவது ஈதென்றும், கலா தத்துவத்தினின்றும் தோன்றுவது இதுவென்றும் வரையறுக்கின்றது.

(இ—ள்) இயைந்த இத்தத்துவம் ஐஞ்சினும் எஞ்சாத வகை பிணிப்புண்டு பஞ்ச கஞ்சுகமாகப் பொருந்திய இந்த ஐந்தினும் எவ்வாற்றானும் குறையாவகைக் கட்டப்பட்டு நின்றவிடத்து பின்னை புருடன் என்றும் தத்துவமது என்னும் பின்னர் புருடனெனவும் தத்துவமெனவும், உயர்ந்தவர் ஓதுவர்—ஞானசாத்திமாதியுணர்ந்து உயர்ந்த நிலையுற்று விளங்கா நின்ற மேலோர் நன்குவிளக்க முறக்கூறுவர் ஓதும்கலையினின்றும் உற்பவிக்கும் — இறைவனாலும் இறைவனருள் வழிப்பட்ட முனிவரானும் கூறப்பெறும் கலையினின்றும் தோன்றப் பெறும், குயம்தரும் மூலம் பகுதியது ஆகும் என்று—தூயவாயவற்றினைத்தரும் மூலப் பகுதியாகிய பிரகிருதியது ஆகும் என்று கூறுவர்—அறிஞர் உரைப்பர் (எ—று) ஏ—அசை நிலை.

புருடதத்துவமாவது காலம் நியதிகலை வித்தை அராகமென்னும் ஐந்துடனாயதாகும் எஞ்சாவகைப் பிணிப்புறலாவது—இவ்வைந்தும் ஏற்றத் தாழ்வின்றியே சமமாய் ஒன்றுகூடி கட்டுப்பாடுற்று நிற்றலாம். உணர்ந்தவர், சரியையாதி நிலைகளினின்று முறையே உயர்ந்து ஞானநிலையுற்ற மேலோர் ஆவர். இதனால் எப்பொருளுங்கலையினின்றே தோன்றுமெனல் வியக்தமாயிற்று. குயம் எனும் பலபொருள் ஒரு சொல்லுக்கு ஈண்டுப் பொருள் தூய்மை என்பதாம் மூலப்பகுதி—குடிலை மூலப் பிரகிருதியாம் பகுதி-பிரகிருதி யெனுந்திரிபு பகுதியது பகுதியெனும் பொருளது ஆகும் என்பது ஆம் எனவாயிற்று குயம்தரு—தூய்மையினைத் தருகின்ற ஏ ஈற்றசை.

கூறிய மூலப் பகுதியிற்
றோன்றுங் குணமவைதாந்
*தேறிய சாத்திக ராசத
தாமத மென்றுசெப்பு
மூறியல் முக்குண மொத்தவை
மூன்று முயர்விழிவற்
றேறியக் காற்புத்தி தத்துவ
மாகுமென் றெண்ணுவரே. (36)

(இ-ள்) கூறியமூலம் பகுதியில் தோன்றும் குணம் அவைதாம்—மேலேகூறப்பட்ட மூலமாகிய பிரகிருதிமாயையாகின்ற குடிலையின்கண் உற்பவிக்கும் குணங்களானவை தாம், தேறிய சாத்திக ராசத தாமதம் என்று—தெளியப் பெற்ற சாத்துவிகமும் இராசதமும், தாமதமும் என்று செப்பும்—கூறப்பெறும். ஊறு இயல் முக்கணம் ஒத்து—பரிசவுணர்ச்சியின் இயலுடைய மூன்று குணங்களும் ஒத்து (ஏகோபித்து) அதை மூன்றும் உயர்வு இழிவு அற்று—அந்த மூன்று குணங்களும் உயர்வுடைமையும் தாழ்வுடைமையும் இல்லாமல் தேறியகால்—தெளிவுற்றபோழ்து புத்தி தத்துவம் ஆகும் என்று—புத்தியென்னுந் தத்துவமாகும் என்று எண்ணுவர் ஏ—அறிவுடைய ராயினார்கருது தலைச் செய்வார்கள் என்றபடி ஏ—அசைநிலை

எண்ணல்கருதுதல் பிரகிருதி மாயாகாரியமாவது மாயா கற்பத்தில் வசிக்கின்ற பிரளயகலராகிய உருத்திரர்களில் முதல்வரான சீகண்டருத்திர தேவநாயனார் அனந்த தேவர் அதிகாரத்தைப்பெற்று முன்னர்க் கூறிய கலையென்னுந் தத்துவத்தைக் கலக்க மூலப்பிரகிருதி (மூலப் பகுதி) யென்னும் முக்குணச் சொரூபங்களாகிற மூலப் பகுதிதோன்றும். இந்தச் சீகண்டதேவர் பிரகிருதி மாயா காரியாதி காரியாகையால் இவருக்கு நீல நிறத்தில் ஓர்

* சாத்திவிராசதம் என்பது. (பி. பா.)

நட்சத்திரமான வெகுமான வுருவம் கொடுக்கப்பட்டி ருப்பதையும் இவர் ஈட்டியாற்கலா தத்துவத்தைக் குழப்பு வதையும் சித்தாந்தப் படத்திற் காணலாகும்.

பிரகிருதி மாயா காரியாதி காரியாகிய சீகண்டரைக் குணதத்துவ நிலையராகிய சீகண்டர் என வெண்ணி மயங்குதல் கூடாது. தத்துவவாசிகளுக்குத் தத்தம் வாசஸ் தான முதல் கீழுள்ள தானங்களுக்கே அதிகாரமுண்மை யாலும், கீழ்த்தத்துவ வாசிகளுக்கு மேல் தத்துவ வாசிகள் உயர்ந்தவர்களாகையாலும் பிரகிருதிக்குமேல் உயர்ந்த மூன்றாவது தத்துவமான கலையைப் பிரகிருதி குண தத்துவ நிலையராகிய சீகண்டர் கலக்க எவ்விதத்தினும் முடியாதென வறிதல் வேண்டும். ஆதலாம் மாயா தத்துவ நிலையராகிய சீகண்டரே கலா க்ஷோபிதரென்பது துணிபு, (க்ஷோபிதம்—பிரகாசம்.) ஆகவே ஈச்சுரதத்துவ நிலைய ராகும் அட்டவித்தியேச்சுரரி லொருவரான சீகண்டர். மாயாதத்துவ நிலையராகிய சீகண்டர், பிரமாண்டத்துள் நிலையராகிய சீகண்டர் எனச் சீகண்டர் நால்வர் உண்டு என்பதையறிக.

இங்ஙனம், மாயதத்துவ நிலையராகிய சீகண்டரால் கலாதத்துவத்திற்றோன்றிய பிரகிருதியானது முக்குணங்க ளின் சொரூபம் வியக்தமாகாத அவதாரமானதால் முக் குணங்களின் நிறமான வெண்மை, செம்மை, கருமையாகிய மூன்று நிறங்களால் கலந்த நிறத்தைச் சித்தாந்தப் படத் தில் பெற்றிருக்கின்றது.

மேற்கண்ட முக்குணங்களும், பிரிந்துத் தம்முள் சம மாய் நின்ற அவதரம், சித்தமென்றும், ஒருகுணம் மிகுந்த அவதரம், அஃதாவது சாத்துவீகம் மிகுந்து மற்றவை குறைந்த அவதரம் புத்தியென்றும் பெயர்பெறும். சித்தாந்தப் படத்தில் இவ்விவரணம் நன்கு தெரிவிக்கப் பட்டுள்ளது ஆண்டுக்காண்க,

சித்தம் மனதிற் றோன்றுவதென்று கூறுவர், பௌட்கராகமம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் முதலிய ஞானசாத்திரங்களில் குணதத்துவத்திற்குத் தோற்றங்கூறிச் சித்தத்திற்குத் தோற்றங் கூறாமையானும், சிவஞான சித்தியார் என்னும் நூலின்கண்,

"சித்தமா மவ்வியத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்" எனக்கூறி யிருத்தலானும் தத்துவவிளக்கமெனு மிந்நூலில் முக்குணங்களும் சமமாய் ஒத்ததே சித்தம் என்பதனாலும் புவனங்களின் அடைவு கூறும்போழ்து ஏனையவற்றிற்குக் கூறியதுபோல் மனத்திற்குப்பின் சித்தத்திற்குப் புவனங் கூறாமையானும், தத்துவங்களின் உயரமும் புவனங்களின் அடைவுங் கூறுமிடத்துக் குணதத்துவத்திற்கு உயரமும், புவனமுங் கூறுகையான் சித்தம் மனதிற் றோன்றுவதெனக் கொள்ளின் குணதத்துவத்தைத் தனித்தொரு தத்துவமாகக் கொள்ளவேண்டியதாகின்றமையானும், அவ்வாறு கொள்ளின் ஆன்மதத்துவம் இருபத்துநாலென்பதற்கு மாறாகி இருபத்தைந்தாகின்றமையானும், பௌட்கரம் ஆறாவதும்சத்துவதத்துவப்படலம் சுலோகம் இருபத்தேழரையில் அசிருதர் முதலியோர்க்கு குணதத்துவத்திலிருப்பெனக் கூறுகையானும், புத்தியிற்றோன்றிய அகங்காரத்தின் சத்துவகுணமாம் சமானமனதில் முக்குணவடிவமான சித்தந் தோன்றுமென்பது எவ்வாற்றானும் பொருந்தாமையானும், தத்துவரூப முதலிய அநேகக் கலைகளிலும் ஆகமாந்தரங்களிலும் தத்துவங்களுக்கு நிறமும் தொழிலுங் கூறுங்கால் மனதுக்குப்பின் சித்தத்துக்குக் கூறாமையானும் மற்றும் பலவற்றானும் சித்தம் மனதிற்றோன்றுமென்பது பொருந்தாமையும், குணதத்துவத்தின் கூறே சித்தமென்பதும் அறிதற்பாலதாகும்.

பிரகிருதி தத்துவம் குணசொரூபங்களாகத் தோன்ற அந்தக் குணங்கள் தம்மிலொத்தவிடம் சித்தமென்பதற்கும் அதிலே யொருகுணம் ஏறினவிடம் புத்தியென்பதற்கும் இத் தத்துவவிளக்கமே போதிய சான்றாகும்.

ஊறிய முக்குணம் எனப்பாடங்கொண்டு நன்கு சமமாய்த் தோய்ந்த முக்குணம் எனப்பொருள் கோடலுமொன்று. சாந்திவிராசதம் எனப்பாடமோதலுமுண்டு. அவ்வாறாயின் சாத்து விராசதம், சாத்தி விராசதம் என வெதுகை நோக்கித் திரிக்கப்பட்டதாகும். சாத்திரவுரைகாரர் யாவரும் இப்பாடலைப் பலவிடத்தும் எடுத்துக் காட்டா நிற்பர்.

எண்ணிய புத்தியில் முக்குணஞ்
சீரியல் பாற்கரந்து
நண்ணிய வாங்கார மூன்றுரு
வாமவை நாட்டியபேர்
தண்ணிய தைசத வைகாரி
யந்தரு பூதாதியென்
றண்ணல் வகுத்த முதனூ
னெறிமுறை பாய்ந்துகொள்ளே. 37

இப்பாட்டு ஆங்காரம் இத்துணைத்தென வரையறை செய்கின்றது.

(இ-ள்) எண்ணிய புத்தியில்—இங்ஙனம் ஆராய்ந்து எண்ணப்பட்ட புத்தியென்னுந் தத்துவத்தில், முக்குணம்—மூன்று குணங்களும், சீர் இயல்பால்கரந்து—சிறந்த இலக்கணத்தால் (தன்மையினால்) மறைந்து, நண்ணிய ஆங்காரம் மூன்றுஉருஆம்—நெருங்கிப் பொருந்திய ஆங்காரமானது மூவகை வடிவினதாக உருப்பெறும், அவைநாட்டிய பேர்—அவைகட்கு நிலைபெறுத்துவிக்கப்பெற்ற நாமங்கள் தண்ணிய—குளிர்ச்சியுற்ற, தைசதம்—தைசதம் எனவும், வைகாரியம்—வைகாரியமும், தருபூதாதி—இவற்றினைத் தாராநின்ற பூதாதியும், என்று—என்று குறிக்கப்பெற்று, அண்ணல் வகுத்த—பரமேசுரன்றன்னால் வகுக்கப்பெற்ற முதல்நூல் நெறிமுறை—முதனூலின் நெறியின் முறைமையாகும் (மரபாம்) ஆய்ந்துகொள்ஏ—மாணவகனே நீ இவற்றினைப்பற்றி ஆராய்ந்து கொள்வாயாக, ஏ அசை நிலை.

குறிப்புரை: புத்தி தத்துவத்திலிருந்து இரசோ குண மிகுந்து மற்றவை குறைந்ததாகிய அகங்காரம் (ஆங்காரம்) தோன்றும். இது சித்தாந்தப்படத்தில் சிவப்புமிகுந்து கருமையும் வெண்மையும் குறைந்திருப்பதாகிய இருபத் திரண்டாவது தத்துவச்சக்கரமாகும்.

இது தைசதவகங்காரம், வைகாரியகங்காரம், பூதாதி யகங்காரமென மூன்றாய் விரியும். அவைகள் முறையேசத் துவாதி குணங்களையுடையதனால் அவ்வப்பெயர்களைப் பெற்றனவாகும்.

மூன்று குணம் என்பது முக்குணம் எனவும், பூதம்ஆதி என்பது பூதாதியெனவும் வந்துள்ளன, கரந்து—மறைந்து நாட்டியபேர்—நிலைத்தபெயர், நண்ணுதல் — செறிதல், நெருங்கல், தண்ணிய—குளிர்ந்த, அண்ணல் வகுத்த முதல் நூல்—சிவபெருமானாலருளிச் செய்யப்பட்ட சிவாகமங்க ளாம், ஆய்ந்துகொள்—ஆராய்ந்து கொள்வாயாக என ஏவல் கண்ணிய வியங்கோளாய் வந்ததாம். ஏ—அசை நிலை.

கொள்ளுமத் தத்துவம் முற்கூ
றதிற்செவி யாதிமனம்
எள்ளிய கன்மேந் திரியப்பின்
னீனு மிரண்டினிற்பின்
தெள்ளிய தன்மாத் திரைவருஞ்
சேர்ந்ததன் மாத்திரையின்
ஒள்ளிய பூதங்க ளைந்துக்கு
மாமென்ப ருற்பவமே 38

இப்பாட்டு மூவகையகங்காரத்துள் முற்கூறினின்று மு.திப்பன கூறிற்று.

(இ-ள்) கொள்ளும் அத்தத்துவம் முன்கூறதில்—இங் ஙனமாக ஆகமங்களாற் கொள்ளப்பட்ட அத்தத்துவத்தின் முற்பகுதியினிடத்தில், செவியாதிமனம் எள்ளிய கன்மேந்

திரியம்—செவி கண் மூக்கு, மெய் வாய்களும் மனமும் இகழப்பெற்ற தொழிற் பொறிகளாகிய கருமேந்திரியங்களும், பின் ஈனும்—பின்னர் உதித்தலைப் பொருந்தும். இரண்டினில்—அங்ஙனந் தோன்றப்பெற்ற அந்த இரண்டினில். பின்—அதன்பின்னர், தெள்ளிய தன்மாத்திரைவரும்—தெளியப்பெற்ற தன் மாத்திரைகள் உதிக்கப்பெறும். சேர்ந்த தன் மாத்திரையின் ஒள்ளிய பூதங்கள் ஐந்துக்கும்—நுண்ணிய விளக்கமுற்ற மண், நீர், தீ, வளி, விண் ஆகிய ஐந்தினுக்கும், உற்பவம் ஆம் என்பர்—புலவராயினோர் தோன்றியிடும் என்றுரைப்பாயினார், (எ—று) ஏ—அசை நிலை,

குறிப்புரை: அவற்றுள் தைசதவாங்காரம் அறிவான படியாலே அதனோடு சாத்துவித குணம் பொருந்த மனமும், சுரோத்திரம் (செவி) துவக்கு (தோல்—மெய்) சட்சு—(கண்) சிங்குவை (வாய்—நாக்கு) ஆக்கிராணம் (மூக்கு) ஆகிய ஞானேந்திரியங்கள் (அறிவுப்பொறிகள்) ஐந்தும் தோன்றும். இந்திரியமென்றது வெளியிற்றோன்றும் செவி முதலிய உறுப்புக்களையன்று அங்கங்குள்ள சூக்குமமான (நுண்ணிய சத்தியையே யாகும் என்னை? காது முதலிய உறுப்புக்களிருக்கவும் சத்தாதி விடயங்களைக் கிரகிக்க மாட்டாமல் குருடன், ஊமையன், செவிடன் இருப்பது கண் கூடாகும். (பிரத்தியட்சமாகும்)

விடயமானது கண்ணாற் பார்க்கப்படுமளவில், அதனாற் பார்க்கப்பட்ட அர்த்தத்தைப் புத்திக்குப் புலனாகச் (விடயமாக) செய்யு யாதொன்று நிற்கிறதோ அதுமளமெனப்படும்.

பவந்தரு மம்மனம் பண்பிச்சை
பாரிப்ப தாம்விகற்பம்
கவர்ந்தெழு மிந்திரியங்கள்கண்
டோல்செவி மூக்கொடுநா

வயந்தரு ஞானேந் திரியங்கள்
　　மேந்திரி யங்கள்கைகால்
அவந்தரு வாயொடு பாயு
　　ருபத்தமென் றாங்கவையே. 33

(இ-ள்) பவம்தரும் அம்மனம்—பிறவிப்பெரும்பிணியைத்தருவதாகிய அந்த மனம் எனுந் தத்துவமானது, பண்பு இச்சைபாரிப்பதாம்—பண்போடு கூடிய இச்சையினைத் தரித்திருப்பதாகும், விகற்பம் கவர்ந்தெழும் இந்திரியங்கள்—ஒன்றற்கு ஒன்று வேறுபாடுடையவற்றினைப் பற்றியெழாநின்ற பொறிகள், கண் தோல் செவி மூச்கு ஓடுநா—கண்ணும் துவக்கும், காதும், மூக்கும், நாவும் ஆகிய ஐந்தும், வயந்தரும் ஞானேந்திரியங்கள்—வெற்றியுற்ற ஞானேந்திரியம் எனப்படும். கன்மேந்திரியங்கள்—தொழிற்பொறிகளானவை. கைகால் அவம்தருவாய் ஓடு பாயு உபத்தம்—பாணியும் பாதமும் துன்பந்தரும் வாக்கும் ஆகிய இவற்றுடன், பாயுவாகிய எருவாயும் உபத்தமாகிய கருவாயும் ஆகிய இரண்டும், என்று ஆங்கு அவை ஏ-என்று சொல்லப்பட்டவைகளேயாம், என்று — எண்ணும்மைப் பொருளில் வந்தது, ஆங்கு ஏ—இவ்விரண்டும் அசைநிலைகளாம், அவை—சுட்டுப்பொருளில் வந்தது (எ—று).

சத்தப்பரிசரூப ரசகந்தங்களாகின்ற சூக்கும பூதங்கள் தன்மாத்திரையெனப் பெயர் பெறும். காரணதன்மாத்திரையாகிய இந்தச்சத்தாதிகளும் ஞானேந்திரியங்களின் விடயமான சத்தாதிகளும், ஒன்றன்று. தன்மாத்திரைகளாகிய சத்தாதிகள், பூதங்கள் தோன்றுவகைக்குக் காரணமானவை. ஞானேந்திரியங்களின் விடயங்களாகிய சத்தாதிகள் பஞ்சபூதங்களுடைய குணங்கள் பஞ்சபூதங்களோடு கூடிய தன் மாத்திரா சத்தாதிகளால் ஞானேந்திரியங்களுக்கு ஞானசத்தியையும், கன்மேந்திரியங்களுக்குக் கிரியா சத்தியையும் விளக்கும் அறிவென்று பசரிக்கப்படும் சாமர்த்தியமுண்டாம். சிவஞான சித்தியார் 2-ம் சூத்திரம் 94 செய்யுளில்.

" ஆசைசேர் மனாதிதன் மாத்திரை புரியட்டகந்தான் " என்று புரியட்டகவுடம்புக்குத் தன்மாத்திரைகளைக் கூறியிருக்கின்றது. ஆகையால் பூதாகாரணமான தன்மாத்திரா சந்தாதிகள் வேறு. பூதகுணமான சத்தாதிகள் வேறு என அறிக.

இனி இந்தத் தன்மாத்திரைகளுள் சத்தத்திலிருந்து ஆகாயமும், (விண்ணும்) பரிசத்திலிருந்து வாயுவும் (வெளியும்) உருபத்திலிருந்து தேயுவும் (தீயும்) இரசத்திலிருந்து அப்புவும் (நீரும்) கந்தத்திலிருந்து பிருதிவியும் (மண்ணும்) தோன்றும். இவைகளுக்குப் பஞ்சபூதங்கள் என்றும், தூல பூதங்கள் என்றும் பெயர்.

இவ்வாறு சத்தாதி தன்மாத்திரையே பஞ்சபூதங்களும் ஓரோர் தன்மாத்திரையில் ஓரோர் பூதமாகந் தோன்ற வேண்டாம். ஆன்மாவிலே ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில் வாயுவும் அதிலிருந்து தேயுவும், அதிலிருந்து அப்புவும் அதிலிருந்து பிருதிவியுந்தோன்றும் என்னில் காரியத்திலேயுண்டான குணங்கள் காரணத்திலே யுண்டென்ற நியாயத்தினால் பிருதிவிக்குள் சத்தாதியைந்து குணங்களும் ஆகாயத்துக்கும் உண்டாகவேண்டும் உண்டாகில் பிருதிவிக்கும் ஆகாயத்திற்கும் வேற்றுமை இல்லையாகும். ஆகாயம் ஆன்மாவிலே தோன்றுமென்னில் அசித்தினை சித்தினிடத்து தியாது என்ற நியாயத்தினால் ஆன்மாவும் ஆகாயம் போலச் சடமாகும். ஆனால் ஆகாயத்திலே வாயுவாதி பூதங்கள் ஒன்றிலே யொன்றாய்த் தோன்றுமென்ற வேதாதிகளுக்கு விரோதமாகுமேயென்னில் நிமிர்த்தார்த்தத்தில் ஆகாசாதியொன்றிலே யொன்று தோன்றுமென்றது ஆகாய முதலாய வொன்றன்பின் வொன்றாகுங் கிரமத்தினாலும் பஞ்சீகரணத்தினாலுமே யாகையால் விரோதமில்லை யெனவறிக.

பஞ்சீகரணமாவது:— ஒரு பூத சுவரூபத்தை யிரண்டாக்கி யொருபாதி யந்தப் பூதமாகவேயிருக்க நின்றபாதி

நாலாகி மற்ற நான்கு பூதங்களிலும் அந்யோநியம் வியாபித்திருப்பது பஞ்சபூதங்களும் சூக்குமம் ஆந்திரம் வாகியமென மூவகையாகும்.

சூக்குமம், சூக்குமதேகத்திலிருந்து இந்திரிய வாதார மாம். ஆந்திரம் தூலதேகத்திலிருந்து சரீரத்தை வளர்த்து உள்ளிடங் கொடுத்தல் முதலிய தொழிலையியற்றும், வாகியம் அண்டபவன போக்கிய பொருளாதாரமாய் இடங் கொடுத்தல் முதலிய தொழிலையியற்றும்.

குறிப்பு:— பவம்—பிறவி (தோன்றல்) இச்சை—விழைவு, பாரித்தல்—தாங்கள், விகற்பம்—வேறுபாடு, கவர்ந்து—பற்றி, வயம்—விளக்கம், வெற்றியுமாம், அவம் துன்பம், பாயு—உபத்தம் என்பது பாயுருபத்தமென வாயது.

ஆங்கவை தன்னில் மனம்புத்தி
யாங்காரஞ் சித்தமொன்றே
யீங்கிவை யுட்கர ணமொரு
நான்குமற் றேனையவாந்
தீங்கிவை கின்றன் வீரைந்துந்
தேரிற் புறக்கரணம்
ஓங்கிய போகத் திவையாங்
கருவியென் றுன்னுமினே 40

இப்பாட்டு அகக்கரணம் புறக்கரணங்களின் இயல் கூறுகின்றது.

(இ-ள்) ஆங்கு அவை தன்னில்—அத்தத்துவங்களில் மனம் புத்தி ஆங்காரம் சித்தம்—மனமும் புத்தியும் ஆங்காரமும் சித்தமும் ஆகிய நான்கும். ஒன்று ஏ ஈங்கு இவை—ஒன்றியதே இவ்விடத்து இவை உள்கரணம்—அந்தக்கரணம் ஒரு நான்கும்—இங்ஙனங் கூறப்பட்ட இந்த ஒரு நான்கும், மற்று—அதுவன்றி, ஏனைய ஆம் தீங்கு வைகின்றன ஈரைந்

தும்—ஏனையவாகிய தீமைகள் பொருந்திய பத்தும். தேரின்—ஆராயுமிடத்து புறக்கரணம், புறக்கருவிகளாம். ஓங்கிய—உயரிய, போகத்து இவை ஆம் கருவி என்று உன்னுமின் ஏ—போகமாகிய நுகர் பொருளிடத்து இவை பொருந்தி நிற்கும் கருவிகளாகும் என்று கருதுவீர்களாக ஏ—அசைநிலை (எ—று)

இங்ஙனம் சித்தமுதல் பிருதிவியீறாகக் கூறப்பட்ட தத்துவங்களிருபத்து நான்கும் ஆன்மதத்துவ மெனப்படும், இவற்றிற்கு அசுத்த தத்துவமென்றும், போக்கிய காண்ட மென்றும் பெயர். இவற்றுள் சித்தம் புத்தி அகங்காரம் மனம் என்னும் நான்கு தத்துவங்களும் அந்தக்கரணம் எனப்படும். இவையெல்லாம் சீகண்டருத்திரராலே காரியப் படும். இவ்வகையாய் வித்தியாதத்துவங்கள் ஏழும் ஆன் மதத்துவம் இருபத்து நான்கும் தோன்றுமென்பதற்குப் பிரமாணம்.

1 "அருத்திமிகுங் கலைகாலம் நியதியுடன் வித்தை
யராக மிவை யனந்தரான் மாயைதனி லாகும்
உருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்கள்
உளவாகு மகங்காரம் புத்தியினி லுதிக்கும்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்தகுண மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும்
விரிந்தே

2 மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தஞ்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரைபின்
றருமதனிவ் வானில மனல்புனன்மண் சத்த

முன்னதனில் வெளியாதி யென்றொன் றாகு
　　முறையிளவை யிருமையயன் முடிவா முன்னே
யுன்னுசதா சிவராதி யதிபதிக ளொடுக்க
　　முதித்தவடை வெனவுரைப்ப ருணர்ந்து ளோரே"

எனவருஞ் சிவப்பிரகாசச் செய்யுட்களான் அறிக இங்ஙன மாக அகக்கருவி முப்பத்தாறுந் தோறும்,

இவ்வாறு மாயையானது சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்த மென மூவகைப்பட்டுத் தனது காரியங்களாலும் முக்காண்ட மாகி ஆன்மாக்களின் அறிவு, இச்சைச் செயல்களை விளக்கு மென்பதற்குப் பிரமாணம் வருமாறு.

" சுத்தமு மசுத்தஞ் சுத்தா
　　சுத்தநித் தியமாய்த் தூய்தாந்
தத்துவ மைந்தோ டேழு
　　தகுமிரு பத்து நான்கா
யொத்துமுக் காண்ட மாகி
　　யுயிருணர் விச்சை யாதி
வித்தகக் கலாதி தன்னால்
　　விளக்கிடு மலமா மாயை "

எனவரும் இவைகளுள் ஆன்மதத்துவம் கீழ்ப்பாகத்திலும் வித்தியாதத்துவம் மத்தியபாகத்திலும், சிவதத்துவம் மேல் பாகத்திலும் மாயாகோளத்தில் அமையும்.

" ஆதியி லான்மா தத்துவமான
　　வலர்மகன் பாகமும் நடுவில்
நீதியில் விச்சா தத்துவ மான
　　நெடியவன் பாகமும் முடிவில்
ஓதிய சிவதத் துவமெனலான
　　வுருத்திர பாகமும் உதிக்கும்
பேதியில் மூன்றி லெண்ணிறத்துவங்கள்
　　பிறக்குமிம் மூன்றினும் முறையால் "

எனவரும் திருவிளையாடற் புராணச் செய்யுளான் முறைமை அறியப்படும். இவைகளில் சப்தாதி தன்மாத்திரைகள் பிருதிவியாதி ஐந்து தத்துவங்களினுஞ்சூக்குமம். அகங்கார தத்துவம் அவற்றினுஞ் சூக்குமம், அதிலும் புத்திதத்துவம் அதிசூக்குமம், அதிலும் பிரகிருதி (மூலம்) அத்தியந்த சூக்குமம் அதினும் கலாதி தத்துவம், சூக்குமம், அவற்றினும் காரியமாயை அதிசூக்குமமாகும். (சூக்குமம்-நுண்மை)

மேலும் இவை பொதுவும் சிறப்பும் பொதுச்சிறப்பும் என முத்திறப்படும், புவன வடிவாகிய தத்துவம் எல்லோருக்கும் பயன்றருதலிற் பொதுவாம் சூக்கும தேக வடிவாகிய தத்துவங்கள் போக நுகர்ச்சியின் பொருட்டுத் தனக்குப் பயன்றருதலிற் சிறப்பாம் தூல தேக வடிவாகிய தத்துவங்கள் தனது போக நுகர்ச்சிக்கும் சந்தனம் பூமாலை போல மனைவி முதலியோர் அநுபவத்திற்கும் வாய்ந்தமையிற் பொதுச்சிறப்பாம். இதற்குப் புவனவடிவாகிய தத்துவங்கள் முப்பத்தாறும் பொதுவாய்ப் புறத்தே நிற்றல்போல அகத்தே ஆன்மாவைப்பற்றி முப்பத்தாறு தத்துவங்களும் சூக்குமமாய் நிற்குமென அறியற்பாற்றாம்.

மாயாகோளத்திற் பொதுவாய்ப் புறத்தே நிற்கும் முப்பத்தாறு தத்துவங்களும் சாதாரண தத்துவமென்றும் ஆன்மாக்கடோறும் சூக்குமமாய் வியாபித்துத் தனித் தனியே ஆன்மாக்களைப்பற்றி அகத்தே நிற்கும் முப்பத்தாறு தத்துவங்களும் அசாதாரண தத்துவங்களென்றும் கூறப்படும்.

சாதாரண தத்துவங்கள் முப்பத்தாறும் பதினாறு அண்டங்கள் கூடிய ஒருபிரக்கிரியையாயிருக்கும், இந்தப் பிரக்கிரியையே ஒரு பேரண்டமாகும். இப்பிரக்கிரியைகள் எத்துணை யுண்டென்னில் ஆன்மாக்களுக்கு அளவுண்டானால் இவற்றிற்கும் அளவுண்டாகும். மாயாகோளம்

ஒரு பிரக்கிரியையாம். அதனிடை யடங்கியுள்ள பதினாறு அண்டங்களாவன;-

1. பிருதிவியண்டம்
2. அப்புவண்டம்
3. தேயுவண்டம்
4. வாயுவண்டம்
5. ஆகாயவண்டம்
6. அகங்காரவண்டம்
7. புத்திதத்துவ வண்டம்
8. பிரகிருதிதத்துவகுண வண்டம்
9. அராகதத்துவ வண்டம்
10. வித்தியாதத்துவ வண்டம்
11. கலாதத்துவ வண்டம்
12. மாயாதத்துவ வண்டம்
13. சுத்தவித்தியாதத்துவ வண்டம்
14. ஈச்சுரதத்துவ வண்டம்
15. சாதாக்கிய தத்துவ வண்டம்
16. விந்து தத்துவ வண்டம்

என்பனவாம்.

இவற்றுள் அகங்கார வண்டத்தில் தன்மாத்திரை கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம் ஆகிய தத்துவங்களும் அகங்காரதத்துவ வண்டத்தில் புருடதத்துவமும், கலா தத்துவவண்டத்தில் நியதி காலங்களும், விந்து தத்துவ வண்டத்தில் நாத தத்துவமும் அடங்கும்.

புருடனைப் பிரகிருதி தத்துவத்திற்கூட்டி யுரைப்பாருமுளர் முற்கூறியபடி பிரகிருதி பிரதிட்டாகலையிற் சேர்க்கப்பட்டதால் புருடன் வித்தியாகலைக்குரிய சேர்த்துச்சோதிக்கப்படுகையால், பிரதிட்டாகலைக்குரிய பிரகிருதியில் புருடனைக் கூட்டுவது பொருந்தாது.

இனிப்புறக்கருவிகள் அறுபதும் அசாதாரண தத்துவங்களின் காரியங்களாகும். அவற்றுள் பிரகிருதியின் காரியம் மயிர் தோல் எலும்பு நரம்பு தசை ஆக ஐந்து அப்புவின் காரியம் நீர் உதிரம் மூளை மச்சை சுக்கிலம் ஆக ஐந்து தேயுவின் காரியம் ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் சோம்பல் ஆக ஐந்து வாயுவின் காரியம் ஓடல் இருத்தல், நடத்தல் கிடத்தல் தத்தல் ஆக ஐந்து. ஆகாயத்தின் காரியம், குரோதம், உலோகம், மோகம், மதம், மாற்சரியம் ஆக ஐந்து.

வெண்பா

1. மயிர்தோ னரம்பென்பு மன்றுதசை யைந்துஞ்
செயிர்சேர் பிருதிவியின் சேர்வாம்-உயிர்நேர்
நீருதிர மூளை நிணஞ்சுக் கிலமைந்தும்
ஓரினிலை நீர்க்குணமென் றுன்.

2. பசிசோர்வு மைதுனம் காட்சிநீர் வேட்கை
தெசிநின்ற தீக்குணமோ ரைந்து-நொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தல் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை.

3. ஓங்கும் வெகுளி மதமானம் வாங்கார
நீங்கா வுகோப முடனிவ்வைந்தும்-பாங்கார
வண்ண முலைமடவாய்! வானகத்தின் கூறென்றார்
எண்ணிடுக நூலுணர்ந்தோ ரெண்.

என்பனவற்றாலறிக.

வசனாதியைந்தாவன : வாக்கின் றொழிலான வசனமும், பாதத்தின்றொழிலான கமனமும், பாணியின்றொழிலான தானமும், பாயுவின்றொழிலான விசர்க்கமும், உபத்தத்தின் றொழிலான ஆனந்தமும் ஆம் வாயு பத்தாவன-பிராணன். அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பவைகளாம்.

" ஒப்பார் பிராணன் அபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே-யிப்பாலும்
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருதரன்
தீதிலாத் தேவதத்தனே ;

என்னும் வெண்பாவாலறிக.

இவைகளில் பிராணவாயு மூலாதாரத்தினடங்கும் நேரம் அபானனும், கண்டத்தில் வரும் நேரம் வியானனும், உதானனும், புறப்படு நேரம் சமானனும், புருவத்தில் வரும் நேரம் நாகனும் கூர்மனும் கிருதானும், கண்டத்தின் மேல் செல்லும் நேரம் தேவதத்தனும், உடல்விடுநேரம் தனஞ்சயனும் ஆக உடலோடு கூடுநேரம், பூதவாயு காரணமாகத்தோன்றும் இவற்றுள் பிராணன் அபானன் வியானன் உதானன்சமானன் ஐந்தும் ஞானவாயுக்களாகும். ஏனையவை யைந்தும் கன்மவாயுக்களாகும்,

நாடிபத்தாவன இடை, பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், சங்கினி குகு என்பனவாம். இவைகள் பிருதிவியிற்றோன்றும்.

## வெண்பா

" இடையிங் கலைசுழுனை காந்தாரியத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினிட பூடாவோ
டங்குகு கன்னி யலம்பு வெனவுரைத்தார்
தங்குதச நாடிகடாம் "

இவைகள் நிற்குமிடமாவன:- இடைபிங்கலைகள் மூலாதாரத்துக்கும் இரண்டு நாசிகளுக்குமாக நிற்கும். சுழுமுனை வீணா தண்டைப்பற்றி நிற்கும் காந்தாரி கண்ணிலும், அத்தியெலும்பிலும், சிங்குவை நாக்கிலும், அலம்புடை செவியிலும், புருடன் கைகளிலும். சங்கினி உபத்தத்திலும், குகு குதமார்க்கத்திலுமாக நிற்கும் என்பதாம்.

இந்தப் பத்து நாடிகட்கும் எழுபத்தீராயிரம் நாடிகள் பொருந்தி நிற்கும். இடைபிங் கலைகள் எண்ணாயிரம் நாடியாய்க் கீழ்நோக்கிப் போகும் அது வேறாயிழிந்து ஈராயிரம் நாடி வீணாதண்டைப் (முதுகந்தண்டைப்) பற்றி நிற்கும் குகு நாடியைத் தலையாய்க்கொண்டு ஆயிரம் நாடி மார்க்கத்தை (குதத்தை) வளைந்து கிடக்கும் அத்தி நாடி பத்தாயிரம் நாடியாய்ப் பிர்க்கங் கூடுபோற் கழுத்தைப் பின்னி நிற்கும் சங்கினி நாடியைத் தலையாய்க்கொண்டு பதினாலாயிரம் நாடி, இதயச் தொடங்கிச் சரீரந்திற் கலந்து நிற்கும் அலம்புடை நாடி யிருபதினாயிரம் நாடிகளுடன் நெற்றி கபாலம் நரசிகளில் பொருந்தி நிற்கும், பூடா நாடி (புருட நாடி). பதினையாயிரம் நாடிகளுடன் இரண்டு கைகளையும், அண்ணம் அணறு ஆயவற்றினையும் பொருந்தி நிற்கும் சிங்குவை நாடி. ஆயிரத்தைஞ்நூறு நாடிகளுடன் கண்ணிமையைப் பற்றி நிற்கும். சங்கினி நாடியுடன் ஐந்நூறு நாடிகள் முக்கினைப் பொருந்தி நிற்குமென அறிக என்பதாம். இங்ஙனங் கூறிய எழுபத்தீ ராயிரம் நாடிகளும் மேல் அறுபத் தோராயிரமும், கீழ்ப் பதினோராயிரமும் ஆக நிற்கும் இவற்றின் இயங்கும் வாயும் எழுபத்தீராயிரமாகும்.

வாக்கு நான்காவன;- சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்பனவாம்.

வாக்கு நான்காவன. சூக்குமை பைசந்தி மத்திமை வைகரியென்பனவாம். இவைகள் விந்துவிற்றோன்றும் எங்ஙனம் எனில் விந்து சத்தியானது அறிவுமாய் விளக்கமுமாய் ஆன்மாக்களிடத்திலே அவரவர்களுக்குரிய கன்மங்களுக் கீடாக வாக்குகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு மூலாதாரத்திலே நின்றும் பிரணவத்திலே யொருநாதமாக வெழுந்து சூக்குமையாகி நாபியளவிலே திரண்டநாதம் விந்துவாகிய வட்டமாயையினுள்ளே அட்சர சொருபந் தோன்றாத பைசந்தியாகி உதானவாயுவாலே கண்டமளவு சென்று பிராண வாயுவின் றொழிலில்லாது உதானவாயு

வின் றொழின் மாத்திரையினால் சூக்குமரூபமாய் அக்கரங்கள் பிரிந்து தோன்றினும் சொல்லு வோன்றன் செவியிற் கேட்கப்படாத ஓசையான முழக்கமாயுள்ள மத்திமையாகி, மேல் பிராண வாயுவுடன்கூடி உரைப்போனது செவிக்கு மாத்திரம் கேட்கப்படுவதும் பிறர் செவிக்குக் கேட்கப் படுவதுமான வைகரியாகி, அண்ணமும், பல்லும் உதடும் மூக்கும் முதலிய வைகளாலே புறப்பட்டு வாக்கினை வசனிப்பித்து வன்னம் புதும் வாக்கியம்பா முதலியவைகளாய் விளங்கும், இங்ஙனமாக வருமெனற்குத் தத்துவப்பிரகாசச் செய்யுள் வருமாறு.

## விருந்தம்

" சத்தியினிற் றோன்றும் வாக்காதி நான்குந்
தானிவன்வாக் கெழுப்பியிடு மதுதான்றன் மூலத்
தொத்ததொரு விந்துவிலே நாதமாய் சூக்க
முயரும்பை சந்தியுந்திபா லுதானன் கூடச்
சித்தமயின் முட்டையினிற் சலப்போ லாகுஞ்
சென்றுகண்ட டத்தளவு செவிக்குணரா வோசை
மத்திமை யாம்வாக்கு வைகரிதா னெட்டு
வகைதோன்றிச் சொற்பொருளாய் வழங்கி
[யிடுங்காணே ! "

## வெண்பா

" அநாதி மூத்த சின்மயனோக் கானாத மாகு
மநாதி சுத்த மாயையினான் மாக்கூண்—மநாதியினை
யாக்கப் புனிதமந்த நாதத்தாம் விந்துவினாம்
வாக்கொருநான் கொன்றார் மதித்து. "

" சூக்குமைநம் பைசந்தி மத்திமைசொல் வைகரியென்
றாக்குமிவற் றின்பே ரடைவறிக—சூக்குமைதான்
பந்தித்தான் மாவுணர்வை பைசந்தி மத்திமையா
மந்தத்திற் றூலவெழுத் தாம் "

" வாக்கி னுநித்துப் பொருளை மதிப்பிக்கைக்
காக்கும் பதத்தி னவயவமாய்—வாக்கியமாய்ப்
பாவா யியலாகி நூலாய்ப் பரந்திலங்கும்
ஓவாதே மத்திமையி னுற்று "

என்பனவாம்.

இவற்றுள் வைகரிவாக்குச் சொல்லுவோனுக்கும் கேட்போருக்கும் சவிகற்ப வுணர்வுண்டாவதற்கும், மத்திமை வாக்குச் சொல்லுவோனுக்குச் சவிகற்ப வுணர்வுண்டாதற்கும், பைசந்தி வாக்கு நிருவிகற்ப வுணர்வுண்டாதற்கும், சூக்குமை வாக்கு ஞான மாத்திரைக்கும் ஏதுவாயிருக்கும்.

சூக்குமாதி நான்கு வாக்குகளுடன் பஞ்சமை யென்று ஓர் வாக்குண்டென்று கூறுவர். அதற்குத் தானம் மூலாதாரம். இவைகள் முறையே பஞ்சமை முதலாகச் சாந்தியாதீதை முதலான பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு அடைவே பராசத்தியாதி பஞ்ச சத்திகளாலே காரியப்படுமென்வறிக.

ஏடணை மூன்றாவன:— தார வேடணை, புத்திர வேடணை, அர்த்த வேடணை யென்பனவாம். இவை யாகாயத்திற்றோன்றும்.

குணம் மூன்றாவன; சாத்துவீதம், இராசதம், தாமதங்களாம், இவைகள் மூலப் பிரகிருதியில் தோன்றும். இங்ஙனம் புறக்கருவி யறுபதுங் காண்டல் வேண்டும்.

உன்னிய சொல்லுச் செவிக்குக்கண்
ணுக்குரு வப்பரிச
மன்னிய தோலுக்கு மூக்குக்கு
நாற்ற மிரதமென்ப

வின்னிய நாவுக் கியம்பல்
நடத்தல் கொடை விடுதல்
பன்னிய வானந்தம் கன்மேந்
திரியம் பயின்றனவே. 41

இப்பாடல் அறிவுப்பொறி தொழிற்பொறிக்குற்ற செயல் கூறாநிற்கும்.

(இ-ள்) உன்னிய செவிக்கு சொல்லு—கருதிய காதுகட்குச் சத்தமாகிய சொல்லும், கண்ணுக்கு உருவம் மன்னிய தோலுக்குப் பரிசம்—நிலைபெற்ற துவக்குக்கு ஊறும், மூக்குக்கு நாற்றம்—மூக்கினுக்குக் கந்தமும், இன்னிய நாவுக்கு இரதம்—இனிய நாவினுக்குச் சுவையும், என்ப—என்று அறிஞராயினார் கூறுவர். கன்மேந்திரியம்—கன்மேந்திரியங்களாகிய வாக்குக்கும் பாதத்திற்கும் பாணிக்கும் பாயுவுக்கும் உபத்தத்திற்கும். இயம்பல் நடத்தல் கொடை விடுதல் பன்னிய ஆனந்தம்—இயம்புதலும் நடத்தலும் கொடுத்தலும் கழித்தலும் இன்புறலும், பயின்றன ஏ—முறையேயயிற்சியுறப்பெற்றனவாம் ஏ—அசைநிலை.

குறிப்பு: உன்னுதல்—கருதுதல், உருவம்—வடிவு, ரூபம் என்பதன் றிரிவுமாம். இனிய வென்பது இன்னிய வென எதுகை நோக்கி விரிந்தது. கொடை கொடுத்தல், பன்னிய—கூறப்பட்ட, பயின்றன—பழகின.

பயில்வுறு சத்தப் பரிச
முருவ மிரதங்கந்த
மியல்வுறு தன்மாத் திரையைந்து
மாவன வீங்கிவற்றிற்
புயலுறு வான்வளி பொன்றா
வனல்பொரு நீரொடுமண்
ணியலுறு பூதமைந்தும் முறையாக
யாக விளைந்தனவே. 42

(இப்பாடல் காரண தன் மத்திரையும் அதனின்றுந் தோன்றுவன விவை யென்பதும் கூறுகின்றது)

(இ-ள்) பயில் உறு—இயற்கையாகவே அமைந்துள்ள (நுண் பூதங்களானவை) சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம்—ஒலியும் ஊறும் உருவமும், சுவையும், நாற்றமும் இயல் உறு-இயலுதல் பொருந்திய, தன்மாத்திரை ஐந்தும் ஆவன—காரண தன் மாத்திரைகள் ஐந்தும் ஆவனவாம். ஈங்கு இவற்றில்—இங்குக் கூறப்பட்ட இம் மாத்திரையின் மூலமாக, புயல் உறுவான்—மேகங்கள் படிவனவாகிய ஆகாயமும், வளி—காற்றும், பொன்றா (தனல்)— அழிவுறு தல் அடையாத தியும், பொருநீர் ஓடுமண்—இவற்றொடு முரணுதலையுடைய நீரும் பிரதிவியாகிய மண்ணும், வியல் உறுபூதம் ஐந்தும்—பரந்து விரிதலையுடைய பருப்பூதங்கள் ஐந்தும், முறை ஆக விளைந்தன ஏ—கிரமமாக (வரிசையாக) தோன்றப் பெற்றனவாம். ஏ—அசை நிலை (எ—று)

பூதங்கள் இருவகைப்படும், நுண்பூதமும் பருப்பூதமும் என; சூக்கும தூல பூதமென வழங்குவர். பூதமாவது: இத்துணைத்து இவ்வரையறை யுடைத்து என அளந்தறியவொண்ணாதது. காரண தன்மாத்திரை—பருப்பூதங்கள் தோன்றற்குக் காரணமாய்த் தாயாயிருப்பதாகும், இவைகள் தத்துவங்களாகும். பூதகுணதன்மாத்திரை சுவையொளி யூறோசைநாற்றங்களாம். இதற்குப் பொருள் பூதங்களின் வழியாய்த்தோன்றி மெய்வாய்கள் மூக்குச் செவிகட்குப் புலனாவனவாகிய தாத்துவிகங்கள் ஆகும். முறை—அடைவு வரிசை எனப்பொருளாம். விளைந்தன—உண்டாயின (தோன்றப் பெற்றவை) புயல்—மேகம்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்னுந் திருக்குறட்பாவினை யீண்டுங் கருதற்பாலதாகும். மாத்திரா எனற்பாலது மாத்திரையென ஐகார வீறாய்த்

திரிந்தது வியல்—அகலம் (விரிவு) பொன்றல்—அழிவு. ஓடு—உண்மைப்பொருட்டு, விளைவு—உண்டாபல்.

" மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றினார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலும் அளியுமுடை யோய்!

என்னும் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டும் பூதங்களினியற்கை கூறப்பட்டிருத்தலைக்கொண்டு பூதங்களினியலும் தன்மையும் நன்கு அறியற்பாலதாகும்.

விளையுங் குணமொன் றுக்கோ ரொன்று
மேற்படும் விண்முதலாய்
விளையுந் தனையும் இடங்கொடுக்
குங்கூட்டும் வெம்மைதரும்
இளகும் பொறுக்கும் அடைவே
யிவையுயர் வானமுதலாய்
வளையுங் கடற்புவிக் கஞ்சு
மெஞ்சாமல் வருந்தொழிலே. 43

(இ-ள்) விளையும் குணம் ஒன்றுக்கு ஓர் ஒன்றும் ஏற்படும்-தோன்றப்பெறும் பூதங்கள் ஒன்று ஒன்றக்கும் தனித்தனியே குணக்கள் உண்டாகா நிற்கும், (முறையே) வான் முதல் ஆய் விளையும் தனையும் இடம் கொடுக்கும்—ஆகாயம் முதலாகித் தோன்றுமளவும் ஏனைய பூதங்கள் விரிவதற்குக் காரணமாய் இடக் கொடுத்து நிற்கும் (இது விண்ணிற்குளதாவது), வளிகூட்டும்—காற்றானது ஒருங்கே சேமித்தலைப் புரியும், தீ வெம்மை தரும்—தீயானது வெப்ப

மாகிய சூட்டினைக் கொடுக்கும். நீர் இளகும்—நீரானது இளகுதலைப் புரியும், மண் பொறுக்கும்—மண்ணாகி பூதமானது தாங்கு தலைப் புரியும் (சுமத்தலைச் செய்யும்) இவை—இவைகளை, உயர் வான் முதல் ஆய், உயர் உறும் விண்முதலாய், வளையுர்—சுற்றும் (சூழும்) கடல் புவிக்கு—கடலாற் சூழண்ட பூமண்டலத்துக்கு, அஞ்சும்—இவ்வைந்தும், எஞ்சாமல்—ஒழிவுறாவாறு, தொழில் ஏ வரும்—செயல்கன் வருதலைப் புரியும் என்றவாறு ஏ. அசை நிலை.

(குறிப்புரை) குணங்கள், மண்ணிற்குப் பொறையும், விண்ணிற்கு இடங்கொடுத்தலும், வாயுவுக்குச் சலித்துத் திரட்டலும், அப்பவுககு நெகிழ்தலும். தீயினுக்குச் சுட்டொன்றுவித்தலும் வெப்பமுடைத்தாதல்.) பொதுமையில் ஆத்ம தத்துவங்களின் தொழிலாவன வருமாறு; தத்துவங்களின்றொழில், பிருதிவிக்கு வடிவு நாற்கோணம், நிறம் பொன்னிறம், குணம் கடினம், சுபாவம்-கிடத்தல், தொழில் பொறுத்தல், குறி—வச்சிரம், தேவதை பிரமன், அக்கரம் வகாரம், சூக்கும பஞ்சாக்கரம், கலை அகாரம் நிவர்த்தி.

அப்புவுக்கு வடிவு இரு கோணம். நிறம் வெள்ளை, குணம் நெகிழ்ச்சி, சுபாவம் பதார்த்தம், தொழில் கட்டுண்டல், குறி கோகனகம், தேவதை திருமால், அட்சரம் வகாரம், சூக்கும் பஞ்சாக்கரம் உகாரம், கலை பிரதிட்டை தேயுவுக்கு வடிவு முக்கோணம், நிறம்செம்மை, குணம் சுட்டொன்றுவித்தல். சுபாலம் வவ்விதல் தொழில் உலர்த்தல் குறிசுவத்திகம் தேவதை உருத்திரன், அட்சரம் மகாரம் சூக்குமபஞ்சாக்ரம் மகாரம் கலை வித்தை.

வாயுவுக்கு வடிவு அறுகோணம், நிறம் கருமை, குணம் சலித்துத்திரட்டல், சுபாவும் நிறைத்தல், தொழில் விம்முதல் குறி அறுபுள்ளி, தேவதை மகேசுவரன், அட்சரம் மகாரம், சூக்குமபஞ்சாக்கரம் விந்து, கலை சாந்தி.

ஆகாயத்திற்கு வடிவு வட்டம், நிறம் புகை, குணம் இடங்கொடுத்தல், சுபாவம் நிற்றல், தொழில் போகுதல், குறி அமுதவிந்து தேவதை சதாசிவம், அட்சரம் அகாரம் சூக்கும பஞ்சாக்கரம் நாதம், கலை சாந்தியாதீதம் என்பன

ஞானேந்திரியங்களின்றொழில் :— சுரோத்திரம் ஆகாயமிடமாகநின்று செவியைப் பொருந்திச் சுத்தத்தை யறியும், துவக்கு (தோல்) வாயுவினிடமாக நின்று சரீரத்தைப்பொருந்தி உருவத்தையறியும், சிங்குவை (நா) அப்புவினிடமாக நின்று நாவினைப் பொருந்தி பிரசத்தை யறியும், கிராணம் (மூக்கு) பிருதிவியினிடமாக மூக்கினைப் பொருந்திக்கந்தத்தை யறியும்,

கன்மேந்திரியங்களின்றொழில்: வாக்கு ஆகாயமிடமாக நின்று வசனிக்கும், பாதம் வாயுவினிடமாக நின்று கமனிக்கும், பாணி அக்கினியிடமாக நின்று இடுதலும் ஏற்றலும் செய்யும், பாயு அப்புவினிடமாக நின்று மல விசர்ச்சனஞ் செய்யும். உபத்தம் பிருதிவியினிடமாக நின்று சுக்கிலத்தைக் கழிக்கும், தன்மாத்திரைகளின்றொழில், சுரோத்திராதிகட்கு விடயமாகவருக்கும் அந்தக்கரணங்களின் றொழில் மனம்பற்றும், புத்தி நிச்சயிக்கும் அகங்காரம் கொண்டெழுப்பும், சித்தம சிந்திக்கும்- இங்ஙனம் திருவாலவாய்க் கட்டளை இயம்பும் என்க.

தொழிலுறு மாயைத் துவக்குண்ட
சீவனைத் தொக்குநின்றங்
கெழி லுறு மேனி யிருபாற்
கரணங் குணமொருமூன்
றொழிவில வாகிச் சுகதுக்க
மோக முடன்கொடுத்துக்
கழிதரு துன்பங் களின்பய
னாரக் கவர்விக்குமே. 44

(இப் பாட்டு மாயா சம்பந்தத்தாற் கட்டுண்ட சிவனின் நிலை யறிவுறுக்கின்றது)

(இ-ள்) தொழில் உறு மாயை துவக்குண்ட சீவனை — வினையினைப் புரிதலைச் செய்கின்ற மாயையினாற் கட்டப் பெற்ற ஆன்மாவினை, தொக்கு நின்று—ஒரு சேரத்திரண்டு நிலைபெற்று, அங்கு—அச் சீவனிடத்து, எழில் உறு — எழுச்சியினையுற்ற, மேனி-உடலானது, இருபால் கரணம்— அகக்கருவியும் புறக் கருவியுமாகிய இரண்டு கருவிகளும், குணம் ஒரு மூன்று—இராசதம் சாத்துவிதம், தாமதங்களாகின்ற ஒரு மூன்று குணங்களும், ஒழிவு இல ஆகி-ஒழிதல் இல ஆகி (நீங்காமல் இருப்பனவாகி) சுகம் துக்கம் மோகம் உடன் கொடுத்து-சுகமும், துக்கமும் இவைபற்றி வரும் மயக்கமும் ஆகிய இவற்றினை உடனாகத்தந்து கழிதரு — ஒருகால் நீங்குதலையுறுகின்ற துன்பங்களில்மூதுயரங்களினுடைய, பயன் ஆர—பயனை நிரம்ப (அருந்துமாறு), கவர்விக்கும்—பற்றும்படிச் செய்யும், மாயை துன்பங்களின் ஆரக் கவர்விக்கும் என வினை முடிவு செய்தல்வேண்டும். (எ-று)

குறிப்பு:— துவக்குண்ட—கட்டப்பட்டுள்ள, சீவன்— ஆன்மா, தொங்கு நின்ற-திரண்டுள்ள, மேனி—சரீரம், இருபால்—இரண்டு வகை, மோகம்—மயக்கம், ஒழிவு— நீங்கல், கழிதரு துன்பம்—மிக்க வேதனையென்றுமாம், ஆர—நிரம்ப (நுகர) பயன் பிரயோசனம், கவர்தல்— பற்றல், எழில்—எழுச்சி (வனப்பு), கரணம்—கருவி (இங்ஙனமாகப் பொருள் கோடல் ஒருவகை)

கவரும் பொருளொன்றைக் கண்முத
லாய கரணங்கண் ணூற்
றிவரு மனம்விகற் பிக்குமெஞ்
சாதவாங் காரமுந்தான்
பவரும் படியென தியானென்று
பாவிக்கும் பற்று முற்றுத்
தவரு மதிமிகத் தேறுமிப்
பாலிதன் றன்மையென்றே. 45

(இ ள்) கவரும் பொருள் ஒன்றை கண்முதல் ஆய கரணம்—கவர்தலைச் செய்யும் ஒரு பொருளை கண்ணும் செவியும், மெய்யும் மூக்கும் வாயுமாகிய கருவிகள் (இந்திரியங்கள்) (பொறிகள்) கண்ணுற்று—பொருந்தி, இவரும்—சுவையொளி யூறு ஓசை நாற்றமாகியவற்றினை யறிதலுறுதலைச் செய்யும், மனம்—மனமெனும் தத்துவமானது, விகற்பிக்கும்-வேறுபாடுறுதலைப்பண்ணா நிற்கும் (பற்றுமாம்) எஞ்சாத ஆங்காரமானது. பவருப்படி—முனைந்தெழுந் தன்மைந்தாக. எனது யான் என்று பாவிக்கும்—எனக்கு உரிமையானது என்றும் நான் ஆகுவன் (அகங்காரம் என்றும் தோன்றியெழுதலைச் செய்யும் (பாவித்தலைச் செய்யும்) பற்று முற்றும்—அகப்பற்றும் புறப்பற்றும் ஆகிய முழுவதும். தவரும் மதி—விளையும் மதியானது. மிக தோறும்—மிகவும் தெளியலுறலைப் பண்ணுவிக்கும். இப்பால்—இப் பகுதி, இதன் தன்மை என்று ஏ—இவற்றின் தன்மைகள் என்று கருது தலையடைவாயாக எ-று ஏ—அசை நிலை.

அந்தக்கரணங்களின் றொழிலையொருவாறு விளக்கப் பட்டதாகும். மனம்-பற்றும், அகங்காரம் கொண்டெழுப்பும் மதி—நிச்சயிக்கும், எனல் பொதுவியலாகும். பற்று—தனக்குரியனவாயுள்ள பொருளிடத்து வைக்கும் ஆசை, பிறர்க்குரிய பொருளின் மேல் ஆசைவைப்பது அவா ஆகும். மனமானது ஒன்றினைப்பற்றவினால் வருவதாகும்.

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகினார் அறிவு சென்று
உற்றவா னவனிருந்தி யோகுசெய் தானெனிற்
சொற்றவா மளவிதோ மற்றிதன் றூய்மையே"

என்ற கம்பரின் பாடலில் பற்றும் அவாவும் இவையெனல் துணிவுறுத்தற் பெற்றுள்ளதை ஆய்ந்து கொள்ளல் வேண்டும்.

கண்ணுறல் — பொருந்துதல் எஞ்சுதல் — ஒழிதல். பாவித்தல்—பாவனைபுரிதல், கவர்தல்—பற்றல். இவர்தல் —ஏறுதல் (பற்றியெழல்) முற்றும்—முழுவதும். தவர்-தொளை (புரை) விகற்பித்தலாவது இதனின் இற்றிது, இதனின் வேறிது எனப்பலவாறாகப் பற்றுதலைப் புரிவதாகும். விகற்பம்—வேறுபாடு. தேறும்—தெளிவுறும், மாணவகநீ இவ்வந்தக்கரணங்களின் நிலையினை இவ்வாறு என்று கருதுவாயாக என வினைமுடிவு காணல் வேண்டும். ஏ. அசைநிலை.

என்றுடன் றேறிய புத்திக்
  கிசைந்த பொருணயந்து
சென்றுந் திரிந்தும் பயில்வுறுஞ்
  சேதனன் சேதமின்றி
நின்றுண்ட போகத்தை நீக்குமற்
  றுண்பன நேடியின்னே
பொன்றும் பிறக்கும் புனற்கழிப்
  பட்டதோர் புல்லெனவே. 46

இப்பாட்டானது ஆன்மாவினது இன்ன நிலைமைத்தாகி நிற்கும் என்று இயம்புகின்றது.

(இ-ள்) மாயையினாற் கட்டுண்ட. சேதனன்—ஆன்மாவானது. என்று உடன் தேறிய புத்திக்கு—மேலே கூறப்பட்டவற்றினை இவ்வாறெனக் கருதியுடனடியாகத் தெளிவுற்ற புத்தியினுக்கு. இசைந்த பொருள் நயந்து—ஒன்றுபட்டியைந்த பொருள்களை விரும்புதலுற்று. சென்றும் திரிந்தும் — செல்லுதலுற்றும் அலைதலுற்றும் (போய் அலைந்தும்) பயில்வுறும்—பழகுதலைப் புரியும் என்றபடியாம் சேதம் இன்றி—அழிவில்லாமல். நின்றுண்ட போகத்தை—வினைக்கீடாய் அமைந்த. நிலைபேறாகவுடைய, நுகர்வாம் விளைவை (அநுபவத்தை) நீக்கும்-நீக்குதலைப் புரியும், மற்று உண்பன நேடி— அதுவேயுமன்றி பொறிகட்குணவாகிய பொருட்களை (கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறிதலாகிய வற்றினை), தேடி-தேடிப்பாய்ந்து.

இன்னே—இப்போழ்தேபொன்றுர்—அழிவுறும், பிறக்கும்—ஒழியாது நின்ற போகத்தை நுகருமாறு பிறத்தலைப் புரியும் புனல் சுழிபட்டது ஓர் புல் என ஏ—வெள்ளமாகிய நீரினிடத்துண்டாகும் உந்தியாகிய சுழலின்கண் சிக்குண்டதாகிய ஒரு துரும்பினைப் போல அமிழும் மேலெழும் (எ-று)

குறிப்பு:— நயத்தல்—விரும்பல். சேதனம்—அறிவு. சேதம்—அழிவு, திரிதல்—அலைதல், பொன்றல்—இறந்து பாடுறல், நேடல்—தேடுதல், பிறத்தல்-தோன்றல், புனல்-வெள்ளப்பெருக்கு, வெள்ள நீர்ச்சுழியினிடத்தகப்பட்ட புல்லானது அதனிடையே சுழன்று கொண்டு மேலெழலும் கீழ முழந்துதலும் அடைவது போல ஆன்மாவானது பிறப்பு இறப்பு என்னும் சுழலிடைப்பட்டு இறத்தலையும் பிறத்தலையும் அடையும் என உவமையொடு பொருத்திக் காண்க. கொள்ளி வட்டமும் காற்றாடியும் போலப் பிறந் திறந்துழலு தலைப்புரியும் எனக் கூறலுமுண்டு. போகம்-நுகர்பொருள். இன்பத் துன்பங்களேயாகும், ஏ. அசைநிலை

புல்லிய பாசங்க ளுய்த்திடப்
　　போகம்பு மானுகர்ந்து
சொல்லிய காலத் துறுஞ்செல
　　னீக்கிச் சிரபுரக்கோன்.
சொல்லிய மண்முத லாயின
　　மாயையி லேதொகுத்துங்
கெல்லியி னித்திரை போலிளைப்
　　பாற்று மணுக்களையே. (47)

(இப் பாடல் ஆன்மாக்கள் போக நுகர்ந்து பின்னர்ப் போக்கு வரவு புரிதலானது இளைப்பாறுதல் ஆம் என இயம்புகின்றது).

(இ-ள்) புல்லிய பாசங்கள் உய்த்திட போகம் புமான் நுகர்ந்து—பற்றி நின்ற, ஆணவ கன்ம மாயை யாகின்ற பந்தங்களானவை உந்திச் செலுத்துதலால் புமான் (ஆன்

பால்) ஆகிய ஆன்மாவானவன், பிராரர்த்த ஆகாமிய சஞ்சிதங்களாகின்ற போகங்களாகி நுகர் பொருளை யநுபவித்திடச் செய்து, சொல்லிய காலத்து உறும் செயல் நீக்கி—சொல்லப்பட்ட (வரையறுத்துரைக்கப்பட்ட) கால வெல்லைக்குள் அடையும் நடையினை (இன்பத் துன்பக் கூறுகளை), நீக்கி—விலக்குதலையியற்றி, சிரபுரக்கோன்—சீகாழிப் பதியிலெழுந்தருளியுள்ள பதியாகிய சிவபெருமான் சொல்லிய—திருவாய் மலர்ந்தருளியுள்ள, மண் முதலாயின மாயையில் ஏ தொகுத்து-மண்ணும், நீரும், தீயும், வளியும், விண்ணுமாகிய ஐம்பெரும் பூதங்களாயினவற்றின் குணங் களாகின்ற சுவையொளி யூறோசை நாற்றங்களை யொருங்கே திரட்டி, அங்கு—அவ்விடத்தே, அணுக்களை—உயிர் வருக்கங்களை, எல்லியில்—இரவினிடத்து, நித்திரை போல்-உறங்குதலுறல் போல், இளைப்பு ஆற்றும்-இளைத் தலாகிய தளர்ச்சியினை, நீக்குதலைச் செய்யும். ஏ-அசை நிலை (எ-று).

(குறிப்புரை) பாசங்கள் அநாதி நித்தியங்கள் ஆகை யால் அநாதி நித்தியமாகின்ற, எண்ணில் உயிர்களை செம்பிற்களிம்புபோலப் பற்றியே நிற்கும். ஆன்மாவினிடத் தில் அநாதி நித்தியமாகிய பதிப் பொருள் உறைந்தே நிற்கும். ஆகவே பாசங்களின் பற்றுக் கோட்டாலும் இறைவன் உறைதலாலும் இன்பத் துன்பங்கட் கேதுவாகிய நல்வினை, தீவினைகளும் உயிர்களிடத்து கரந்தே நிற்கும். ஒரு பொருளை வேண்டுதல் வேண்டாமையாகிய பெற்றி யால் பிறவித் துன்பங்கள் உளவாயின. ஆண்டவன் வேண்டுதல் வேண்டாமையிலான்; ஆன்மாக்கள் வேண்டு தலும் வேண்டாமையும் உடையவை மேலே காட்டப்பட்ட வினைகளோ, பிராரர்த்த ஆகாமிய சஞ்சிதங்களாக பரிணமிக்கின்றன. இவற்றினை நுகர்வதற்கு இறப்பும் பிறப்பும் தேவைப்படுகின்றது. இந்த தேவைப்படக் கட்டப்பெற்ற பாசங்கள் வினைப்போகங்களைத் துய்த் திட ஆன்மாக்களை யுய்த்திடச் செய்யும். அப்போகங்களை நுகர்ந்து பின்னர் வரையறுக்கப்பெற்ற காலவெல்லையினை

புமான் அடைகுவன். போகத்தைத் துய்த்து முடித்ததும் வினையால் உற்ற உடல் நீங்க ஈட்டிய வினைகளுக்கேற்ப உடலினை யெடுக்கும். நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதமும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலுதலைப் புரியும் உயிர்கள், உயிர்களுக்கு உறங்குதலைப் புரிதல் தளர்வு நீக்கற் பொருட்டென்பது யாவருமறிந்த உண்மை. இதனை யடைந்தாலன்றி ஓய்வுற்ற கருவிகரணங்கள் மீண்டும் எழுச்சியுற்றுத் தொழிலியற்ற மாட்டாவாம். அதனாற்றான் சிரபுரக்கோன் அணுக்களை யிளைப்பாற்றுதல் புரியும் என்றார்.

புல்லியபாசம்—பொருந்திய மலங்கள், உய்த்திட—செலுத்த, செலவ்—துன்பம் (செல்லுதலுமாம்) மாயையாலே மண்முதலாயின தொகுத்தலாவது மாயாசம்பந்தத்தினாலேதான் பஞ்சபூதங்கள் தொழிற்படுகின்றன. ஆகலின் ஒருசேரத்திரட்டல் ஆயிற்று, எல்லி—இரவு, அணுக்கள்—உயிர்கள், இளைப்பாறல்—அயர்வு நீங்கப்பெறல்.

களைகண்ணன் றாஞ்சுத்த தத்துவங்
காழியர் கோனருளால்
விளைபுல னாஞ்சத்தி யுள்ளே
யொடுங்கிடு மேதகுநூல்
தளைகெழு சத்தி சிவதத்து
வந்தன்னி லேயொடுங்குங்
கிளைதரு மாயை சிவத்தோ
டணுவுக்குங் கேடில்லையே. (48)

இப்பாட்டு தத்துவங்களி னொடுக்கம் கூறா நிற்கும்.

(இ—ள்) களை கண்ணது ஆகும்—பற்றுக்கோடாகவுள்ளதாகும், சுத்த தத்துவம்—சுத்த தத்துவங்களானவை; காழியர்கோன் அருளால்—சீகாழிப் பதியிலுள்ளவர்கட்குத் தலைவனாகிய பரமேசுரன்றன் பரம கருணையினால், விளைபுலன் ஆம்சத்தி—உண்டாகின்றதாகின்ற புலன்கள்

சத்தி தத்துவத்தின், உள்ளே ஒடுங்கிடும்—அகத்தே மறைந்து கிடக்கும்; மேதகும் நூல்—மேன்மை பொருந்திய சித்தாந்தக் கலைகளாகின்ற நூல்களை, தளைகெழு சத்தி—பற்றி விளங்கியிரா நின்ற, சத்தி தத்துவம், சிவ தத்துவந் தன்னில் ஒடுங்கிடும்—கூறப்பட்ட சிவ தத்துவனிடத்து கரந்து நிற்கும், கிளை தருமாயை—பலவாறாகந் பிரிந்து விரிந்து நிற்கும். மாயா தத்துவம், சிவத்தோடு அணுவுக்கும் கேடு இல்லை ஏ-சிவத்துடனாய உயிர்கட்கு (மலபந்தமற்ற ஆன்மாக்கட்கு) நாசமில்லையென்றபடி (எ-று) ஏ—அசை நிலை. இதனால் மலவலி தொலைந்து கிடக்கும் என்பது புலனாயிற்று.

குறிப்பு :— சுத்த தத்துவம், சிவ தத்துவமெனப் பெறும், இவை, நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம் (மகேச்சுரம்), சுத்த வித்தை யென்பனவாம். பரசிவம் ஆன்மாக்களிடததில் வைத்த அருளினாலே அவர்களை யிரட்சிக்க இச்சை கூர்ந்து குடிலையின் ஏக தேசத்தைக் கலக்க,

அதிலிருந்து நாததத்துவமும் இதிலிருந்து விந்து தத்துவமும்தோன்றும் நாததத்துவத்திற்குச்சிவம் அதிபதியாகலான் இதற்கும் சிவமென்று பெயருண்டு எவ்வெப் பெயர்கள் எவ்வெத் தத்துவாதிபதிகளுக்குளவோ அவ்வெப் பெயர்கள் அவரவர்களால் அதிட்டிக்கப்படும் தத்துவங்களுக்குமாகும் நாதமாவது சர்வான்மாக்களுக்கும் அறிவை யெழுப்புவித்து நிற்கின்ற ஞானம் விந்துதத்துவம் சித்தாந்தப்படத்தில் முப்பத்தைந்தாவது தத்துவம் இதற்குச் சத்தி யென்று பெயர்.

விந்தாவது சர்வான்மாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற கிரியை ஞானமென்பதைச் சித்தாந்தப்படத்தில் நாததத்துவசக்கரத்துள்ளிருக்கும் வெண்மை நிறங் காட்டும் கிரியை யென்பது விந்து தத்துவச் சக்கிரத்துள்ளிருக்கும் செம்மை நிறங்காட்டும்.

விந்து தத்துவத்திலிருந்து சாதாக்கியம் தோன்றும் இதற்குச் சதாசிவ மென்றும் பெயர் சாதாக்கியம் என்பது ஞானக்கிரியைகள் ஆகிய நாதவிந்துக்களிரண்டுஞ் சமமாய்க் கூடியது.

சாதாக்கியத்தத்துவத்திலிருந்து கிரியை மிகுந்து ஞானங் குறைந்ததாகிய ஈச்சுரம் தோன்றும் இதற்கு மகேச்சுரமென்றும் பெயர் ஈச்சுரதத்துவத்திலிருந்து ஞானமிகுந்து கிரியை குறைந்ததாகிய சுத்தவித்தை தோன்றும் இவ்வைந்து தத்துவங்களும் ஞானக்கிரியா சொரூப பேதங்களாகும்.

'ஞானமே யானபோது சிவன்றொழின் ஞான
மொக்கின்
ஈனமில் சுதாசிவன்பேர் ஈசனாம் றெழில தேறின்
ஊனமேற் கிரியை வித்தை யுருத்திரனிலய போக
மானபே ரதிகாரத் தோடதிகர ணத்தணாமே''

என்பது சித்தியாகும் தத்துவங்களின் இலயம் எங்ஙனம் என்னில் சுத்ததத்துவம் சத்தியினுள் ஒடுங்கும் சத்தி இவற்றுள் ஒடுங்கும் என விளக்கிற்றாம்.

கிரமம் எங்ஙவமெனில்.

1. '' பரசிவம் பிரம மென்னப் பட்டொரு திரிவு மின்றி
யுரைமன மிறந்து நின்ற வொருசிவ லிங்கந் தன்னுள்
வருமுயர் சதாசிவன்றான் மற்றவென் றனைப்பொ
ருந்தும
அருமைகொள் ஞான சத்தி யவர்களாற் சிவனு
திப்பன்

2. சாற்றுமச் சிவனுக் கிச்சா சத்தியல் விருவ ராலும்
தோற்றுவ னுருத்தி ரன்றன் சொல்லிய வவற்குச் சத்தி
மாற்றருங் கிரியை யென்பர் மற்றவ ரிருவர் பாலும்
போற்றுறு மரியு திப்பன் பொறியவன் சத்தி யாமால்

3. அத்திரு மாலு மாவும் அளிப்பவந் துதிப்பன் வண்டு
மொய்த்திசை முரலுஞ் செங்கேழ் முளரிவா னவன வற்குச்
சத்தியெலாங் கமலை யன்னோர் தரவரு முலகின் றோற்றும்
நித்தனங் குருந கேசன் நினைவுமாத் திரையினாமால்"

என்றும் பிரபுலிங்கலீலைச் செய்யுளான் தோற்றமாகிய கிரமமும் இதுவென வறியற்பாலதாகும். களைகண்-ஆதாரம் (பற்றுக்கோடு) காழியர்கோன்—பரசிவம், விளைபுலன் — தொழிலாகிய கிரியை உண்டாகுமிடம், மேதகுநூல்-மேலா நிலைமையினையளிக்கு வேதமும் ஆகமுமாம். தளை-பந்தம் (கட்டு) ஒடுங்கும்—தன் வலியற்று மறைவுறும். கிளை தரு மாயை—பலவாறாக விரிந்துள்ள மாயா தத்துவம். கேடு—நாசம், இல்லை—உண்டாதல் கூடாது.

இல்லா தனபிறந் துள்ளன
மாயுமென் றிம்மயக்க
நல்லா கமமறிஞர்க்கில்லை
நாட்டிய தத்துவங்கள்
எல்லா மியம்பு முறையே
பிறக்கு மிறக்குமுத்த
ரல்லா வணுக்கட் கநுபவ
காரிய மாகி நின்றே. 49

(இ-ள்) இல்லாதன பிறந்துள்ளன மாயும் என்று இம்மயக்கம்—இல்லாதனவும் தோன்றப்பட்டனவும் மாய்தலையடையப் பெறும் என்று கருதப் பெறும் இந்த மயக்கமானது. நல் ஆலயம் அறிஞர்க்கு இல்லை—நல்லனவற்றினையே நவிலவுறும் சிவாகமச் செந்நெறி நூல்களை நன்கு கற்றுணர்ந்த சிவஞானிகட்கு உண்டாதல் கூடாது, நாட்டிய தத்துவங்கள் நூல்களால் (சைவசித்தாந்த சாத்திரங்களால்) நிலைபெறுத்தப் பெற்ற தத்துவங்கள், எல்லாம் இயம்பும் முறையே—அனைத்தையும் கூறும்

அடைவே, பிறப்பும் இறப்பும்—பிறத்தலும் இறத்தலும் ஆகிய இரண்டு துன்பங்களும், முத்தர் அல்லா அணுக்கட்கு-விடுபட்டவராகிய சீவன் முத்தர் அல்லாத உயிர்கட்கு. அநுபவம் காரியம் ஆகி நின்று ஏ—அநுபவங்களாகின்ற செயல்கள் ஆகி நிலைத்துளதாம். (எ-று). ஏ. அசைநிலை.

சீவன் முத்தரல்லாத உயிர்கட்கு என்றும் பிறப்பும் இறப்பும் உளதாம். இதுவே அநுபவச் செயலாக நிலை பெறும் என்றபடி, மயக்கம்—விபரீதவுணர்வு, ஆகமம்-முப்பொருள் உணர்த்துவது, ஈசானாதி ஐம்முகங்களினின் றும் முனிவரர்க்கு திருவாய் மலர்ந்தருளப் பெற்றவை இவற்றின் நெறிகள், சரியை கிரியை யோக ஞான பாதங் களாகின்ற மார்க்கங்களாம். இந்நெறி—பத்தி நெறியும் ஆகம நெறியும் என இருவகைத்தாம்.

"பண்டைநற் றவத்தாற் றோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினிற் றொருப்பன் மார்க்கர்
கண்டநூ லோதி வீடு
காதலிப் பவர்கட் கீசன்
புண்டரீ கத்தாள் சேரும்
பரிசினைப் புகல லுற்றாம்"

என்னும் பாடலானும் அறியக்கிடக்கும்.

"தோன்றின மாயையும்" எனலை யுண்மையென்றுண ராததும் இல்லாதன என்று மில்லாதனவேயாம் என்றுண ராததும் மயக்கமேயாகும். மாயும்-அழிவுறும், அறிஞர்-உள்ளதை யுள்ளவாறே யுணரும் மெய்ஞ்ஞானிகள், நாட் டிய-நிலைபெறுத்திய, தத்துவங்கள்-உண்மைப் பொருள் கள். (ஆன்ம வித்தியா சிவ தத்துவங்கள்) இயம்பும்-பல வாறாகக் கூறும. பிறத்தல்-உண்டாதல், இறத்தல்-சாதல், ஈண்டுப் பிறத்தல் இறத்தல் என்றது வினைகளான் வந்த

உடம்புகள் அழிதலும் உண்டாதலும், முத்தர்-விடுபட்டவர், அணுக்கள்-உயிர்கள், அல்லா-ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், காரியச் செயல்கள், அநுபவம்-நுகர்வு, நின்ற-நிலைத்து, சீவன் முத்தர்-இயல்பாகவே சிவஞான முதிர்ச்சியினால் பிறத்தலும் இறத்தலும் நீங்கப் பெற்றவர்களாம்.

ஆகுத லாவது தோற்ற
மடக்க மழிதலென்றே
நீகுறி யாயெள்ளு மெண்ணெயும்
போனினை நீண்டகொம்பிற்
கோகில மார்பொழிற் கொச்சைப்பி
ரான்கழற் கூடுதற்கே
யாகுமென் றேயணுக் கட்கியல்
யாகு மநுபவமே. 50

இப்பாட்டு இறைவனது மலரினை யடிகளை யடைவதற்குபாயங் கூறிற்று.

(இ-ள்) தோற்றமாவது ஆகுதல்-பிறத்தலானது உண்டாதலாம், அழிவு ஆவது அடக்கம் ஆம்-அடக்கம் எனப்படுவது மாய்தல் உறுலதாம், என்று ஏ—என்று கருதியே நீ குறியாய்—மாணாவகனே நீ குறித்துணர்வாயாக எள்ளும் எண்ணெயும் போல்—எள்ளாகிய தானியமும் தானியத்தினிடத்து எங்கும் வியாபகமாய் நிறைந்திருக்கும் தைலமும் போல, நினை—நினைப்பாயாக நீண்ட கொம்பில்—மிக உயர்ந்திருக்கின்ற கிளைகளில், கோகிலம்—குயில்கள், ஆர்பொழில்—பொருந்திய சோலைகள், சூழ்ந்திருக்கின்ற, கொச்சை—கொச்சை யெனும் பெயரிய சீகாழிப் பதியில் எழுந்தருளியிருக்கின்ற, பிரான்-பெருமாள், கழல்-திருவடித் தாமரைகளை, கூடுவதற்கு—சென்றடைவதற்கு ஆகும், சித்திக்கப் பெறும், என்றே—எனவே, அணுக்கட்கு உயிர்கட்கு, அநுபவம்—நுகர்வு, இயல்பு ஆகும்—இயற்கையாகும். ஏ—அசை நிலை (எ-று.)

குறிப்பு:- இரு வினையொப்பு மலபரிபாகச் சத்திநி பாதத்து உத்தமர்கட்கு அநுபவம் இறைவனடியிணைக் களைக் கூடுதற்கு இயல்பாகும் என்றபடி.

தோற்றம்—உண்டாதல், அடக்கம்—அடங்குதல் (செய நேல்) குறியாய்—குறித்துணர்வாய். இறைவன் உலகினில் எள்ளும் எண்ணெயும்போல் வியாபகமாயிருப்பன் எனக் கொள்ளவைத்தார். இப்பாட்டின்கண் நினை—முன்னிலை யேவல், நீண்ட கொம்பு—பெயரெச்சத்தொடர், கொம்பு— கிளை கோகிலம் குயில், பொழில்—சோலை கொச்சை— சீகாழியின்பன்னிருதிருப்பெயர்களிலொன்றாம் பிரான்— தலைவன், கூடுதல்-சென்றடைதல், ஏகாரங்கள் இரண்னுள் முன்னது தேற்றமும் பின்னது அசைநிலையுமாம்.

பவமே வியநெறிப் பந்திக்கு
யீசன் பசுக்கட் ம்மை
யவமே வியநெறிப் போகங்க
ளான்முற்ற வந்நிலையே
தவமே வியநெறி சத்திக்கண்
ணாச்சென்று சார்ந்துபின்னைச்
சிவமே வுவரென்று காண்கொச்சைக்
காவலன் சித்திரிப்பே (51)

இப்பாட்டு இறைவனுடைய படைப்பு, காப்பு, அழிப்பு மறைப்பு, அருளல் ஆகிய சித்திரித்தலை நீ நற்குணர்ந்து கொள்வாயாக எனவும் சத்தியன் மூலமாகச் சிவத்தை யடையு நெறியிது வெனவும் கூறிற்றார்.

(இ-ள்) பவம் மேவிய நெறி பந்திகளும் — பிறவிப் பெரும் பிணியை பொருந்திய நெறியினை நன்கு பிணிக்கும் பசுக்கள் தம்மை உயிர்களை ஈசன்-பரமேசுவரன், பவமேவிய நெறிபோகங்களால்பிறவிப் பெரும்பிணியினைத் தருவதாகிய நுகர் பொருளான் கொண்டு அவ்வினைப் போகங்கள் அறவே மொழியுமாறு.

அநிலையே—அவ்வழியாகவே, தவம் மேவிய நெறி—அவச் செயலைப் போக்கும் தவச்செயல் மேவிய மார்க்கமாகவே. சத்திக்கண் ஆ (க) சென்று—அருட்சத்தி வழியினிடமாகச் சென்று (போய்) சார்ந்து—சிவமாந்தன்மைப் பேற்றைச் சார்ந்து (அடைந்து) பின்னை—அதன்மேல். சிவம் மேவுவர்—சிவபோகமாகின்ற முத்திப் பேற்றினையடைகுவர் என்று, காண்—நற்குணஞ்சான்ற மாணவக நீ. நன்கு அறிவாயாக எ—அவை நிலை (எ—று).

குறிப்பு :- "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அ ரெனின்"

என்பது திருக்குறள்.

எல்லா நூல்களையுங் கற்றவருக்கும் அக்கல்வியாறிவினாலாகிய மெய்யுணர்வினையுடையானுடைய தாள்களை வணங்காராயின் என்ன பயன் ஒன்றுமில்லை, ஆகவே ஆகம அறிவிற்குப் பயன் அவ்விறைவனுடைய நல்ல தாளைத் தொழுது பிறவியறுக்க வேண்டுமென்பதே கருத்தாம் என வற்புறுத்துகின்றது கொச்சைப்பிரான் எனவே பதிப் பொருளுண்மையும், எனவே பசுக்கள் எனவே பசுப் பொருளுண்மையும், பவமேவிய நெறிப்பந்திக்கும் எனவே பாசங்கள் உண்மையும், இம்முப்பொருள் பற்றியுரைப்பதே ஆகம நெறியென்பதும் இப்பாடலில் குறிப்பாற் கொள்ள வைத்தமை நன்கு உய்த்துணரக் கடவதாம், பசுக்கள் எனவே பாசங்களாற் பந்திக்கப் பட்டமையு முணரல் வேண்டும், பாசங்கள் நீங்கப்பெறவே முத்திப் பேறாகிய சிவப்பேறு என்பதும் கொள்ளவைத்தார். சிவாம் மேவுவர் என்றதால்.

தவம் மேவிய நெறி—சரியை கிரியை யோக மார்க்கங்கள். சரியா ஞானம், கிரியா ஞானம் யோக ஞானம் ஆயவை முற்றிய பின்னர்த்தான் சன்மார்க்கமாகிய ஞான மார்க்கம் கைவரம் பெறும். இதுகூடவே சிவமேவுதல் கூடும்.

"மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தலி யோகத்தான்
மணியிரத குளிகையினான் மற்று — மற்றும்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்க டிரிகால ஞான
மந்தமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா
மடைந்திடு மாசானருளா லடிசேர் ஞானம்
வந்திடுமற் றொன்றாலும் வாரா தாகும்
மற்றவையும் அவனருளான் மருவு மன்றே."

என்பது சிவஞான சித்தியார் பன்னிரண்டாஞ் சூத்திரச் செய்யுளாம். இப் பாட்டு அரனே யாசானாகி வந்தருளிப் பவப் பிணி போக்கிச் சிவத்திடைச் சேர்ப்பிக்கும் ஞான நெறி கூறியிருத்தல் காண்க.

வள்ளல் பிரான் மலரடி வாழ்க
தத்துவ விளக்கவுரை முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

# தத்துவ விளக்கம்.

## பிற் சேர்க்கை.

மேற்கூறிப் போந்த கருவிகளுடன் கூடி ஆன்மா கேவல சகல சுத்தம் என மூன்றாகத்தப்படும்.

இவை மூன்றும் ஒவ்வொன்று ஐந்தாய்க் காரியப்பட்டு காரியாவத்தைப் பதினைந்தும் மூன்றுங் கூட்டிப் பதினெட்டு அவத்தை யெனப்படும்.

அவையாவன :— சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனக் காரிய கேவலாவத்தை ஐந்து, சாக்கிரத்திற் சாக்கிரம், சாங்கிரத்திற் சொப்பனம் சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் றுரியம், சாக்கிரத்திற் றுரியாதீதம் எனக் காரிய சகலாவத்தை ஐந்து; நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் எனக் காரிய சுத்தாவத்தை ஐந்து, இவற்றிற்குக் காரணமான காரண கேவலம், காரண சகலம, காரண சுத்தமெனக் காரணவத்தை மூன்று, ஆக அவத்தை 18.

இவற்றுள் கேவல சாக்கிரமாவது, ஆன்மா ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, தன் மாத்திரை 5, அந்தக் காரணம் 4, புருடன் 1, வாயு 10, வசனாதி 5, ஆக முப்பத்தைந்து கருவிகளுடன் கூடி புருவ மத்தியில் நிற்கும் அவதரம்,

கேவல சொப்பனமாவது. ஆன்மா மேற்கூறிய முப்பத்தைந்து கருவிகளில் ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகளும் புருவ மத்தியில்

நிற்க எஞ்சிய இருபத்தைந்து கருவிகளுடன் கூடிக் கண்டத் தானத்தை யடைந்து நிற்கும் அவதரம்.

கேவல சுழுத்தியாவது, ஆன்மா அந்த இருபத்தைந்து கருவிகளில் இருபத்திரண்டு கருவிகள் கண்டத்தில் நிற்க எஞ்சிய சித்தம் பிராணன் புருடன் என்னும் மூன்று கருவி களுடன் கூடி இதயத்தானத்தை யடைந்து நிற்கும் அவதரம்.

கேவல துரியமாவது, அவற்றுள் சித்தம் ஒன்றும் இத யத்தானத்தில் நிற்க பிராணன் புருடனென்னும் இரண்டு கருவிகளுடன் கூடி ஆன்மா நாபித்தானத்தை யடைந்து நிற்கும் அவதரம்.

கேவல துரியாதீதமாவது, பிராண வாயு வொன்றும் நாபியில் நிற்க புருடனுடம்பாக ஆன்மா மூலாதாரத்தில் அடங்கி நிற்கும் அவதாரம்.

இங்ஙனம் கேவல சாரியாவத்தை ஐந்திற்கும் கருவிகள் நிற்பதற்குப் பிரமாணம்.
தாயுமானவர் பாடல்.

சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்துஞ்
சத்தாதி வசனாதி வாயு பத்து
நீக்கமிலந் தக்கரணம் புருட னோடு
நின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத்
தாக்கிய சொப் பனமதனில் வாயு பத்து
மடுத்தனசத் தாதிவச னாதி யாக
நோக்குகர ணப்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே

சுழுத்தியித யந்தனிற் பிராணன் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிராணனோடு ;
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கு ;

மழுத்திடுமூ லந்தன்னிற் றுரியா தீத
மதனிடையே புருட னொன்றி யாரு ஞானம்
பழுத்திடபக் குவர றிவ ரவத்தை யைந்திற்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே.

எனவரும்.

இனி ஆன்மா சாக்கிரத் தானத்திலே அடையும் ஐந்த வந்தைகளுக்கு விவரமாவது ; ஒரு பொருளை மறந்தவன் அந்தப் பொருளைக் காணாதபோது பிராண வாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் றுரியா தீதம். இனி, அந்தப் பிராண வாயு இயங்கத்தக்கதாகப் பெரு மூச்செறிந்து விசாரித்து அறிவோமென்று நின்ற அவதர நிலையிற்படும், அவத்தை சாக்கிரத்திற்றுரியம். இனி அவ்விடத்திலே யல்லோ போனோமென்று நினைவெழுந்திருந்த அவதர நிலையிற் படும் அவத்தை சாக்கிரத்திற் சுழுத்தி இனி இன்னவிடத்தி லே யல்லோ பொருள் வைத்தோமென்று விசாரப்பட்டு அறிந்த அவதர நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் சொப்பனம். இனி அந்தப் பொருளை வைத்தவிடத்திலே சென்று கண்ட நிலையிற்படும் அவத்தை சாக்கிரத்திற் சாக்கிரம்,இதற்குப் பிரமாணம் :

விரும்பு மரும் பொருளை வீழ்த்து மயங்க
விரிந்தவ னிலன் பெறுகை—வருந்தறிவு
தோன்றுத லையம் விழுந்த விடந் தோன்றுதலெ ன்
றான்றவைந்துஞ் சாக்கிர த்தி னாம்.

என்பவரும்.

இவ்வாறு அடைந்த அவத்தைகளுக்குக் கருவிகள் நிற்கு முறைமை சாக்கிரத்திற் சாக்கிரமாவது சுத்த தத்து வங்கள் ஐந்தும் தொழிற்படும். அவதரம். சாக்கிரத்திற் சொப்பனமாவது சிவம் சத்தி சாதாக்கியம் ஈச்சுரங்களாகிய நான்கு தத்துவங்களும். தொழிற்படும் அவதரம். சாக்கிரத் திற் சுழுத்தியாவது சிவம் சத்தி சாதாக்கியமெனும் மூன்று

தத்துவங்களும் தொழிற்படும் அவதரம் சாக்கிரத்திற் றுரியமாவது சிவம் சக்தியெனும் இரண்டு தத்துவங்களும் தொழிற்படும் அவதரம் சாக்கிரத்திற் றுரியாதீதமாவது சிவ தத்துவம் ஒன்றே தொழிற்படும். அவதரம் இதற்குப் பிரமாணம். சித்தியார் 4-ம் சூத். 36.

ஐந்துசாக் கிரத்தி னான்கு கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியாதீதத்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந்தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயறோற் றுணர்ந்து
கொள்ளே

எனவரும்.

இனி நின்மல சாக்கிரமாவது சிவதத்துவம் ஐந்தில் சுத்தவித்தை நீங்காமல் நீங்கின அவதரம்.

நின்மல சொப்பனமாவது சுத்தவித்தையும் ஈச்சுரமும் நீங்காமல் நீங்கின அவதரம்.

நின்மல சுழுத்தியாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியம் மெனும் மூன்றும் நீங்காமல் நீங்கின அவதரம்.

நின்மலதுரியமாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியம் சத்தியெனும் நான்கும் நீங்காமல் நீங்கின அவதரம்.

நின்மலதுரியாதீதமாவது சுத்த தத்துவம் ஐந்தும் நீங்காமல் நீங்கின அவதரம். இவை ஐந்து தத்துவங்களும் நீங்காமல் நீங்க வென்றது கொண்டே இவை ஐந்தாலும் செலுத்தப்பட்ட கருவிகளும் நீங்காமல் நீங்க வென்பதாயிற்று. இதற்குப் பிரமாணம் சிவஞான போதம் 4-ம் சூ 3-ம் அதி:-

இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து—மிலாடத்தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

என்றதில் " அது வாங்கு " என்பதைக் கண்டு கொள்க.

இனி காரண கேவலமாவது, சர்வ சங்கார காலத்தில் ஆன்மாக்கள் மாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவ மலத்தால் மறைப்புண்டு ஒன்றும் அறியாமற் கிடக்கும் அவதரம்.

காரண சகலமாவது, ஆன்மாக்கள் சிருட்டி தொடங்கி சர்வ சங்காரமளவும் ஆன்மாக்கள் யோனிவிட்டு யோனி பற்றி எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களிலும் பிறந்து இறந்து வருகிறது.

காரண சுத்தமாவது, ஆன்மாக்கள் இறைவனது திருவடிகளிலே பிரண்டறக் கூடிநிற்கும் பரமுத்தியாகும் இவைகளுக்குப் பிரமாணம், சித்தியார் 4-ம் சூத்

கேவல சகல சுத்த மென்று மூன்றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய்ப் பொறிக ளெல்லாங்
காவலன் கொடுத்த போது சகலமா மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையனுந் மலந் துடைத்தே. 37

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்களில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்திலான்மா. 38

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாய் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு மூன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சீவன் சென்றே. 39

இருவினைச் செயல்களொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான போகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் மறுத்தப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே. 40

எனவரும்.

இனி ஆன்மா சாக்கிராவத்தையை அடைந்து சுரோத்திராதி பஞ்சேந்திரியங்களின் வாயிலாய் சப்தாதி விடயங்களை அறியும் வகையைச் சிறிது விளக்குவாம்

## சுரோத்திரம்.

சுரோத்திரமானது நம்மைச் சூழ ஏற்படும் பேரிரைச்சல்களையும் சத்தங்களையும் நமக்கு அறிவிக்கின்ற ஓர் இந்திரியமாகும். அதற்கு முக்கிய அவயவம் காது.

காதில் வெளிக்காது, நடுக்காது, உள்காது, என மூன்று பிரிவுகள் உண்டு.

வெளிக்காதானது காது மடலும், காதுத் துவாரமுஞ் சேர்ந்தது. காதுமடல் முருந்தால் (குருத்தெலும்பால்) ஏற்பட்டது. அது மேடு பள்ளமாயிருக்கும். காது மடலின் கீழ்த் தொங்கிக்கொண்டிருக்கிற மிருதுவான சருமத்துக்குச் சொணைக்காது என்று பெயர். காதுத் துவாரம் காது எலும்பில் சாய்வாய்த் தோண்டப்பட்டது. அது சுமார் ஒரு அங்குல நீளம் உள்ளது. அதில் உரோமங்கள் உண்டு. அதில் குறும்பி சுரக்கும். அந்த உரோமங்களும் குறும்பியும் தூசு எறும்பு முதலியவைகளைக் காதுக்குள் பிரவேசிக்கவொட்டாமற் செய்யும். காதுக்குள் அண்ட வடிவமான ஓர் சவ்வு உண்டு. அதற்குக் காதின் உட்சவ்வு அல்லது பறையென்று பெயர். இந்தச் சவ்வுதான் நடுக்காதை வெளிககாதினின்று பிரிக்கிறது.

நடுக்காது:— காதின் உட்சவ்வுக்குப் பின்புறமாயுள்ள இடத்திற்கு நடுக்காதெனப் பெயர். அதில் நான்கு சிறிய எலும்புகள் ஒன்றின்பின் ஒன்றாய்க் காதின் உட்சவ்விலிருந்து உட்காதின் வாசல் வரையில் செல்லுகிற சங்கிலி போன்றும் வில்வளைவாயும் அமைந்திருக்கின்றன. அவைகளில் சுத்தியல் போன்றிருப்பதற்குச் சுத்தியல் எலும்பென்றும், பட்டடை (அடைகல்) போன்றிருப்பதற்குப்

பட்டடை யெலும்பென்றும், கற்கிளிஞ்சில் போன்றிருப்பதற்குக் கற்கிளிஞ்சில் எலும்பென்றும், அங்கபடியைப் போன்றிருப்பதற்கு அங்கபடி எலும்பென்றும் பெயர்.

நடுக்காது ஆகாயம் நிறைந்தது. அதில் இருந்து பங்கா போன்று சுமார் $1\frac{3}{4}$ அங்குல நீளமுள்ள குழல் ஒன்று தொண்டைக்குப்போகும். அந்தக் குழல் மார்க்கமாய்க் காற்றுச் சஞ்சரிக்கும். அதனால் காதிறுப்பின் இரண்டு புறமும் ஆகாயத்தின் மோதுதலுக்கு எப்போதும் உட்பட்டிருக்கிறது ஆதலினாற்றான் வெளியிலுண்டாகுஞ் சத்தத்தையும் கண்டத்திலுண்டாகுஞ் சத்தத்தையுங் கேட்க இடனாகிறது.

கண்டத்துக்கும் நடுக்காதுக்கும் உண்டாகிய தடையற்றச் சம்பந்தத்தை வெகு சுலபமா யறியலாம். மூக்கின் துவாரங்களை அடைத்துக்கொண்டு எச்சில் விழுங்கினால் உடனே காதில் ஒரு எதிர்தாக்கை உணருகிறோம். அது, நாம் எச்சிலை விழுங்குங் காலத்தில் கண்ட நாளத்தில் உள்ள ஆகாயம் நாசித் துவாரத்தின் வழியாய்ப் போக முடியாமல் நடுக்காதுக் குழியில் நுழைகிறதால் உண்டாகிறது.

உட்காது நடுக்காதினின்றும் அண்டவடிவும் வட்டவடிவுமான இரண்டு சன்னல்கள் வழியாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது அண்ட வடிவான சன்னலில் அங்கப்படி எலும்பின் அடிப்புறம் பொருந்தி யிருக்கிறது. வட்டவடிவச் சன்னல் ஒரு சவ்வால் மூடப்பட்டிருக்கிறது உட்காதில் ஒரு பள்ளமும் மூன்று வளைந்த குழல்களும் நாகர்வண்டின் ஓடுபோன்ற ஓர் எலும்பும் இருக்கின்றன. பள்ளத்துக்கு வாரியென்றும் வளைந்த அம்மூன்று குழல்களுக்கும் திரிதடங்களென்றும், எலும்புக்குக் கம்பு என்றும் பெயர் வாரியென்னும் பள்ளம் அண்டவடிவச் சன்னலின் பின்னால் இருக்கிறது அதில் அந்த மூன்று குழல்களும் சேர்ந்திருக்கின்றன உட்காதில் ஓர்வித விசேஷமான நீர்நிறைந்திருக்கிறது அதன் மேல் கேள்வி நரம்பின் இழைகள் மிதந்துக்கொண்டிருக்கின்றன.

இத்தன்மைத்தாகிய காதின் மடலில் மோதுகிற சத்தத்தின் அலைகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டுக் காதுத்துவாரத்துள் செல்லுகின்றன. பின் அலைகளின சேர்க்கையில் காதின் உட்சவ்வில் (பறையில்) ஓர் அதிர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. அவ்வதிர்ச்சி நடுக்காதிலுள்ள எலும்புச் சங்கிலியின் மூலமாய்ச் செலுத்தப்பட்டு உட்காதினுள்ளிருக்கும் நீரிலும் கேள்வி நரம்புகளிலும் சலனத்தை யுண்டு பண்ணுகிறது. இவ்வாறு தூண்டப்பட்டக் கேள்வி நரம்புகளின்மூலமாய் ஆன்மசிற்சத்தி சத்தத்தை யறிகிறது.

செவிட்டுத் தன்மை காதினுட் சவ்வின் தடிப்பினாலும் நடுக்காதிலுள்ள எலும்புச் சங்கிலியின் அசைவின்மையினாலும் சந்து பொருந்தாமையினாலும், வெகு அரிதாய்ச் சம்பவிக்கிற உட்காதின் அவயவங்களின் சிலகெடுதியினாலும் உண்டாகின்றது. நடுக்காதுக்குங் கண்டத்துக்குமுள்ள குழாய் வியாதிகளினால் அடைபட்டால் காது மந்தமுண்டாகிறது. இந்தக் குழாயினது ஆகாயத்தின் தடையற்றத் தன்மையானது கேள்வி நரம்புகள் சுத்தத்தைக் கிரகிப்பதற்கு இன்றியமையாத முக்கியமாயிருக்கிறது. நன்றாய்க் கேழ்க்க விரும்பினோரிற் சிலர் வாயைத்திறந்து கொண்டு கேழ்ப்பதே அதனை வலியுறுத்துகிறது.

செவிட்டுத் தன்மை பிறப்பிலேயே உண்டாயிருந்தால் பிள்ளைகளுக்குக் கேட்குந் தன்மை யில்லாமையால் அவர்கள் பேசப் பழகக் கூடுமாயில்லை. ஆகையால் அவர்கள் பிறவிச் செவிட்டுடன் ஊமையாயும் இருக்கிறார்கள்.

## துவக்கு

துவக்கு இந்திரியமானது வஸ்துக்களின் இருத்தலையும், வடிவத்தையும், பருமனையும், சீதோஷ்ணங்களையும் நமக்கு நிச்சயிக்கச் செய்யும் அறிகருவியாகும். அது தோலைத் தனக்கு அவயவமா யுடையது ; ஆனால் அது

எவ்விடத்திலும் ஒரேவித நுட்பமாயறிகிறதில்லை. ஆகையினாற்றால் மனிதர்களுக்கு விரல்களின் முனையிலும் நாவின் முனையிலும் அக்கருவி அதிகரித்தச் சக்தியுடையதாயிருக்கிறது.

சரீரத்தை மூடிக்கொண்டிருக்கிற தோலுக்கு ஒன்றின் மேல் ஒன்றாயிருக்கிற இரண்டு புரைகள் உண்டு. மேற்புரைக்கு வெளித்தோல் என்றும் அதற்கடியிலிருப்பதற்கு உள்தோல் என்றும் பெயர். இந்த இரண்டு தோல்களுக்கும் இடையில் ஓர்வித பசையான வஸ்து உண்டு. அதற்குச் சரும மத்திய வஸ்து என்று பெயர். அது சரீரத்துக்கு நிறத்தைக் கொடுக்கிறது. அந்தப்பசை உஷ்ணப் பிரதேசிகளுக்குக் கறுத்தும், சிதளப் பிரதேசிகளுக்கு வெளுத்தும், சீதோஷ்ண விகாரத்துக்குத் தக்கபடி பலநிறமாயும் இருக்கும். ஆகையால் அததற்குத் தக்கதாகத் தேசவாசிகளின் தேக நிறமிருக்கும்.

வெளித்தோல் பெரும்பாகம் மெல்லியதாயிருக்கும அது "பாபில்லி" என்று பெயருள்ள ஓர்வகை வஸ்துக்களைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறது அவைகளில் உள்தோலை ஊடுருவி வருகிற பரிச நரம்பின் நிரைகள் இருக்கும் எண்ணில்லாத பரிச நரம்புகளும், இரத்த நரம்புகளும் ஊசிமுனை நாட்ட இடமில்லாமல் அவ்வளவு நெருக்கமாய் வெளித்தோலில் நிறைந்திருக்கின்றன. வெளித்தோல் எடுபட்டபோது பரிச நரம்புகள் வஸ்துக்களில் நேரே சம்பந்தம் உறுவதால் பரிசவுணர்ச்சி நீங்கித் துன்பம் உண்டாகிறது, வெளித்தோல் தேய்த்தலினால் அதாவது இழைதலினால் மிகுந்த தடிப்பான கனத்தை அடைகிறது. வேலைக்காரர்களின் கைகளிலுண்டாகும் காய்ப்பே அதற்குச் சான்றாகும். நகம், உரோமம், பட்சிகளின் இறகு, சிப்பி, ஓடு, கொம்பு, குளம்பு முதலியவை வெளித்தோலின் விளைவேயாகும். ஒரு உரோமத்தின் அடிப்பாகத்தை 25-வது படம் காட்டுகிறது.

உள்தோலானது இரத்த நரம்புகளாலும் பரிச நரம்புகளாலுமான பின்னலை யுடையதாயிருக்கிறது. உள்தோலின் அடிப்பாகத்தில் நிணக் கோளங்களும் சுவேத கோளங்களும் உண்டு. நிணக் கோளங்களில் உண்டாகிற எண்ணெய்ப் பசையானது உரோமக்கால் வழியாய் வெளிப்பட்டுச் சருமத்துக்கு மிருதுந்தன்மையைக் கொடுக்கிறது. குளிர்ச்சியினால் எண்ணெய்ச் சனிப்பு நின்றுவிட்டால் காய்ந்து வறண்டு வெடித்துப்போகும். பனிக்காலங்களில் இந்தச் சம்பவம் விசேஷமாய் நிகழும். சுவேதகோளங்களில் வேர்வை உண்டாகிறது. பதனிடப்பட்டு உபயோகிக்கத் தக்கது மிருகங்களின் உள் தோலேயாகும்.

இத்தன்மைத்தாகிய தோலில் பரவியிருக்கும் பரிச நரம்புகளின் மூலமாய் ஆன்மசித்சத்தி பரிசத்தை யறியும்.

## சட்சு

சட்சு இந்திரியமானது, தனக்கு அவயவமாவதும் வெளிச்சத்தை இன்றியமையாத் துணையாகக் கொண்டதுமானபார்வை மண்டலத்தின் உதவியால் வஸ்துக்களின் நிறம் வடிவம் பருமன் அசைவு முதலியவைகளை ஆன்மாவுக்கு அறிவிக்குங் கருவியாகும்.

பார்வை மண்டலமானது விழியையும் (ஐபால்) பார்வை நரம்பையும் (ஆப்டிக்நேர்வ்) சில சேர்க்கையான அவையவங்களையும் தனக்கு அங்கமாக உடையது. கண் கோளம் உருண்டையாயிருக்கிறது. அது, ஒரேமையத்தில் ஒன்றாய்க் கூடுகிற மூன்று மூடிகளை (புரைகளை) உடையது அவையாவன : சுக்கிலமண்டலம் (கண்ணின் மேற்றோல்.) 2- கிருஷ்ணமண்டலம், 3- ரூபஉற்பத்தி சவ்வு (ரேடினா) என்பவைகளாம், இவை கண் கோளத்தின் வெளியிலிருந்து உட்புறமாக அடைவே ஒன்றின் மேல் ஒன்றாயிருக்கும்.

சுக்கில மண்டலமானது. வெள்ளைவிழி ஆணிச்சவ்வு என இரண்டு வகையாயிருக்கும். வெள்ளைவிழி வெண்மை

யாய் உறுதியாயிருக்கும். அது சவ்வினத்தைச் சேர்ந்தது. ஆனிச்சவ்விற்குச் சுக்கில மண்டலமெனச் சிறப்புப் பெயருண்டு. இது விழியின் முன்புறமாய் வளைந்து, வட்டமாய் வெள்ளையாய் அழுத்தமாய் கைக்கடியாரக் கண்ணாடி போன்றிருக்கும். இது கண்ணாடியைப் போலவே பிரகாசம் ஊடுருவிச் செல்லுந் தன்மை யதாதலால் இதற்குப் பின்னாலிருக்கும் கறுத்தச் சவ்வால் இதுவுங் கறுப்பாகவே காணப்படுகிறது. இது அடுத்த வெள்ளைச் சவ்வோடு ஒட்டிக்கொண்டிருக்கும்.

கிருஷ்ண மண்டலம் : இது விழியின் மத்திய புரை இரத்த நரம்புகளால் ஏற்பட்டுக் கறுத்திருக்கும். பின்னால் கறுத்தப்பசை ஒட்டிக்கொண்டிருக்கும். அதுமுன் சொன்ன வெள்ளை விழியில் ஒட்டியது போலப் பொருந்தியிருக்கும். அது கண்ணுக்குள் பிரவேசிக்கிற அதிக கிரணங்களைக் கிரகித்துக் கொள்ளும். அது இல்லாவிட்டால் பார்வை சிதறிப்போகும். அது முன்பக்கத்தில் கிருஷ்ண மண்டலமென்று சிறப்புப் பெயருடைய ஒரு கறுத்தப் பாகத்தால் (ஐரீஸ்) முடிவுறும். அந்தக் கறுத்தப் பாகத்தின் மத்தியில் ஒரு துவார மிருக்கும். அதற்குக் கண் தாரை அல்லது பார்வையென்று பெயர். அந்தத் துவாரம் வெளிச்சத்திற்குத் தக்கபடி சுருங்கவும் விரியவுஞ் செய்யும் மெல்லிய ஓர்வகை நரம்புகளாலானது. இந்தக் கிருஷ்ண மண்டலம் சிலருக்குக் கறுப்பாயும், சிலருக்கு நீலமாயும், சிலருக்கு ஊதாவாயும் இருக்கும். சில பிராணிகளுக்கு இது வட்டமின்றி நீண்டிருக்கும்.

ரூப உற்பத்தி சவ்வு : இதற்கு நேத்திர சித்திரசவ்வு என்றும் பெயருண்டு, இது பார்வை நரம்பின் பரிணாமமேயாகும். இது விழியின் உட்புரை. இது துல்லிய மாயிருக்கும் இதுமுன் கூறிய கிருஷ்ண மண்டலத்தில் ஒட்டியிருக்கும். இது மிக மெல்லிய நரம்புகளின் செறிவாலானது.

கண்ணின் மத்தியில் ஒளியூடுருவுகிற பாகமானது கண்மணி, தெளிந்த நீருக்கொப்பான சலம், பளிங்கு போன்று

ஒளியூடுருவுகிற சலம் என மூன்று பகுப்புகளை யுடையதாகும்.

கண்மணியானது யானைக்குறி போல் இரு பக்கமும் முகிழ்த்த ஓர் படிகம் போன்றது. மச்சங்களின் கண்களில் இது உருண்டையாயிருக்கும். இது கண் பார்வைக்குப் பின்னால் உள்ளது.

தெளிந்த நீருக்கொப்பான சலம் இது முன்சொன்ன கண்மணிக்கும் ஆணிச் சவ்வுக்கும் இடையிட்ட பாகத்தில் நிறைந்திருக்கிறது. அந்தப் பாகம் முன்னறை, பின்னறை, யென இரண்டாய்ப் பிரிக்கப்படும். ஆணிச்சவ்வுக்குங் கிருஷ்ண மண்டலத்துக்கும் கண்மணிக்கும் இடையிட்ட பாகம் பின்னறையாகும்.

பளிங்கு போன்று ஒளியூடுருவுகிற சலமானது வேகாத முட்டையின் வெள்ளைக் கருவைப் போன்ற குழகுழப்பான நீராகும். அது கண்மணிக்கும் வெள்ளை விழிக்கும் இடையிட்ட பாகம் முழுமையும் நிரம்பி ஓர் வித சவ்வினாலான பைக்குள் அடங்கியிருக்கும். அந்தச் சவ்விற்கு "ஹையெலாயிட்மெம்பிரேன்" என்று மேனாட்டார் பெயரிட்டிருக்கிறார்கள். இது விழியின் பிரமாணத்தின் முக்கால் பாகம் நிறைந்து கண்சவ்வுகளை விரிவாக வைத்திருக்கும். இந்த நீர் போய்விட்டால் கண் நொள்ளையாகி விடும்.

இவ்வகையான கண் கோளங்கள் அடங்கியிருக்கும் கண் குழிகளானவை ஏழு எலும்பின் சேர்க்கையாலானவை அவை ஒருமுனை நீண்ட வட்டவடிவம் அதாவது பம்பரம் போன்ற வடிவமுள்ளவை. அவைகளின் அகன்ற பாகத்தில் தான் கண்கோளங்கள் அடங்கியுள்ளன. மற்றப் பாகங்களில் விழியை அசைக்கின்ற தசைகளும் இரத்த நாடிகளும் நேத்திர நரம்பு பரிச நரம்புகளும், கொழுப்பும் அடங்கியிருக்கும். அந்தக் கொழுப்பின் மேல்தான் விழி சுழன்றுக் கொண்டிருப்பது.

புருவங்கள் கண் குவளைகளின் மேலெல்லையில் அதாவது நெற்றியின் கீழ்ப்பாகத்தில் அமைந்த மயிர் வரிசையுடையன வேர்வை முதலிய நீர்கள் நெற்றியிலிருந்து வடிந்து கண்ணிற் பிரவேசிக்காமலும் அதிக வெளிச்சம் படவொட்டாமலும் அவை காக்கின்றன.

கண் நிமைகள் (இரப்பைகள்) கண்களின் மேற்பரப்பில் கண்ணீரைப் பரவச் செய்வதற்கான திரைபோன்றவை. அவற்றின் ஓரங்களில் மயிர் வரிசையுண்டு. அவைகள் கண்ணில் யாதொரு தூசிவிழாமல் காப்பாற்றி நிழலைத்தரு கின்றன.

கண்ணீர்க் கோளமானது கண் குழிக்குமேல் வெளிப் புறமாய் அமைந்திருக்கும் அதற்குக் குழல்களுண்டு. அத்தக் குழல்கள் வழியாகக் கண்ணீரிறங்கி, விழிக்கு ஊர்த்த முகமாகக் கண்சவ்வின் மேல்வடியும். கண்ணீரால் கண் எப் பொழுதும் ஈரமாகவே யிருக்கும் குறைந்தால் வரட்சியும் வேதனையுந்தரும். மூக்குப் பக்கமாய் கண்ணிரப்பை முனை களில் மொக்குள் போன்ற சிறிய பிதுக்கங்களுண்டு. அவை களின் மேல் ஒரு சிறிய துவாரங்காணப்படும். அத்துவாரத் தில் கண்ணீரிறங்கி நாசிக்குடியிற் போய் விழும். கண்ணீ ரானது காரமான சிலவஸ்துக்கள் கண்ணிற் படுவதால் தூண்டப்பட்டு வெளிவரும்; சிலசமயத்தில் நாவிலுள்ள உருசியை அறியுங் கருவிகளாலும் சந்தோஷ மிகுதியாலும் துக்க மிகுதியாலும் அன்பு மிகுதியாலும் தூண்டப்பட்டு வெளிவருவதுண்டு.

இத்தன்மைத்தாகிய கண்ணில் ஆன்மசிற்சத்தி நின்று ரூப விடயங்களைக் கிரகிக்குங் காலத்துக் கண்ணில் ரூபம் அமையும் வகையாவதுக் ஆணிச்சவ்வில் விழுகின்ற பிரகா சத்தின் கதிர்களில் ஒருபகுதி திரும்பி விடுகிறது. மற்றொரு பகுதி கண்ணுள் நுழைகிறது. ஆணிச்சவ்வின் முகிழ்ப்பும் முன்னறையிலுள்ள நீரும் கண்ணுள் நுழையுங் கிரணங் களைக் கண்மணியில் ஓரே புள்ளில் (ஓரேயிடத்தில் என்ற

படி) ஒன்றாய் சேரச் செய்கின்றன. கண்மணி, இரண்டு பக்கங்களும் முகிழ்த்தக் கண்ணாடியைப் போல அந்தக் கதிர்களைக் கொண்டு வஸ்துவின் உருவத்தைத் தலை கீழாய் உண்டு பண்ணுகிறது.

எப்படியெனில்: இருபக்கங்களும் முகிழ்த்த கண்ணாடியில் குறுக்காக நேரேபோகும் வரிக்கும் மத்தியவரி யென்று பெயர். கண்ணாடியில் பட்ட பிரகாசக் கிரணங்கள் ஒன்று கூடுமிடத்துக்கு வரிகள் கூடும் முக்கிய ஸ்தானம் என்று பெயர். நீண்ட வட்டமான ஒவ்வொரு கண்ணாடியிலும் பார்வை மத்தியென்று ஒரு இடமுண்டு. அதன் வழியே யூடுருவிச் செல்லுகிற கதிர்களெல்லாம் கோணாது ஒரே நேராய்ப் போகும். A, என்ற இடத்திலிருந்து ஒரு உருவத்தை உண்டுசெய்ய மத்தியவரிக்குச் சரியாய்ச் சமனகலத்தில் A. L. ஒருகதிர் இழு. அது வளைவினால் F', என்ற முக்கிய ஸ்தானத்துக்குச் செல்லுகிறது. பிறகு A யிலிருந்து O. என்ற பார்வை மத்திய ஸ்தானத்தின் வழியாய்ச் செல்லுவதால் வளைந்து சாயாதல்லவா? XF' கதிரும் A O கதிரும் சந்தித்து A' என்று A படத்தைக் கொடுக்கிறது. இவ்விதமாகவே Bக்கும் L' க்கும் ஒரு கதிரும் Bக்கும் Oக்கும் ஒரு கதிரும் இழுத்து Y,F' ம் B O. சந்திக்கச் செய்தால் B' என்று B படத்தைக்கொடுக்கிறது. இவ்வாறே AB யின் பலவிடங்களிலிருந்து உண்டாகுங் கதிர்களின் சந்திப்பால் A' B' என்றபடம் அமைகிறது. முக்கிய ஸ்தானத்துக்கு வெளியில் வைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவால் அதைவிடச் சிறியதும் தலைகீழானதும் நிச்சயமானதுமான படம் அமைகிறது. அவ்வாறு அமைந்த படத்தை ஆன்மசிற்சத்தி நேராயறிகிறது.

வஸ்துவின் உருவாட் ரூபஉற்பத்தி சவ்வின்மேல் அமைய வேண்டியதா யிருக்கிறது; அதாவது கண்மணியின் ஒரு போதும் மாறாத தூரத்தில் அமைய வேண்டியதாயிருக்கிறது. அது கண்மணியின் செயலினாலேயே ஆகவேண்டியது. கண்மணி தூரத்திலிருக்கும் பொருள்களுக்குத் தட்

டையாகவும், நெருங்கியிருக்கும் பொருள்களுக்கு முகிழ்ப் பாகவும் ஆகிறது கண்ணிற்கு வேண்டிய அளவிற்கே பிரகாசம் கண்ணுள் நுழையவேண்டும். அதிகவெளிச்சம் கண்ணிற்கு வருத்தத்தைக் கொடுத்தும் பார்க்க முடியாமற் செய்கிறது; குறைந்த வெளிச்சம் மயக்கஞ் செய்கிறது. ஐரிஸ் தான் தானது சுருங்கல் விரிதல்களினால் கண்ணிற்கு வேண்டிய அளவிற்குப் பிரகாசத்தை அளவு படுத்துகிறது.

சிலருக்குச் சமீப திருஷ்டியானது கண்மணியின் அதிக முகிழ்ப்பினால் உண்டாகிறது. அப்போது பொருளின் உரு வம் ருப உற்பத்தி சவ்வை அடைவதற்கு முன் அமைந்து விடுகிறது. ஆகையால் உருவம் சரியாய்ப் புலனாகிறதில்லை வேண்டிய தூரத்தில் பார்வை அமைகிறதற்கு, அதற்குத் தக்கபடி உள்வளைந்த கண்ணாடியை உபயோகித்தல் வேண்டும்.

கண்மணிக்குப் போதுமான முகிழ்ப்பில்லாமையால் சிலருக்குத் தூரதிருஷ்டி யுண்டாகிறது. அப்போது பொரு ளின் உருவம் ரூப உற்பத்தி சவ்வைக் கடந்து போகிறது. அதனாலும் உருவம் சரியாய் அமைகிறதில்லை. சரியானபடி பார்வை அமைய அதற்குத்தக்கபடி முகிழ்த்த கண்ணாடியை உபயேகித்தல் வேண்டும்.

## சிங்ஙுவை.

சிங்ஙுவை என்னும் இந்திரியமானது வஸ்துக்களின் உருசியை அறிவிக்கிற கருவியாகும். அதற்கு அவயவம் நான்கு நாக்கானது பலவகையிலும் குறுக்காய் வளர்ந் திருக்கும் தசைகளால் ஏற்பட்டது. நாக்குக்கு அடியில் சவ்வு மடிந்து நீண்டு இருக்கும். அதன் இரண்டு பக்கங் களிலும் உமிழ்நீர்க் கோளங்களுடைய குழல்களின் துவாரங்கள் உண்டு. நாக்கின் மேல் முள்ளுகள் காணப் படும். அவைகளுக்கு நாக்கடு என்று பெயர். அடிநாக்கில் முள்ளுகள் பெரிதாயிருக்கும், உருசியை அறிகிற நரம்புகள்

மூன்று உண்டு. அவைகள் நாக்கு முள்ளுகளிற சென்று முடிந்து விடும். அவைகளின் உதவியினாலேதான் ஆன்ம சிற்சத்தி வஸ்துக்களின் உருசியை அறிகிறது.

## ஆக்கிராணம் :

ஆக்கிராண மென்பது வஸ்துக்களின் வாசனையை நமக்கு அறிவிக்குங் கருவியாகும். அதற்கு நாசி அவயவமாயிருக்கிறது. எலும்பு, முருந்துஎலும்பு, தசைகளால் நாசி பேற்பட்டிருக்கிறது. நாசிக்குள் மத்தியிலிருப்பதற்குத் தண்டு என்று பெயர். அது நாசியை இரண்டு துவாரங்களாகப் பிரிக்கும். ஒவ்வொரு நாசி துவாரத்தில் மூன்று பள்ளங்களுண்டு. கீழ்ப் பள்ளத்தில் நாசித் தாரை வந்து முடிந்திருக்கும். இந்தத் தாரையானது கண்ணிலும் சம்பந்தப்பட்டிருக்கும் ; இதன் வழியாகக் கண்ணீர் நாசியில் இறங்கும். நாசியில் சளியூறுஞ் சவ்வு இருக்கிறது. அதன் மேல்பாகத்தில் வாசனை நரம்புகளின் இழைகள் வியாபித்திருக்கும். அவைகளின் உதவியால் ஆன்ம சிற்சத்தி வாசனையை அறியும்.

இவ்வாறு ஆன்மாகருவிகளுடன் கூடியும் பிரிந்தும் அவத்தைப்பட்டு வரும் அவதாரத்திலே புண்ணிய மேலீட்டினாலே அநாதி பந்தமான மூலமலம் தனது மறைக்குஞ் சத்திதேய்தற்குரிய துணைக்காரணங்களுடன் கூடிப்பாகம் வந்து விடத்துச் சத்தி நிபாதம் நிகழப்பெற்று அதனாலிரு வினையொப்பையடையும்.

சத்திநியாதமாவது:— பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அனுகூலமாய் நின்று நடாத்திய திரோதான சத்தி மலம் பரிபாக மெய்திய வழி அம்மறக் கருணையாகிய செய்கைமாறி அறக்கருணையுமாய் ஆன்மாக்கள் மாட்டுப் பதிதல் இது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்பட்டு ஒரோவொன்று நான்காய்ப் பதினாறு வகையாகு இன்னும் பலதிறப்பட்டு விரியும்.

இனி இருவினை யொப்பாவது ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்பு உவர்ப்பு நிகழ்ந்து விடுவோன தறிவின்கண் அவ்விருவினையும் அவீவாறொப்ப நிகழ்தல்.

இவ்வாறு மலபரிபாகஞ் சத்திநிபாதம் இருவினையொப்புப் பெற்ற ஆன்மாக்கள் அவரவர்கள் மாட்டு நிகழ்ந்த சத்திநிபாதத்துக் கேற்பக் குருவினாலே தீட்சித்து அனுக்கிரகிக்கப் பெற்றுச் சரியை கிரியா யோக ஞானங்களை யனுட்டித்து அவற்றின் பயனாகிய சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுவார்கள்.

திருச்சிற்றம்பலம்

# தத்துவ விளக்கம்

## மூலமும் உரையும்

### செய்யுள் முதற்குறிப் பகராதி


| செய்யுள் எண். | செய்யுள் முதற்குறிப்பு. | பக் எண். |
|---|---|---|
| | **அகாரம்** | |
| *12* | அமையா நிலைமை ... | ... *13* |
| *14* | அறிந்தவர் தீர்ந்த ... | ... *17* |
| | **ஆகாரம்** | |
| *26* | ஆய்ந்தவத் தத்துவம் ... | ... *55* |
| *50* | ஆகுதலாவது ... | ... *103* |
| *40* | ஆங்கவைதன்னில் ... | ... *78* |
| | **இகரம்** | |
| *32* | இயம்புஞ் சுகதுக்கம் ... | ... *64* |
| *35* | இயைந்தவித் தத்துவம் ... | ... *68* |
| *49* | இல்லாதன பிறந்துள்ளன | ... *101* |
| | **உகரம்** | |
| *41* | உன்னிய சொல்லும் ... | ... *87* |
| | **எகரம்** | |
| *4* | எழுமென தாசை ... | ... *5* |
| *18* | எண்ணும் வினைப் பயனால் ... | ... *30* |

| செய்யுள் எண். | செய்யுள் முதற்குறிப்பு. | பக் எண். |
|---|---|---|
| 37 | எண்ணிய புத்தியில் ... | ... 73 |
| 46 | என்றுடன் றேறிய ... | ... 95 |
| 10 | எய்தும் பொருளொன்று ... | ... 12 |
| | **ஒகரம்** | |
| 13 | ஒடுங்கிய பாசத் ... | ... 46 |
| | **ஓகாரம்** | |
| 16 | ஓதியவல்வினை யூட்ட ... | ... 40 |
| | **ககரம்** | |
| 11 | கன்மனந் தன்னை ... | ... 11 |
| 9 | கருமலி பாசம் ... | ... 11 |
| 19 | கதிதரு காழிமன் ... | ... 32 |
| 45 | கவரும் பொருள் ... | ... 93 |
| 48 | களைகண்ணதாம் ... | ... 98 |
| | **கா** | |
| 7 | காரணமாகிய காழி ... | ... 9 |
| 30 | கார்மருவும் பொழில் ... | ... 62 |
| 34 | காணப்படுவன ... | ... 67 |
| | **கூ** | |
| 36 | கூறிய மூலப்பகுதி ... | ... 70 |
| 25 | கூறிய வங்கியும் ... | ... 53 |
| | **கோ** | |
| 38 | கொள்ளு மத்தத்துவம் ... | ... 74 |
| | **சி** | |
| 1 | சித்தத்துவத்தெமக் ... | ... 1 |
| 5 | சிற்கனன் றன்னிகர் ... | ... 7 |

| செய்யுள் எண். | செய்யுள் முதற்குறிப்பு. | பக் எண். |
|---|---|---|
| | **சீ** | |
| 3 | சீரார் கயிலை ... | ... 4 |
| | **தகரம்** | |
| 8 | தனதுயர் தத்தும் ... | ... 10 |
| 13 | தன்மை யொழிக்கும் ... | ... 16 |
| | **தொ** | |
| 44 | தொழிலுறு மாயை ... | ... 92 |
| | **நகரம்** | |
| 6 | நயந்த பிறப்பொடு ... | ... 8 |
| | **நா** | |
| 33 | நாட்டிய மாயையின் ... | ... 66 |
| | **நி** | |
| 31 | நின்று மிறந்து மெதிர்வது ... | ... 63 |
| | **பகரம்** | |
| 16 | பற்றிய சத்தப் பரிசம் ... | ... 28 |
| 39 | பவந்தருமம் மனம் ... | ... 75 |
| 42 | பயில்வுறு சத்தப் பரிசம் ... | ... 88 |
| 51 | பவமேவிய நெறி ... | ... 104 |
| | **பா** | |
| 24 | பான்மையிற் றத்துவம் ... | ... 48 |
| | **பி** | |
| 21 | பிணைந்தவப் பாசம் ... | ... 35 |

| செய்யுள் எண். | செய்யுள் முதற்குறிப்பு. | பக் எண். |
| --- | --- | --- |
| | பு | |
| 47 | புல்லியபாசங்கள் ... | ... 96 |
| | பெ | |
| 17 | பெற்ற தவப்பயனால் ... | ... 29 |
| | பை | |
| 29 | பையரவின் படம் ... | ... 60 |
| | போ | |
| 27 | போற்றும் பரத்தில் ... | ... 56 |
| | மே | |
| 2 | மேறிங் குழியும் ... | ... 3 |
| | வ | |
| 28 | வகுத்த வினைப்பயன் ... | ... 28 |
| 15 | வகுத்தவரிற் புவனாதி ... | ... 20 |
| | வி | |
| 20 | விருத்திகளான ... | ... 33 |
| 43 | விளையுங் குணமென்று ... | ... 90 |

திருச்சிற்றம்பலம்

# சிவபெருமான் சந்நிதானத்தில் திருக்கயிலாய பரம்பரைச் சந்தான குரவருள் முதற் குரவராகிய

# திருநந்திதேவர்

## விண்ணப்பஞ் செய்தருளிய

# பதினாறு பேறு

1) மறைகணிந்தனை சைவநிந்தனை பொறாமனமும்
தறுகணைம்புலன் களுக்கேவன் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனாப் பேதையர்தம் மொடுபிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடுறவும்

2) யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாதவத்தினோ ரொறுப்பினும் வணங்கிடுமகிழ்வும்
ஓதுநல்லுப தேசமெய்யுறுதியும் அன்பர்
தீதுசெய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந்தெளிவும்

3) மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படுசெயலும்
கனவிலு முனதன்பருக கடிமையாங் கருத்தும்
நிலைவில்லேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனிதநின் புகழ்நாடொறுமுரைத்திடும் பொலிவும

4) தீமையாம்புறச் சமயங்களொழித்திடுந் திறனும்
வாய்ம்மையாகவே பிறர்பொருள் விழைவுருவனுறும்
ஏமுறும்பர தாரநச்சிடாத நன்னோன்பும்
தூய்மை நெஞ்சின்யர னெனதெனுஞ்செருக்குரு
துறவும்

## கலிவிருத்தம்

5) துறக்கமீ துறைகினும் நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொ முந்தணிச்சடைபெரு மவிவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்

## கட்டளைக்கலித்துறை

துதிவாணிவீரம் விசயஞ்சந்தானம் துணிவுதனம்
மதிதானியஞ்சவு பாக்கியம் போகமறிவழகு
பதிதாம் பெருமையறங்குல நோயகல் பூண்வயது
புதினாறு பேறுந்தருவாய் மதுரைப்பராபரனே

| | | | |
|---|---|---|---|
| 1 | துதி | 9 | தானியம் |
| 2 | வாணி | 10 | சவுபாக்கியம் |
| 3 | வீரம் | 11 | போகம் |
| 4 | விசாயம் | 12 | அறிவு |
| 5 | சந்தானம் | 13 | அழகு |
| 6 | துணிவு | 14 | பெருமை |
| 7 | தனம் | 15 | அறம் |
| 8 | மதி | 16 | நோய் அகலபூண் |

வயது என்பனவாம்

உ

## மீனாட்சியம்மை துதி

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளசிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுகஎழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்காடு ஏந்துமிள
வஞ்சிக்கொடியே வருகவே !
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே !

## வாழ்த்து.

காழி வருநகர்க் கவுணியர் பெருமான்
கழலிணை பராவிய கருத்தன் உலகினுக்
கிலகிய தத்துவ விளக்கம் பகர்ந்தருள்
வள்ளல் பெருமான் மலர்த்தாள் போற்றி